விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 27 திங்கட்கிழமை (12.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 359

## இளம் பிக்குமார்களின் செயற்பாடுகளால் வருந்தத்தக்க நிலையில் பௌத்தர்கள்!

### மறைக்க முடியாத உண்மை என ஜனாதிபதி கவலை



(கொழும்பு)

சில இளம்பிக்குமார்களின் செயற்பாடுகளால் பௌத்தர்கள் மிகவும் வருத்தத்தக்க நிலைக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பாதிப் பேற்படாதவாறு நாடு முகங்கொடுத்துள்ள சவால்களை வெற்றிகொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் நடைபெற்ற அத்துருகிரிய ஹபரகட ஆர்ய நிகேதன

23ஆம் பக்கம் பார்க்க....

### கடவுச்சீட்டை வழங்க மாமனார் மறுப்பு

## மனமுடைந்த மருமகள் தன் உயிரை மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)


மாமனார் கடவுச்சீட்டை வழங்க மறுத்ததால் மனமுடைந்த மருமகள் தனது உயிரை மாய்த்த சம்பவம் ஒன்று நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் முதலாம் ஒழுங்கையை சேர்ந்த ரஜிகரன் நேர் மிலா (வயது 28) என்ற பெண்ணே மேற்படி சம்பவத்தில் உயிரைமாய்த்தவராவார்.

பெண்ணின் மரண விசாரணையின்போது கிடைத்த தகவல்களின்

23ஆம் பக்கம் பார்க்க....

# முதலில் உரிமை பிறகு தேசியம்




## இல்லையேல் நசுக்கப்படுவோம்-முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மையினருக்கான அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டதன் பின்னரே தேசிய ரீதியான நடவடிக்கைகள் முன்னெக்கப்பட வேண்டும் என தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவ்வாறு இல்லையென்றால் நாங்கள் காலப்போக்கில் பெரும்பான்மை சமூகத்தின் அங்கமாக மாறிவிடுவோம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

04ஆம் பக்கம்

## முல்லையின் மூத்த வயோதியர் 105 வயதில் காலமானார்



(புளிக்கலர்குளம்)

வட்டுவாகல் பகுதியில் வசித்து வந்த முல்லைத்தீவில் அதிகூடிய வயதினை எட்டியிருந்த முதியவர் ஒருவர் நேற்றுக் காலமாகியுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## 'வர்தா' புயல் எச்சரிக்கை

(கொழும்பு)

வர்தா புயல் தாக்கம் காரணமாக இன்றும்நாளையும் வடக்கு கிழக்கு கடற் பிரதேசங்களில் கடலுக்கு செல்வதை கூற்றொழிலாளர்கள்

23ஆம் பக்கம் பார்க்க....

## சட்டவிரோதமாக பொலிஸாருக்கு வாள் செய்து கொடுத்த சம்பவம்

### கைதானவருக்கு மறியல்; பொலிஸுக்கு இடமாற்றம்



(யாழ்ப்பாணம்)

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு சட்டவிரோத ஆயுதங்கள் (வாள்) செய்துகொடுத்த சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(புளிக்கலர் குளம்)

முல்லைத்தீவு மாங்குளம்பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிழவன்குளம் பகுதியில் சட்டவிரோத துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் சந்தேக நபர் ஒருவர் மாங்குளம்

24ஆம் பக்கம் பார்க்க....

## சிங்கள-தமிழ் மக்களின் ஒற்றுமை அவசியமானது

### பேதமின்றி வாழ்வோம் என கூரே உரை

(யாழ்ப்பாணம்)

இன மத பேதங்களை கடந்து ஒவ்வொருவருடைய மனங்களிலும் மனிதம் வளர வேண்டும். அப்போது தான் நாட்டில் நிலைத்திருக்கக் கூடிய சமாதானம் மலரும் என வட மாகாண

23ஆம் பக்கம் பார்க்க....



## வெடிபொருள் வெடிப்பு!

### உழவு இயந்திர சாரதி படுகாயம்



(மல்லாவி)

கிளிநொச்சி பொன்னகர் கிராமத்தில் தோட்டக் காணியினை உழவு இயந்திரம் மூலம் உழவு செய்து கொண்டிருந்த போது திடீரென நிலத்தில் புதைந்திருந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## கல்முனையில் கடல் நீரால் மக்களிடையே பதற்றம்!

### சுனாமி பீதியில் அலறியடித்து ஓட்டம்



23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியை விட விஞ்சும் அதிகாரங்களை கையிலெடுக்க பிரதமர் முயற்சிக்கின்றார்!

### தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்களை விஞ்சும் வகையில் அதிகாரங்களை பிரதமர் தம் வசப்படுத்த முயற்சிப்பதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயந்த சமரவீர இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஜயந்த சமரவீர,

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.. இந்த சட்டமூலத்தின் ஊடாக அனைத்து அரச சேவைகளை

23ஆம் பக்கம் பார்க்க ....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முஸ்லிம்கள் ஒன்றுபடுவதன் மூலம் சதிகளைத் தோற்கடிக்க முடியும்

## கிழக்கு முதலமைச்சர் வலியுறுத்து

(மட்டக்களப்பு)

முஸ்லிம்கள் ஒன்றுபடுவதன் மூலமே அவர்களுக்கெதிரான சதிகளை வெல்ல முடியும் என்பதை நபி அவர்களுடைய போதனைகளின் மூலம் அறியலாம் என கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட் மீலாதுன் தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு முதலமைச்சரின் மீலா துன் நபி தின செய்தியில், உலகுக்கு அமைதியையும் சமாதானத்தையுமே இஸ்லாம் போதிக்கின்றது என்பதை இஸ்லாத்தின வரலாற்றினையும் முஹம்மத் நபீ (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் படித்தவர்கள் அறிந்து கொள்ள முடியும்,

இஸ்லாம் ஒருபோது தீவிர வாதத்தையோ வன்முறையையோ ஆதரிக்கவில்லை என்பதையும் ஒரு பிரச்சினையை எவ்வாறு பொறுமையுடனும் பேச்சுவார்த்தை மூலமும் தீர்க்க வேண்டும் என்பதை நபியவர்களின் அழகிய வழிகாட்டல்களும் செயற்பாடுகளும் எமக்கு உணர்த்தி நிற்கின்றன,

உலகில் எந்த மதத்தை எந்த சிந்தனையை பின்பற்றுவராக இருந்தாலும் நபி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை வாசிப்பதன் ஊடாக பல அரசியல் மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகளில் எவ்வாறான தொரு தீர்வை பெற்றுக் கொள்வது என்பதை எமக்கு உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பதையும் இஸ்லாமிய சன்மார்க்கத்தை பற்றிய உண்மையையும் அறிந்து கொள்ளலாம்.

ஏழை எளியவர்களுக்கு தான தர்மங்கள் செய்வது, சிறுவர்கள் மீது அன்பு காட்டுவது மற்றும் பெரியோரை மதிக்கும் நபி அவர்களின் அழகிய நற்பண்புகள் நம் வாழ்வில் என்றும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இஸ்லாத்தின் ஐம்பெருங் கடமைகளும்



சமூகத்தின் உன்னதத்துக்கான பல்வேறு உண்மைகளை சுமந்து இருக்கின்றன.

உதாரணத்துக்கு ஸகாத் கடமை முறையாக நிறைவேற்றப்படுவதன் ஊடாக பாகுபாடுகள் மற்றும் வறுமையை போக்குவதற்கான பிரதான செயற்பாடாக அமைகின்றது.

இதேவேளை இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களை இலக்கு வைத்தும் முன்னெடுக்கப்படுகின்ற சதித்திட்டங்களை முஸ்லிம்கள் ஒற்றுமையாக ஒரே அணியாக நின்று எதிர் கொள்வதன் மூலமே வெற்றிகொள்ள முடியும் என்பதை முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் போதனைகள் ஊடாக எமக்கு சொல்லித்தரப்பட்டுள்ளது,

எம்மிடையே கருத்து வேறுபாடுகள் மற்றும் முரண்பாடுகள் இருந்தாலும் சமூக ரீதியான பிரச்சினைகளின் போது அதற்கு அனைவரும் ஒன்றிணைந்து முகங்கொடுப்போம்.

நபி அவர்களின் உன்னத வாழ்வின்நெறிகளை உணர்ந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பதன் ஊடாக இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவோமாக என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# 11ஆம் ஆண்டு நினைவுச் சங்கமம்

அமரர் திரு.செல்லையா தம்பித்துரை

(மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை உப தலைவர், கொழும்பு துறைமுக அதிகார சபை அத்தியட்சகர், ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்)

திதி:-சதுர்த்தசி



அப்பாவே எமைப் பிரிந்து
பதினொரு ஆண்டுகளா?
நம்பவே முடியவில்லை
நெஞ்செலாம் உன் நினைவு
முதலியார் தொழிலாலே
வையகம் அறிய வைத்தாய்
நூறாண்டு ஆனாலும்
உன் நினைவாய் வாழ்ந்திடுவோம்

மண் மகிழ-08.06.1931
கண் நெகிழ-14.12.2005

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (6912) -குடும்பத்தினர்.

வாருங்கள்... விடுதலைப் பெருவிழா இலவசம்...
கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி,
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து
இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!
இடம்: நாற்சதுர சுவிசேஷ சபை,
முத்திரைச் சந்தி, நல்லூர்.
இன்று 12 மார்கழி 2016
மாலை 4.00 மணி
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, நல்லூர்.
(6910)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகரத்தினம் சகுந்தலா



மட்டுவிலை பிறப்பிடமாகவும் குமரபுரம் முதலாம் ஒழுங்கையினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் சகுந்தலா அவர்கள் 11.12.2016 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு-தங்கம்மா தம்பதியரின் மருமகளும், கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசம்மா, சண்முகசுந்தரம் மற்றும் கணேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமாரதாசன் (சுகாதாரத் திணைக்களம்), குமாரதங்கம் (ஆசிரியர்), அமரர் குமாரச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயபாலன் (ஆசிரியர்), வானதி ஆகியோரின் மாமியாரும், பூவற்றல், பூந்தமிழ், பூங்குழலி, விசாகை, வல்லை ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.12.2016 இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் பரந்தன் கோரக்கன்கட்டு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:-குடும்பத்தினர்.
(சி-6675) 0775438982

## திருமதி சின்னராசா சரஸ்வதிப்பிள்ளை



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மன்னாரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னராசா சரஸ்வதிப்பிள்ளை அவர்கள் 11.12.2016 நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும்; சின்னராசாவின்(கந்தையா ஸ்ரோர் மன்னார்) அன்பு மனைவியும், மகேந்திரராஜா, மனோன்மணி, செல்வராணி (ஜேர்மனி), புனிதமலர், சிவனேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மீனலோஜினி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சிவதாசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் சிவதாரணி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜலக்ஷி, கீர்த்தனா, மிரோஜன், சசிதரன் (நெதர்லாந்து), சதீசன், பபிதா, சிவதீபன், திவாகரன், செந்தூரன் (ஜேர்மனி), மதுவந்தி (உள்நாட்டு இறைவரித் திணைக்களம்-யாழ்ப்பாணம்), மதுரசன், மதுசந்தர் (மக்கள் வங்கி கிளிநொச்சி); சிவஜனனி, சிவசங்கர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுஜீவன், சஞ்சய், செந்தினி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் உரும்பிராய் கிழக்கு கரந்தன், நீர்வேலியில் நடைபெற்று 12.12.2016 இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு, நடைபெற்று காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சபாநாயகம்-பிரபஞ்சன்
முகவரி:-உரும்பிராய் கிழக்கு,
கரந்தன் நீர்வேலி.
தொ.பே இல:-0770653793
(6908)

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரசியல் அமைப்பு பேரவை வலியுறுத்து



(கொழும்பு)

**பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரசியல் அமைப்பு பேரவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கோரியுள்ளது. ஊழல் விசாரணைகளின் போது சந்தேகநபரை பாதுகாப்பதற்கு பொலிஸ்மா அதிபர் முயற்சிப்பதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் நடைபெற்ற அரசியலமைப்பு பேரவையின் நீண்ட கலந்துரையாடலை தொடர்ந்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

அண்மைக்கால நகர்வுகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அரசியல் அமைப்பு பேரவை எடுத்துரைத்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் பொலிஸ்மா அதிபரின் செயற்பாடுகள் குறித்து தமது கடும் அதிருப்தியையும் அரசியல் அமைப்பு பேரவை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இரத்தினபுரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த போது பொலிஸ்மா அதிபரின் கையடக்க தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்திருந்தது.

இதன்போது சேர் என குறிப்பிட்ட பொலிஸ்மா அதிபர், நிலமே கைதுசெய்யப்பட மாட்டார் என உறுதி வழங்கியிருந்தார்.

நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவின் பணிப்பாளரிடம் தான் கலந்துரையாடுவதாகவும் குறித்த நிலமே கைது செய்யப்படுவது தொடர்பான தீர்மானத்தை தம்மை கலந்தாலோசித்த பின்னரே மேற்கொள்ள வேண்டும் என அவரிடம் கூறுவதாகவும் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டிருந்தார்.

தெவிநுவர விகாரையின் பஸ்நாயக்க நிலமேக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு விசாரணையை முன்னெடுத்து வருவதாக ஏப்.சி.ஐ.டி அதிகாரிகள் தெரிவித்தனர்.

கனிமப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியாக செயற்பட்ட காலத்தில் ஊழலில் ஈடுபட்டதாக குறித்த நிலமேக்கு எதிராக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸ்மா அதிபருக்கு இதற்கு முன்னர் முன்னெச்சரிக்கை வழங்கப்பட்டிருந்ததையும் ஜனாதிபதியுடனான கலந்துரையாட லில அரசியல அமைப்பு பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (இ-3)

## கூட்டு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கோரி கையெழுத்து வேட்டை





கூட்டு ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய கோரி ஐம்பதாயிரம் கையொப்பங்களை திரட்டும் கையெழுத்து வேட்டை சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக நேற்று முன்தினம் நுவரெலியா - ராகலை பகுதியில் கையெழுத்து வேட்டை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

திரட்டப்படவிருக்கும் ஐம்பதாயிரம் கையொப்பங்களும் ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் பிராந்திய பொறுப்பாளர் எஸ்.மோகன்ராஜ் தலைமையில் மேற்படி கையெழுத்து வேட்டை இடம்பெற்றது.

இந்த நடவடிக்கையின் முன்னோடி நடவடிக்கையாக தோட்டங்கள் தோறும் தோட்டத் தொழிலாளர்களின் கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும், இதனை சர்வதேச தொழில் ஸ்தாபனத்திற்கு அழுத்தமாக கொண்டு செல்லும் முகமாகவும், உச்ச நீதிமன்றத்தில் இதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காகவும் இந்த கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

## திறைசேரி முறி தொடர்பில் சட்டமா அதிபர் அறிக்கை

### உண்மைக்குப் புறம்பானது என பிரதமர் அலுவலகம் அறிவிப்பு

திறைசேரி முறி தொடர்பாக சட்டமா அதிபர் அறிக்கை ஒன்றை பிரதமர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

திறைசேரி முறி தொடர்பாக சட்டமா அதிபர் அறிக்கை ஒன்றை பிரதமர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளதாக மவ்பிம பத்திரிகையில் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

இந்நிலையிலேயே குறித்த செய்தியில் எந்தவித உண்மையும் இல்லையெனவும், அந்த செய்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவை எனவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

திறைசேரி முறி விவகாரம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் எந்தவொரு அறிக்கையையும் இதுவரை சமர்ப்பிக்கவில்லையெனவும் பிரதமர் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை பிரதமர் அலுவலக பேச்சாளர் ஒருவர் குறித்த செய்தியை தெரிவித்ததாக மவ்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் பிரதமர் அலுவலகத்தில் ஊடகப் பேச்சாளர் ஒருவர் இன்மையினால் அது ஊடக தர்மத்தை மீறும் செயல் எனவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-3)

## தஜிகிஸ்தான் ஜனாதிபதி இலங்கைக்கு

தஜிகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி எமோமாலி ரஹ்மான் இன்று இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் கருஜெயசூரிய ஆகியோரை எமோமாலி ரஹ்மான் சந்திக்கவுள்ளார்.

குறித்த சந்திப்பின் போது இலங்கை- தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது. கண்டிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள எமோமாலி ரஹ்மான், அன்றைய தினம் இலங்கை வர்த்தக சமூகத்தினரையும் சந்திக்கவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நீதவான் இடமாற்றத்தால் விசாரணைக்குப் பாதிப்பு!

நீதவான் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதனால் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் விசாரணைகள் பூர்த்தியாகும் தறுவாயில் காணப்படுவதாகவும் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். எக்னெலிகொட கடத்தப்பட்டு எங்கு வைக்கப்பட்டிருந்தார் என்பது குறித்த தகவல்கள் அம்பலமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

### நாட்டின் பத்து மாவட்டங்களில் அபாயம்

## இந்த ஆண்டில் 47 ஆயிரத்து 900 பேர் டெங்கு நோயால் பாதிப்பு; 77 பேர் பலி

நாட்டின் 10 மாவட்டங்களின் டெங்கு நோய் பரவும் ஆபத்தான நிலைமை இருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், குருநாகல், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய் பரவும் ஆபத்து காணப்படுகிறது.


இதனடிப்படையில், குறித்த 10 மாவட்டங்களில் 30 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் சுகாதார ஊழியர்களின் விடுமுறைகளை இரத்துச் செய்ய சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கான சுற்றுநிருபம் வெளியிடப்படவுள்ளது.

டெங்கு நுளம்புகள் பரவும்வகையில் சுற்றுச்சூழலை வைத்திருப்போருக்கு எதிராக 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட சுகாதார அமைச்சில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு தொடர்பாக பரிசோதனை நடத்த விசாரணை குழுக்கள் வீடுகளுக்கு செல்லும் போது வீட்டின் உரிமையாளரின் அனுமதியை பெறவேண்டும் என்ற சட்டத்தை இரத்துச் செய்வது எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் இதுவரை 47 ஆயிரத்து 900 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இவர்களில் 77 பேர் மரணித்துள்ளனர். (இ-3)

# இரட்டைச்சதம் குவித்தார் ஹோலி வெற்றியை நெருங்குகிறது இந்தியா



மும்பை டெஸ்டில், இந்தியா வின் வெற்றி வாய்ப்பு பிரகாச மடைந்துள்ளது. இந்திய பந்துவீச் சாளர்கள் ஆதிக்கம் செலுத்த, முன்னணி விக்கெட்டுகளை இழந்த இங்கிலாந்து அணி ஓட்டங் கள் எடுக்க முடியாமல் திணறு கிறது. அணித் தலைவர் விராட் ஹோலி இரட்டை சதம், ஜெயந்த் யாதவ் சதமடித்து கைகொடுக்க, முதல் இன்னிங்சில் இந்திய அணி 631 ஓட்டங்கள் குவித்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங் கேற்கிறது.

முதல் மூன்று டெஸ்ட் போட்டி களின் முடிவில் இந்திய அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் நான் காவது டெஸ்ட், மும்பை வான்கடே மைதானத்தில் கடந்த 8ஆம் திகதி ஆரம்பமானது.

முதல் இன்னிங்சில் இங்கி லாந்து அணி 400 ஓட்டங்கள் எடுத்தது. மூன்றாம் நாள் முடிவில், முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 451 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அணித் தலைவர் ஹோலி (147), ஜெயந்த் யாதவ் (30) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது.

**சுப்பர் ஜோடி**

முதல் இன்னிங்ஸை தொடர ந்த இந்தியாவுக்கு அணித் தலை வர் விராட் ஹோலி, டெஸ்ட் அரங் கில் 3ஆவது முறையாக இரட்டை சதம் அடித்தார். அபாரமாக ஆடிய ஜெயந்த் யாதவ், டெஸ்ட் அரங்கில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். எட்டாவது விக்கெட்டுக்கு 241 ஓட்டங்கள் சேர்த்த போது ஜெயந்த் யாதவ் (104) ஆட்டமிழந் தார். அசத்தலாக ஆடிய ஹோலி 235 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந் தார். புவனேஷ்வர் குமார் 9 ஓட் டங்கள் எடுத்தார்.

முதல் இன்னிங்சில் இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 631 ஓட்டங்களை எடுத் தது. உமேஷ் யாதவ் (7) ஆட்டமிழக் காமல் இருந்தார். இதன்மூலம் இந்திய அணி 231 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித் 4, மொயின் அலி, ஜோ ரூட் தலா 2 விக்கெட்டுக் களை கைப்பற்றினர்.

**ஜடேஜா அசத்தல்**

பன்இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து அணிக்கு முதல் ஓவரிலேயே அதிர்ச்சி காத்திருந்தது. புவனேஷ்வர் குமார் 'வேகத்தில்' ஜென்னிங்ஸ் (0) ஆட்ட மிழந்தார். ஜடேஜா 'சுழலில்' அணித் தலைவர் அலைஸ்ரர் குக் (18), மொயன் அலி (0) சிக்கினர். பொறுப பாக ஆடிய ஜோ ரூட் (77) அரை சதம் கடந்தார். அஷ்வின் பந்தில் ஸ்டோக்ஸ் (18), ஜாக் பால் (2) ஆட்டமிழந்தனர். பேர்ஸ் டோவ் அரைசதம் அடித்தார்.

நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில், 2வது இன் னிங்ஸில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்கள் எடுத்து, 49 ஓட்டங்கள் பின்தங்கி உள்ளது.

பேர்ஸ்டோவ் (50) ஆட்டமிழக் காமல் இருந்தார். பந்துவீச்சில் இந்தியா சார்பில் ஜடேஜா, அஷ் வின் தலா 2 விக்கெட் கைப் பற்றினர்.

போட்டியின் 5ஆவதும் இறுதி யுமான நாளாட்டம் இன்றாகும். (க)

ஐ.எஸ்.எல் கால்பந்து

## முதல் சுற்று அரையிறுதியில் மும்பையை வீழ்த்தியது கொல்கத்தா




ஐ.எஸ்.எல்., காம்பந்து தொட ரின் முதல் சுற்று அரையிறுதி போட்டி யில் அசத்திய கொல்கத்தா அணி 3:2 என்ற கோல் கணக்கில் மும்பை அணியை வீழ்த்தியது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடர் இறுதிக் கட் டத்தை எட்டியுள்ளது. நேற்று முன்தினம் கொல்கத்தாவில் நடந்த முதல் சுற்று அரையிறுதி போட்டி யில் மும்பை, கொல்கத்தா அணி கள் மோதின.

ஆட்டத்தின் 3ஆவது நிமிடத் தில் கொல்கத்தாவின் லால்ரிந்திகா ரால்தே, முதல் கோல் அடித்தார். இதற்கு 10ஆவது நிமிடத்தில் மும்பை அணியின் லியோ கோஸ்டா ஒரு கோல் அடித்து பதிலடி தந்தார். தொடர்ந்து அசத்திய மும்பை அணிக்கு 19ஆவது நிமிடத்தில் ஜெர்சன் ஒரு கோல் அடித்தார். பின் எழுச்சி கண்ட கொல்கத்தா அணிக்கு 39ஆவது நிமிடத்தில் டூட்டி 'பாஸ்' செய்த பந்தை இயான் ஹியும் கோலாக மாற்றினார். 'ஸ்டாப்பேஜ்' நேரத்தில் கொல் கத்தாவுக்கு கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில் இயான் ஹியும் இரண் டாவது கோலடித்தார். முதல் பாதி முடிவில் கொல்கத்தா அணி 3:2 என்ற கோல் கணக்கில் முன்னி லையில் இருந்தது.

இரண்டாவது பாதியின் 74ஆவது நிமிடத்தில், டியாகோ போர்லான், 'ரெட் கார்ட்' பெற்று வெளியேற, மும்பை அணி 10 வீரர்களுடன் விளையாடியது. 'ஸ்டாப்பேஜ்' நேரத்தில் 'ஹட்ரிக்' கோல் அடிக்க கிடைத்த வாய்ப்பை கொல்கத்தா வின் ஹியும் வீணடித்தார். கடைசி நிமிடம் வரை போராடிய இரு அணியினரால் கூடுதலாக கோல் அடிக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் கொல் கத்தா அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இவ் விரு அணிகள் மோதும் இரண்டா வது சுற்று அரையிறுதி போட்டி நாளை மும்பையில் நடக்கிறது. இப்போட்டியை சமன் செய்தாலே கொல்கத்தா அணி இறுதிக்கு முன் னேறிவிடலாம். (க)

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திறப்பு விழா

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் புதிய கட்டடம் எதிர் வரும் 23ஆம் திகதி வெள்ளிக் கிழமை திறக்கப்படவுள்ளது.

1974ஆம் ஆண்டு கச்சதீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், ஒப்பந்தத்தின் பிரகாரம், அந்தோனியார் ஆலயத் திருவிழா வில் கலந்துகொள்வதற்கு இந்திய பிரஜைகளுக்கும் அனுமதியளிக் கப்பட்டது.

உள்நாட்டு யுத்தம் காரணமாக பாதுகாப்பு கருதி நிறுத்தப்பட்டிருந்த கச்சதீவு அந்தோனியார் தேவாலய திருவிழா, 2010ஆம் ஆண்டு முதல் மீண்டும் நடைபெற்று வரு கின்றது.

இந்த நிலையில், தீவில் புதிய ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு, கடந்த 7ஆம் திகதி அதன் திறப்பு விழா நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டி ருந்தன.

தமிழக முதலமைச்சர் ஜெய லலிதாவின் மறைவையொட்டி திகதி குறிப்பிடாமல் தொடர்ந்து திறப்பு விழா ஒத்திவைக்கப்பட்டிருந் தது.

இந்த நிலையிலேயே ஆலயத்தின புதிய கட்டட திறப்பு விழா எதிர் வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்து

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலத்தி அருகில் உள்ள மின் கம்பத் தில் மோதியதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள் ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 9.30 மணியளவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதியில் இடம்பெற்றுள் ளது.

இதில் சாவகச்சேரி கச்சாய் வீதி யைச் சேர்ந்த த. பிரதீபன் (வயது-24) என்ற இளைஞனே படுகாய மடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள் ளார். (செ-89)

## பொலிஸ் காவலிலிருந்து பெண் தப்பியோட்டம்

வவுனியா மாவட்ட பொதுவைத் திய சாலையில் பொலிஸாரால் அனு மதிக்கப்பட்ட பெண் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை வைத்திய சாலை பொலிஸ் காவலிலிருந்து தப்பி ஓடியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் னர் வீதியை மறித்து அமர்ந்தவாறு போக்குவரத்துக்கு இடையூறு ஏற் படுத்திய நிலையில் பொலிஸாரின் விசாரணைகளுக்கும் ஒத்துழைக்க மறுத்த குறித்த பெண்ணை பொலி ஸார் கைது செய்திருந்ததுடன் மருத்துவ பரிசோதனைகளுக்காக வைத்திய சாலையில் நேற்று முன் தினம் சனிக்கிழமை அனுமதித் திருந்தனர்.

இந்நிலையில் குறித்த பெண் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். அப்பெண் எவ்வாறு தப்பிச் சென்றார் என்பது தொடர்பான விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-15)

## முதலில் உரிமை...

சர்வோதய அமைப்பின் நல்லி ணக்க வேலைத்திட்டத்தின் கீழ் நல்லிணக்கம் மீதான வடக்கு கிழக்கு மக்களின் விதந்துரைகள் எதிர்பார்ப்புகள் குறித்த பிரகடன த்தை வெளியிடும் விசேட நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற றது. அந்த நிகழ்வுக்கு முதல மைச்சர் அனுப்பி வைத்த தனது வாழ்த்து உரையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது.

இனரீதியான பிரதிநிதித்துவத் தையும் பிரதேச ரீதியான பிரதி நிதித்துவத்தையும் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன ரீதியாக சிந்திப்பது தவறு என கூறப் பட்டு வந்தது. அவ்வாறான இனரீதி யான சிந்திப்பு இல்லை என்றால் சிறிய இனம் பெரிய இனத்தினுள் சங கமம் ஆகிவிடும் என்பதை நாங் கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இனவாத அடிப்படையை நவி ருங்கள் என்று கூறும் போது பெரும்பான்மை மக்களுக்கு எமது உரித்துக்களை தரைவார்த்து கொடுப்பது போல் ஆகிவிடுகிறது. சிறுபான்மையினரின் உரிமை களை மதித்து அவர்களின் அடிப் படை உரிமைகளை வழங்கிய பின்னரே தேசிய ரீதியில் நடவடிக் கைகளை நாங்கள் முன்னெடுக்க வரவேண்டும். இல்லை என்றால் நாங்கள் பெரும்பான்மை சமூகத் தின் ஒரு அங்கமாக மாறிவிடுவோம்.

டான் யுவான் தர்மபாலா என்ற அரசனுக்கு முடி சூட்டுவதற்காக மதுரையில் இருந்து 400 வருடங் களுக்கு முன்னர் வந்த தமிழர் கள் சிங்கள இடங்களாகிய அம்ப லாங்கொடை, கல்லுட்பிட்டிய போன்ற இடங்களில் குடியேறினார்கள். காலப்போக்கில் அவர்களும் சிங் களவர்களாகவே மாறிவிட்டார் கள். மலைநாடுகளில் இருந்து வேறு இடங்களில் குடியேறியவர் கள் நாங்களை சிங்களவர்களாகவே பெயர் மாற்றி கொண்டார்கள்.

தென்னாபிரிக்காவில் அரசியல் பிணக்குகளை தீர்த்த பின்னரே நல்லிணக்கமுயற்சிகளில் இறங்கி னார்கள். அரசியல்ரீதியான உரிமை களும் அடையாளங்களும் உத்தர வாதப்படுத்தப்பட்ட பின்னரே தேசிய ரீதியில் செயலாற்ற வேண் டும். அதனால்தான் அரசியல் முன்மொழிவுகளை சமஷ்டியாக முன்வைக்கிறோம்.

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் கிராமங்களாகும். தமிழினை சட்டபடி ஏற்றுக் கொண்டால் தமிழ் பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் வாழ்வார்கள். தமிழர்கள் கலா சாரம் வளரும். அவ்வாறு இல்லை என்றால்நாம் பெரும்பான்மை மொழி கலை கலாசாரங்களுக்குள் அமுக் கப்பட்டுவிடுவோம் என்ற அச்சம் கொள்ள தோணுகிறது. அவ்வாறு அமிழ்ந்துவிட வைப்பது இனப் படுகொலைக்கு ஒப்பானது என சட்டம் சொல்கிறது.

எமது இன தனித்துவத்தை வலியுறுத்திக்கொண்டே தேசி யத்தை நோக்கி முன்னேற வேண் டும். சிறுபான்மையினர் தமக்கு அங்கீகாரம் கிடைக்க முன்னர் தேசிய ரீதியாக செயற்பட்டால் அவர் கள் பெரும்பான்மை இனத்துக் குள் இரண்டறக் கலந்து விடுவார் கள். கிறிஸ்துக்கு முன்னரே வடக்கு கிழக்கில் பேசப்பட்டு வந்த தமிழ் மொழியினை கைவிட்டுவிடவேண் டுமா? என நீங்களே சிந்தியுங்கள் என முதலமைச்சர் தனது வாழ்த்து ரையில் தெரிவித்துள்ளார். (செ-11)

## துடுப்பாட்ட, கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

நுணாவலை வல்லியானந்தம் விளையாட்டுக்கழகத்தினால் நடத்த ப்படும் துடுப்பாட்டம், கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று திங்கட் கிழமை ஆரம்பமாகின்றன.

அமரர்களான கணேசமூர்த்தி பார்த்தீபன், சிவலோகநாதன் கேசி கன் ஆகியோரின் நினை வாக நடத்தப்படும் போட்டி கள் இன்று 12.12.2016 ஆரம்பாகி எதிர்வரும் 15.01.2017 வரை நடை பெறும். (சு-60)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை (C-6673)

தொடர்புகளுக்கு

076 312 1476

# அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் கருத்துக்களை சமர்ப்பிக்க சந்தர்ப்பம்

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் பொதுமக்கள் கருத்துக்களை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் காணப்படுவதாக அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் ஆறு உபகுழுக்களினூடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மக்களின் கருத்துக்களை பெறுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாக அறிக்கை மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இதன்படி குறித்த அறிக்கையினை www.constitutional assembly.lk என்னும் இணையத்தளத்தினூடாக பெற்றுக் கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் ஆய்வு மையத் தொடக்க விழா





(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வித்திட்ட ஈழத்தவராகிய தனிநாயகம் அடிகள் ஆய்வு மையம் நேற்று முன்தினம் காலை இல. 125, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள குடும்ப மருத்துவ நிறுவகக் கட்டட மேல் தளத்தில் தொடக்கி வைக்கப்பட்டது.


கனடாவைச் சேர்ந்த பிலிப் அன்ரன் சின்னராசாவின் முயற்சியாலும் நிதிப்பங்களிப்பினாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த மையத்தை யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கலந்து கொண்டார். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் சிறப்புரையாற்றினார்.

ஆய்வு மையத்தை அறிமுகம் செய்து கலாநிதி அ.பி. ஜெசேகரம் அடிகளார் உரையாற்றினார். இந்த ஆய்வு மையத்திற்கான இணைப்பாளர்களாக கலாநிதி அ.பி. ஜெசேகரம் அடிகளாரும் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் அடிகளாரும் செயற்படுகின்றனர்.

அடிகளார் எழுதிய நூல்கள் மற்றும் அவருடன் தொடர்புடைய நூல்கள் யாவும் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழியல் வரலாற்றை விளக்கும் வகையில் காட்சிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-3)

## எயிட்ஸ் விழிப்புணர்வு நாடகம்



(கரணவாய்)

சர்வதேச எயிட்ஸ் ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக தெருவழி நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கடந்த வெள்ளிக்கிழமை மந்திகையில் விழிப்புணர்வு நாடகம் இடம்பெற்றது.

எயிட்ஸ் நோய் தொற்றுவது எவ்வாறு. அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் போதைவஸ்து பாவனையால் ஏற்படும் விளைவுகள். தற்கொலைக்கான தீர்வுகளை சித்திரிக்கும் விதத்தில் இத் தெரு நாடகம் அமைந்திருந்தது. (இ-60)

## தொழில் பட்டறை உபகரணங்கள் வழங்கல்



கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 12 சமுர்த்திப் பயனாளிகளுக்கு தொழில் பட்டறை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ் வில் வைத்தே இவை வழங்கப்பட்டன. தச்சுத் தொழிலினை வாழ்வாதார தொழிலாக கொண்டிருக்கும் 12 சமுர்த்திப் பயனாளிகளுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன. (இ-60)

## ஒளிவிழாவும் பரிசளிப்பும்

உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபையில் முன்பள்ளியின் ஒளிவிழாவும் பரிசளிப்பும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருச் சபையின் திறந்த வெளி அரங்கில் சபைக்குரு ஆர். பி.பிரதீப் குமார் தலைமையில் நடை பெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட. மாகாண சபை உறுப்பினர் சி. அகிலதாஸ் கலந்து கொள்வார். (இ)


## காணி விற்பனைக்கு

A9 வீதி நுணாவில் சந்திக்கு அப்பால் ராசா கடை முன் வீதியில் (150m உள்ளே) 3பரப்பு காணியில் புது வீடும், மட்டுவில் வீதி, துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 14 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

077 873 0129


## இராசி பலன்

12.12.2016

(கார்த்திகை 27, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு

திரயோதசி முற்பகல் 11.46 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 12.06 மணிவரை

சுபநேரம் 12.20-1.50 மணிவரை

இராகுகாலம் 7.50-9.20 மணிவரை

நபிகள் பிறந்த தினம்

திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| கேது செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி, விசாகம்<br>காலை 6.54 மணிக்கு<br>இட-சந் | | |
| சுக் | | | ராகு |
| புத | சூரி சனி | | குரு |

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த திருப்பங்கள் ஏற்படலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**மேடம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுவ கலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிக ஆர்வம் ஏற்படும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், வியாபார விரோதம் விலகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம்.

**கன்னி** பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காண்பீர்கள், திடீர் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு.

# வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் நல்லிணக்க பிரகடனம் வெளியீடு







நல்லிணக்கம் மீதான வடக்கு கிழக்கு மாகாண மக்களின் விதந்துரைகள் ,எதிர்பார்ப்புக்கள் குறித்த பிரகடனத்தை வெளியிடும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

சர்வோதய தலைமையகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக, மதகுருமார், சர்வோதயத்தின் ஸ்தாபகர் ஏ.டி.ஆரியரத்ன, வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சர்வோதய பொதுச் செயலாளர் வின்னிய ஆரியரத்ன, சர்வோதயத்தின் மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் தேசிய நல்லிணக்க செயன்முறை தொடர்பான வடகிழக்குதேசியதேசோதய சபைகளின் முன்மொழிவுகளும் எதிர்பார்ப்புக்கள் அடங்கிய பிரகடனம் விருந்தினர்கள் ஊடாக வெளியிடப்பட்டதுடன், சர்வோதய மாவட்ட இணைப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

(படங்கள்:- பொ.சோபிகா)

# நிலையான சமாதானத்தை அரசால் ஏற்படுத்த முடியாது



## மக்களால் மட்டுமே அது முடியும் சர்வோதய ஸ்தாபகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**அரசினால் நாட்டில் நிலையான சமாதானத்தை கொண்டு வர முடியாது. மக்கள் சக்தி இணைந்தால் மாத்திரமே சமாதானத்தை பெற முடியும் என சர்வோதய ஸ்தாபகர் ஏ.டி. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.**

நல்லிணக்கம் மீதான வடக்கு- கிழக்கு மாகாண மக்களின் விதந்துரைகள் , எதிர்பார்ப்புக்கள் குறித்த பிரகடனத்தை வெளியிடும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அதே போன்றே மக்களுக்கு சேவை செய்து கொண்டு இருக்கும் போது இறப்பதும் பாக்கியம் என நினைக்கிறேன்.

இந்த நாட்டில் மீண்டும் யுத்தம்தேவையா? என கேள்வி எழுப்பினால் அதிகமானவர்கள் யுத்தத்தை விரும்பவில்லை என்றே கூறுவார்கள். யுத்தம்இன்றி வாழ என்னா கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் எனில் அஹிம்சையை கடைப்பிடிக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் குடும்ப ரீதியில் சமுதாய ரீதியில், இன ரீதியில் ஒன்றாக வாழக்கூடிய நுழ்நிலையை உருவாக்க வேண்டும். அஹிம்சை ரீதியிலான போராட்டங் களை முன்னெடுக்கும் போது யாருடைய உதவியும் தேவையில்லை. அஹிம்சை வழியில் செல்பவர்கள் அன்பை நிலை நிறுத்திக்கொள்கிறார்கள்.

எமது மனங்களில் இரக்கம் இருக்க வேண்டும். அப்போதுதான் பணியை செய்ய முடியும். மனித உயிர் மட்டும் அல்ல அனைத்து உயிரையும் மதிக்க பழக வேண்டும்.

ஒரு தலைவர் அல்லது ஒரு நபர் சித்திரவதையை அல்லது பிழையை மனதில் வைத்துக்கொண்டு ஒரு பிரச்சினையை தீர்த்துக்கொள்ள நினைத்தால் அவரின் குற்ற உணர்வின் மூலம் தான் அதை சரிசெய்ய முடியும். குற்ற உணர்வு மனதில் எழ வேண்டும். பிழையை உணர்ந்து கொள்ள வேண்டும் அப்போது தான் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முடியும். இம்சை இல்லாமல் அஹிம்சை ரீதியில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அனைத்து மக்களும் முன்வர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு ஆகும்

இந்த நாட்டின் அரசாங்கத்தின் மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என சிலர் நினைக்கிறார்கள். சமாதானம் ஏற்படுத்துவது போன்று தோன்றும். ஆனால் ஏற்படுத்த முடியாது. அரச சக்தி, நிறைவேற்று அதிகாரம், நிர்வாக அதிகாரத்தின் மூலம் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது.

தர்ம சக்தியும் மக்கள் சக்தி ஒன்றிணைத்தால் மாத்திரமே நாட்டில் எந்த நேரத்திலும் சமாதானத்தை கொண்டுவர முடியும். அதே போன்று அரசையும் எம்பக்கம் இணைத்து கொள்ள முடியும்

மக்கள் சக்தி முக்கியம் என்பது மிக முக்கியம். அதை அனைவரும் நம்ப வேண்டும். அஹிம்சை ரீதியில் எமது உரிமைகளை பெறுவதற்கு முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கவிஞர் இன்குலாப் நினைவேந்தல்



ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், ஈழத் தமிழர்களின் ஆதரவுக் குரலாகவும் ஒலித்து வந்த தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் இன்குலாப் கடந்த முதலாம் திகதி இயற்கை எய்தினார்.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்காகத் தன் இறுதி மூச்சு வரையிலும் ஒரு கவிதைப் போராளியாகவும் களப்போராளியாகவும் பணியாற்றி வந்த அவருக்கான நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தின் நடைபெறும். (இ-3)

# வடக்கு விவசாய அமைச்சின் காளான் வளர்ப்புக் கருத்தமர்வு





வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் காளான் வளர்ப்பு தொடர்பான கருத்தமர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

காளான் வளர்ப்பின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் நோக்கில் அமைந்த இக்கருத்தமர்வு வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில், கோண்டாவிலில் அமைந்துள்ள சேவாலங்கா மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் காளான் செய்கையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். காளான் பீடைகொல்லிகள் பயன்படுத்தாமல் விளையும் நஞ்சற்ற ஒரு உணவு. போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் குடிசைத் தொழிலாகக் குறைந்த முதலீட்டுடன் மேற்கொள்ளக்கூடிய ஒரு வாழ்வாதாரத் தொழிலாகவும் உள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு வடக்கு விவசாய அமைச்சு காளான் செய்கையை ஊக்குவித்து வருகிறது. பயனாளிகளைத் தெரிவு செய்து ஐம்பது வீத மானிய அடிப்படையில் காளான் வளர்ப்புக்கான குடில்கள், உபகரணங்கள் வழங்குவதோடு பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. (இ-3)

# பனை அபிவிருத்திச் சபை
# PALMYRAH DEVELOPMENT BOARD

## VACANCY ANNOUNCEMENT

Applications are invited from citizens of the Democratic Socialist Republic of Sri Lanka for the following post of Palmyrah Development Board.

Employee Category: **Manager- Production**

Qualifications:

**External**

Educational: A bachelor's degree in the field of Science/ Food & Technology/ Nutrition from a university recognized by the U.G.C. with at least three years post qualifying experience in a relevant field in a Corporation, Board or a reputed Mercantile Establishment.

**Internal:** Minimum of five (5) years satisfactory service in a post in the Junior Manager Catefory Grade-1, in the subject area relevant to the post.

**Age:** Should not be less than 22 years and not more than 45 years. The upper age limit will not be applied to to the internal candidates.

**Salary Scale relevant to the post:**

MM1-1-2016 Rs.(53,175-10x1375-15x1910-95,575) as per the Management Circular 02/2016. Salary step specified for as at 01.01.2016 of the salary scale: Rs.31,147/= and approved allowances.

Self prepared applications marked **"Post of Manager- Production"** on the top left- hand corner of the envelope should be sent by Registerd Post, addressed to the Chairman, Palmyrah Development Board, N.H.D.A. Building, 1st Floor, Kandy Road, Jaffna to be received on or before 26th December, 2016. Late applications will not be considered.

Applications from officers in Government Departments/ Corporations/ Statutory Boards should be forwarded through their Head of the Department. A copy may be sent directly.

**10.12.2016**

**Chairman**
**Palmyrah Development Board**

## பனை அபிவிருத்திச் சபை, தலைமையகம் யாழ்ப்பாணம் வழங்குநர்களை பதிவு செய்தல்-2017

சபையின் வேலைத்திட்டங்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (காலை 09 மணியிலிருந்து மாலை 04 மணிவரை)

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 30.12.2016 இற்கு முன் கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் (9"x4") இடது பக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2017 எனக் குறிப்பிட்டு தலைவர், பனை அபிவிருத்திச் சபை தலைமையலுவலகம், தேசிய வீடமைப்புச் செயலகம், 01ம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக கையளிப்பதாயின் சபையின் தலைமையலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ரூபா 1000/- இனை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக சபையின் தலைமையகத்தில் காசாளரிடம் வைப்புச் செய்யலாம் அல்லது சபையின் கணக்கு இலக்கம் 1093004 இலங்கை வங்கி கிளை, யாழ்ப்பாணம் எனும் வங்கி கணக்கில் வைப்பிலிடலாம். பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை (பொது 172) விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இவ்வாறு இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**வழங்கும் சேவைகள் விபரம் வருமாறு**

01. கட்டட நிர்மாண வேலைகள்
02. நிலமும் கட்டடமும் பராமரிப்பு வேலைகள்
03. கட்டட மூலப் பொருட்கள்
04. வாகனம் தொடர்பான சேவைகள்
05. நுகர்வுப் பொருட்கள்
06. இலத்திரனியற் பொருட்கள்
07. மின்னியல் பொருட்கள்
08. துணி வகைகள்
09. காகிதாதிகள் எழுது பொருட்கள்
10. உணவு வகை
11. தளபாடங்கள்
12. ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
13. பனைசார் கைப்பணிக்கான உபகரணங்கள்
14. பனைசார் உணவு உற்பத்திக்கான இயந்திர உபகரணங்கள்
15. அச்சுப்பதிப்பு மற்றும் பதாதைகள்
16. பாதுகாப்பு/சுத்திகரிப்பு சேவை
17. உள்ளக தொலைபேசி இணைப்பு
18. ஏனையவை

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

(இ-6606)

# தமிழ் மக்கள் தமது தலைவர்களுக்கு எதிராக போராடும் ஆண்டாக 2017

## சிவகரன் சுட்டிக்காட்டு

தமிழ் மக்கள் தமது தலைவர்களுக்கு எதிராகவே ஜனநாயக ரீதியில் போராடும் ஆண்டாக எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு அமையும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனின் ஏற்பாட்டில் சர்வதேச மனிதவுரிமை தினம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு தற்போதைய அரசினால் வழங்கப்பட்ட தேர்தல் கால வாக்குறுதிகள் ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் நிறைவேற்றப்படாது எனவும், தமிழ்த் தலைமைகள் நிபந்தனையுடன் தேர்தலில் ஆதரிக்க வேண்டும் என நாம் தேர்தலுக்கு முன்னரே கூறியிருந்தோம்.

ஆனால் தமிழ்த் தலைமைகள் அவற்றை கேட்காமல் நிபந்தனை அற்ற ஆதரவை தேர்தலில் வழங்கியிருந்தார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் வாய்மூலம் வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. இப்போது புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு வரும் நிலையில் அதற்கும் நிபந்தனைகளை, தமது கோரிக்கைகளை முன்வைக்காமல் அரசோடு இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இந்த சந்தர்ப்பம் தான் இறுதி சந்தர்ப்பம் என கூறுகின்றார்கள். இந்த சந்தர்ப்பம் இறுதி சந்தர்ப்பம் அல்ல. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு முன்னரும் பின்னரும் நேர்மையான தலைவர்கள் எவரும் தமிழ் மக்களுக்கு வாய்க்கவில்லை. அவ்வாறான நேர்மையான தலைவர்கள் தமிழர்களுக்கு வாய்க்கப்பெற்றால் தமிழர்களுக்கான தீர்வு நிச்சயமாக கிடைக்கும். எனவே இந்த சந்தர்ப்பம் தான் இறுதி சந்தர்ப்பம் என கூறுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

புதிய அரசியலமைப்பில் சமஷ்டி உண்டு. வடக்கு-கிழக்கு இந்த அரசியலமைப்புக்கு பின்னர் இணைத்து கொள்ளலாம் என்றெல்லாம் சட்டத்தரணி சுமந்திரன் பச்சை பொய் கூறி வருகின்றார். தமிழர்களுக்கான இரண்டாவது முள்ளிவாய்க்காலாக தான் புதிய அரசியலமைப்பு உள்ளது. இப்போது மகிந்த எதிர்க்கின்றார், ஆர்ப்பாட்டம் செய்கின்றார் என தென்னிலங்கை அரசு கூறத்தான் போகின்றது. அதனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஏற்றுக்கொள்ள தான் போகின்றார்.

அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் தமக்கு ஆதரவாக உள்ளதாகவும் தமிழ் மக்களுக்கு கூறி புதிய அரசியல் சாசனத்திற்கு தமிழர்களின் ஆதரவினை பெற்றுக்கொடுக்க போகின்றார்கள் தான். ஆனால் தமிழ் மக்கள் ஒருபோதும் தொடர்ச்சியாக பொறுமையாக இருக்க மாட்டார்கள். காலம் தனக்கு தேவையானவர்களை தான் கட்டுமரத்தில் ஏற்றி பயணிக்கும். தேவையற்றவர்களை கறிவேப்பிலை போன்று தூக்கி எறிந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)


## காணி தேவை

K.K.S., பலாலி வயாவிளான் ஒட்டகப்புலம், குரும்பசிட்டி போன்ற இடங்களில் 25-100 பரப்புக் காணி தேவை.

தொடர்புக்கு:-
077 480 1734 (6902)



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:20
உயரம்: 5'8" தகைமை/
தொழில்: QS சிங்கப்பூர்
தொ.இ: B/6102

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 21 செவ் 1 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BA, MA
அரசதொழில்
தொ.இ: B/3023

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 65 செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: PHD/
ஆராட்சியாளர்
தொ.இ: B/3029

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 52 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA/
அரசதொழில்
தொ.இ: B/3060

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16 செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.COM/
அரசதொழில்
தொ.இ: G/2863

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 57 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSMS
தொ.இ: G/2868

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:32
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/2881

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 49
உயரம்: 5'1" தகைமை/
தொழில்: B.COM/அரசதொழில்
தொ.இ: G/2887

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5484
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# மாற்றாற்றல் கொண்டோருக்கான திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவிப்பு

மாற்றாற்றல் கொண்டவர்களை சமூகத்தில் அந்தஸ்து உள்ள பிரஜைகளாக மாற்றி அவர்களை முன்னேற்ற அனைவரும் முன்வர வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மாற்றாற்றல் கொண்டோர் தினத்தையொட்டி மன்னார் நகர சபை மண்டபத்தில் மன்னார் மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வு சங்கத்தினால் கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சர்வதேச மாற்றாற்றல் கொண்டோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,

மாற்றாற்றல் கொண்டவர்கள் தொடர்பில் அவர்களை அணுகும் முறை, அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டிய சமூக உதவித்திட்டங்கள் வடக்கில் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையை காணக்கூடியதாக உள்ளது.

மாற்றாற்றல் கொண்டவர்களுக்காக பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதும் அவை அமுல்படுத்தப்படவில்லை.

அவர்களை சமூகத்தில் அந்தஸ்துள்ள ஓர் பிரஜையாக மாற்றி அவர்களின் தேவைகளை அவர்களே பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நாங்கள் அவர்களை மாற்றி அமைக்க வேண்டும்.

அவர்களின் முன்னேற்றத்திற்கான பாதையை நாம் வழிவகுத்துக்கொடுக்க வேண்டும்.


எவ்வித பிரிவுகளும் இன்றி அவர்கள் அனைவரும் சம அந்தஸ்துடன் வாழ வேண்டும் என அவர் தெரிவித்தார். (2-9)

# தர்மபுரம் 8 ஆம் யூனிட் காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்குட்பட்ட தர்மபுரம் பொலிஸ் பிரிவிலுள்ள தர்மபுரம் 8 ஆம் யூனிட் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று சுற்றி வளைக்கப்பட்டு கசிப்பு காய்ச்சிய நிலையில் இரண்டு பரல்கள் உள்ளடங்கிய 420 லீற்றர் கசிப்பும் 10 பரல்கள் உள்ளடங்கியதாக ஆயிரத்து 200 லீற்றர் கசிப்பு கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகாரணங்களுடன் சம்பவ இடத்தில் வைத்து இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கசிப்பு உற்பத்தி நிலையமும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.



இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தர்மபுரம் பொலிஸ் நிலையத்தின் 011 308 1040 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு பெண்ணொருவர் வழங்கிய இரகசிய தகவலையடுத்து தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம். டி.என். சதுரங்க தலைமையில் விரைந்த பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போதே கசிப்பு உற்பத்தி நிலையம் நிர்மூலமாக்கப்பட்டு தடயப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டனர்.

இச் சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் இதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் தடயப் பொருட்களைப் பாரப்படுத்துவதுடன் சந்தேக நபர்களையும் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தர்மபுரம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

# கிளிநொச்சி பொதுச் சந்தையில்

# மரக்கறிப் பகுதியை குத்தகைக்கு எடுத்தவரின் வியாபாரம் உறுதிப்படுத்தப்பட்டால் ஒப்பந்தம் ரத்து

## கரைச்சி பிரதேசசபை செயலாளர் உறுதி

கிளிநொச்சி பொதுச் சந்தையில் மரக்கறி பகுதியை குத்தகைக்கு எடுத்தவரின் வியாபார நடவடிக்கையால் தாங்கள் பெரிதும் பாதிப்படுவதாக மரக்கறி வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச் சந்தையில் மரக்கறி பகுதியை குத்தகைக்கு பெற்ற தனிநபர் ஒருவர் வரி அறவிடும் பகுதியில் வைத்து காலை முதல் மாலை வரை மொத்த மற்றும் சில்லறை வியாபாரத்தில் ஈடுப்படுவதனால் தங்களின் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தை வியாபாரிகள் கூறுகின்றனர்.

குறித்த நபர் ஒரு மொத்த வியாபாரி என்பதனால் சந்தை மரக்கறி வியாபாரிகளுக்கும் பொருட்களை மொத்தமாக விற்பனை செய்து வருகின்றார்.

அதேவேளை சந்தைக்கு மரக்கறிகளை கொள்வனவு செய்ய வருகின்ற வெளி மாவட்டத்தின் வியாபாரிகளுக்கும் அவரே மரக்கறிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்கின்றார். இதனால் தங்களிடம் பலர் மரக்கறிகளை கொள்வனவு செய்ய வருவதில்லை எனவும் சந்தை வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் க.கம்சநாதனை தொடர்பு கொண்டு வினவிய போது,

சந்தையை குத்தகைக்கு எடுத்தவர் அங்கு குத்தகை பணம் மற்றும் வரி அறவீடுகளை மேற்கொள்ளவதற்கே அனுமதியும் ஒப்பந்தமும் வழங்கப்பட்டுள்ளது. அவர் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியாது. இது தொடர்பில் வியாபாரிகளாலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபையும் இந்த விடயம் தொடர்பில் ஆதாரங்களை தேடிக் கொண்டிருக்கிறது. எனவே இந்த விடயம் உறுதிப்படுத்தப்படும் போது அவரது நடவடிக்கை உடனடியாக தடை செய்யப்படுவதோடு ஒப்பந்தமும் இரத்துச் செய்யப்படும் எனவும் தெரிவித்தார். (2-15)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாக 3 பாடசாலைகளுக்கு நிதியொதுக்கீடு

(முல்லைத்தீவு)

2017ஆம் ஆண்டுக்கான தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஊடாக மூன்று பாடசாலைகளுக்கு தலா ஒன்றரை இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை சிறப்பிக்கும் நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட ரவிகரன் அந்நிகழ்வின் நிறைவில் பாடசாலையின் குறைகளை இனங்கண்டு குறித்த பாடசாலைகளுக்கான தனது ஒதுக்கீட்டை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பாடசாலையின் குறைகளை கேட்டறிந்த வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் கோம்பாவில் விக்னேசுவரா வித்தியாலயத்திற்கும் முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கும் அளம்பில் றோ.க.தமிழ் வித்தியாலயத்திற்கும் தலா ஒன்றரை இலட்சம் ரூபாய் வீதம் மொத்தமாக நான்கரை இலட்சம் ரூபாவை பாடசாலையின் வளர்ச்சிக்கென ஒதுக்குவதாக தெரிவித்தார்.

குறித்த ஒதுக்கீடுகளானவை தனது 2017ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் ஊடாக பாடசாலையின் வளர்ச்சிக்காக வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (2)




## கிளிநொச்சியில்

# சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று அனுஷ்டிப்பு

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2016 இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் கி.சின்னராசா தலைமையில் நடைபெறும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்போம் எனும் தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (2-277)



கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 54 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 260 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்றுக்காலை 9 மணியளவில் முல்லைத்தீவு தமிழ்த்தாய் கல்வி நிலையத்தில் நடைபெற்ற போது...

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## 5 இலட்சம் ரூபா நிதி அன்பளிப்பில்

# பளை பிரதேச வைத்தியசாலைக்கு ஆண்கள் நோயாளர் விடுதி அமைப்பு



(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தி லுள்ள பளை நகர்ப் பகுதியி லுள்ள பளைப் பிரதேச வைத் தியசாலைக்கு பளை பிரதே சத்தைச் சேர்ந்த லண்டன் வாழ் மக்களின் நிதி அனுசர ணையுடன் பச்சிலைப் பள்ளி அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக 5 இலட்சம் ரூபா நிதி அன்பளிப்பில் ஆண்கள் நோயாளர் விடுதி அமைக்கப் பட்டுள்ளது.

இவ் உதவியானது பிரதேச மக்களுக்குபெரும் நன்மை பயக்கும் என பளை பிரதேச மக்கள், பளை பிரதேசவைத்தி யசாலை நிர்வாகத்தினர் ஆகி யோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இடப் பெயர்வின் பின்னர் மக்கள் மீள்குடியேறியுள்ள நிலையில்பளைபிரதேசவைத் தியசாலையானது 167.7 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ள பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 28 கிராமங்களைச் சேர்ந்த மக் களுக்கு வைத்திய சேவையை வழங்கி வருகின்றது.

அத்துடன் குறித்த வைத் தியசாலைஏ-9வீதியில்அமைந் துள்ளதால் ஆனையிறவு தொடக்கம் மிருசுவில் வரையி லான வீதியில் இடம்பெறும் வாகன விபத்துகளுக்குட்படு பவர்கள் இவ் வைத்திய சாலைக்கு கொண்டு வரப் பட்டு ஆரம்ப சிகிச்சைகளுக் குட்படுத்தப்பட்ட பின்னர் மேல திக சிகிச்சைகளுக்காக யாழ்ப் பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் குறித்த வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதியும் பெண் கள்,சிறுவர்களுக்கானஇணைந்த விடுதி ஆகியன மட்டுமே இயங்கி வந்த நிலையில் ஆண் நோயாளர்களுக்கான விடுதி அமையப்பெறாது இருந் தது.

இதனைக்கருத்தில்கொண்ட வைத்தியசாலை நிர்வாகம் லண்டன் வாழ் பளை பிரதேச மக்களுக்கு விடுத்த வேண்டு கோளை ஏற்றுக்கொண்டு உதவியதன் ஊடாக ஆண்கள் விடுதி அமைக்கப்பட்டு செயற் பட்டு வருகின்றது என தெரி விக்கப்படுகின்றது. (2-15)




## அன்புக்கும் நட்புக்குமான அமைப்பின் ஏற்பாட்டில்

# நடைபெற்ற அமைதி ஊர்வலத்தில் புலனாய்வாளர்கள் தலையீடு



(குருமன்காடு)

வவுனியாவில் அமைதி ஊர்வலம்நடத்திய இளைஞர், யுவதிகளுக்கும் புலனாய்வா ளர்களுக்கும் இடையில்நேற்று முன்தினம் ஒரு மணியள வில் முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டது. பொலிஸார் தலை யிட்டு குறித்த முறுகலை தீர்த்து வைத்தனர்.

அன்புக்கும் நட்புக்குமான அமைப்பின் ஏற்பாட்டில் வவு னியாவில் பாரபட்சமற்ற சமூ கத்தை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. இதன் போது குறித்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளை புலனாய்வுத் துறையினர் புகைப்படம் எடுத் தனர். இதனையடுத்து ஏன் எம்மை புகைப்படம் எடுக் கிறீர்கள் என அவர்களுடன் இளைஞர்கள் சிலர் முரண் பட்டுக் கொண்டனர்.

இந்நிலையில் அவ்வமைப் பின் இயக்குநர் ரவீந்திர டி சில்வா புகைப்படம் எடுத்த ஒருவரை அழைத்து ஏன் புகைப்படம் எடுக்கிறீர்கள் என வினவிய போது அவ ரும் அவருடன் தர்க்கித்துக் கொண்டார். இதனையடுத்து அங்கு கடமையில் இருந்த பொலிஸாரிடம் குறித்த விட யம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் அப்பிரச்சினையை சமரசம் செய்து வைத்ததுடன் இது தொடர்பில் வவுனியா பொலிஸ நிலையத்தில் முறைப்பாட்டை செய்யுமாறும் கூறியிருந்த னர்.

இது தொடர்பில் ஊடகங் களிடம் கருத்து தெரிவித்த அவ் அமைப்பினர் இயக்குநர் ரவீந்திர டி சில்வா, இந்த நிகழ்வை நடத்துவதில் நாம் பல இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ளோம். கடந்த காலத்தைப் போல் இன்றும் புலனாய்வாளர்களின் அச்சு றுத்தல் தொடர்கிறது.

வவுனியா பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியும் எம்மை ஆர்ப்பாட்டம் செய்ய வேண டாம், பெரியளவில் கோசம் எழுப்பகூடாதுஎனவும்அமைதி யாக ஊர்வலம் நடத்துமாறும் கூறியிருந்தார்.

ஆட்சி மாறி நல்லாட்சி எனக் கூறுகின்ற போதும் புலனாய்வாளர்களின் அச் சுறுத்தல் குறையவில்லை எனத் தெரிவித்தார். (2-250)

# சுயநிர்ணய உரிமையை உறுதி செய்; வலியுறுத்தி வவுனியாவில் பேரணி

சர்வதேச மனித உரிமை கள் தினம் நேற்று முன் தினம் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிலையில், 'தமிழ் மக்களின் கூட்டு உரிமை யையும், அரசியல் உரிமை யையும், சுயநிர்ணய உரிமை யையும் ஏற்றுக்கொள்வதை உறுதிசெய்' என்று வலியு றுத்தி வவுனியா மாவட்டத் தில் கவனயீர்ப்பு பேரணி நடத்தப்பட்டது.

தமிழர் தாயகத்தில் கைய ளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவு களை தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் பொருளாளர் திருமதி ஜெய வனிதா காசிப்பிள்ளை தலை மையில், வவுனியா கந்த சுவாமி ஆலய முற்றத்திலி ருந்து நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு தொடங் கிய குறித்த பேரணி, வவு னியா நகர் பஸார் வீதியூடாக மில் வீதியை அடைந்து அங் கிருந்து சூசைப்பிள்ளையார் குளம் வீதி சுவர்க்கா விருந்தி னர்மண்டபத்தை சென்றடைந்தது.

தொடர்ந்து மண்டப நிகழ்ச்சிகள் சங்கத்தின் தலைவர் திருமதி ஆஷா நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

பேரணியில்கலந்துகொண்ட சங்கத்தின் உறுப்பினர்க ளின் பங்களிப்போடு, மூன்று தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் சமகால பிரச்சி னைகள் தொடர்பில் தெளிவு படுத்தி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு மகஜர் அனுப்புதல்,

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பில் தங்க ளது நிலைப்பாடுகளை அரசை யும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பையும் தெளிவுபடுத்து மாறு வலியுறுத்தி, நடப்பாண் டின் இறுதியில் டிசெம்பர் 30 இல் அடையாள உணவு தவிர்ப்பு நிகழ்ச்சியை முன் னெடுத்தல்,

குறித்த அடையாள உணவு தவிர்ப்பு நிகழ்ச்சியில், தாங் கள் வலியுறுத்தும் கோரிக்கை களுக்கு காத்திரமான தீர்வு களை அடுத்த ஆண்டில் தைப்பொங்கலுக்கு முன்னர் தெரியப்படுத்தாவிடின் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை தொடருதல் ஆகிய தீர்மா னங்களே நிறைவேற்றப் பட்டன. (2-250)

# இனந்தெரியாத விசமிகளால் அந்தோனியார் சிலை உடைப்பு



வவுனியா, ஜோசப் வாஸ்வீதியில்உள்ள அந் தோனியார் சிலை நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு விசமிகளால் உடைத்து சேதப் படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா, ஹொற வப் பொத்தானை வீதியில் இறம்பைக் குளம் ஜோசப் வாஸ வீதி அமைந்துள் ளது. இந்த வீதியின் ஆரம்ப இடத்தில் பிரதான வீதிக்கு அண்மித்ததாக அந்தோனியர் சிலை வைக்கப்பட்டிருந்தது. இச்சிலையே இனந்தெரியாத விசமிகளால் உடைத்து சேதப்படுத்தப் பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். (2-15-250)

# 'பாரபட்சமற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்' வவுனியாவில் இளைஞர், யுவதிகள் ஒன்றுகூடல்



மனிதஉரிமைகள்தினத்தை முன்னிட்டு "பாரபட்சமற்ற சமூகத்தை கட்டியெழுப்பு வோம்" என்னும் தொனிப் பொருளில் வவுனியாவில் இளைஞர், யுவதிகள் ஒன்று கூடியுள்ளனர்.

அன்புக்கும், நட்புக்குமான வலையமைப்பின் ஏற்பாட் டில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத் தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பாரபட்சமற்ற சமூகத்தை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் வடக் கின் ஐந்து மாவட்டங்களி லும் நடைபெற்று வரும் நிகழ வின் ஒரு கட்டமாக அண்மை யில் வவுனியாவில் மூன்று இனங்களையும் சேர்ந்த இளைஞர், யுவதிகள் ஒன்று கூடி பாரபட்சமற்ற சமூகத்தை கட்டியெழுப்புவோம் என உறுதி யெடுத்துக் கொண்டனர்.

இதேவேளை, குறித்த நிகழ்வு தெற்கு மற்றும் கிழக்குப் பகுதியை நோக்கி நகர இருக்கின்றமை குறிப் பிடத்தக்கது. (2-250)

# இலவச யோகா வகுப்புக்கள்

Amateur yoga Association ஏற்பாட்டில் இலவச யோகா வகுப்புகள் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 5 மணிக்கு கிளிநொச்சி ஏ-9 வீதி, அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் இரு பாலாரும் கலந்து கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு 076 850 6544 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-254)

# துணுக்காய் கல்வி வலய வாரிய அங்குரார்ப்பணம்

(குருமன்காடு)

துணுக்காய் வலயக் கல்வி வாரிய அங்குரார்ப் பண நிகழ்வு நேற்று முன் தினம் காலை 9 மணிக்கு துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் சிறப்புற இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜி னோல்ட் குரே, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச் சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் வ.கம லேஸ்வரன், வடக்குமாகாண சபை உறுப்பினர்களான க.சிவநேசன், அரியரத்தினம், முன்னாள் தடகள வீரர் எதிர் வீரசிங்கம், அமைச்சின் செய லாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட விருந்தினர்கள் பலரும் இங்கு கலந்துகொண்ட னர்.

துணுக்காய் வலயக்கல்வி வாரிய உறுப்பினர்கள் 26 பேருக்கும் நியமனக் கடி தங்கள் வழங்கி வைக்கப் பட்டு அவர்கள் ஆளுநர் முன்னிலையில் சத்தியப் பிர மாணம் செய்துகொண்ட னர்.

இங்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச் சர் த.குருகுலராஜா உரை யாற்றுகையில்,

இந்த வாரிய உறுப்பி னர்கள் உரியமுறையில் இந்த வலயத்தை நடத்திச் செல்லவேண்டும் எனவும் இலங்கையிலேயே முதல் முறையாக இங்கேயே இந்த வாரியம் உருவாக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவித் தார். (2-28)

# பாதுகாப்பு மரபுகளை உதறிவிட்டு தாயாரைப் பார்க்க சென்ற மோடி



(டில்லி)

பாதுகாப்பு மரபுகளை உதறி விட்டு, தன் தாயார் ஹீரா பென் அம்மையாரை காண்பதற்காக ரேசானில் உள்ள இல்லத்துக்கு சென்றார் பிரதமர் நரேந்திர மோடி.

பிரதமர் நரேந்திர மோடி தனது சொந்த மாநிலமான குஜராத்தில் நேற்று முன்தினம் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அப்போது அவர் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து பேசினார். அதன் முடிவில் அவர் கட்சி தலைவர்களையும், தொண்டர்களையும் சந்திப்பதற்காக காந்தி நகரில் உள்ள பாரதீய ஜனதா அலுவலகம் (கமலம்) சென்று கொண்டிருந்தார்.

ஆனால் திடீரென அவர் பாதுகாப்பு மரபுகளை உதறிவிட்டு, தன் தாயார் ஹீரா பென் அம்மையாரை காண்பதற்காக ரேசானில் உள்ள இல்லத்துக்கு சென்றார்.

அந்த இல்லத்தில் ஹீரா பென், தனது மற்றொரு மகனுடன் வசித்து வருகிறார்.

அங்கு அவரை பிரதமர் மோடி பார்த்து பேசி மகிழ்ந்தார். இந்த சந்திப்பு சுமார் 25 நிமிடங்கள் இடம் பெற்றன. (இ-3)

# ரூ.50 கோடி மோசடி வழக்கில் பிரபல தொழில் அதிபர் பவான் ருயா கைது

(டில்லி)



ரயில்வேயின் ரூ.50 கோடி மதிப்புள்ள சொத்துகள் மாயமான வழக்கில் தொழில் அதிபர் பவான் ருயாவை சி.ஐ.டி. பொலிஸார் கைது செய்தனர்.

கொல்கத்தா நகரின் டம் டம் என்னும் இடத்தில் ஜெஜோப் தொழிற்சாலை அமைந்துள்ளது. இங்கு ரயில்வே நிர்வாகத்துக்கு சொந்தமான ரூ.50 கோடி மதிப்பிலான இயந்திரங்கள், ரயில் பெட்டிகள் சில மாதங்களுக்கு முன்பு திடீரென மாயமானது. இது தொடர்பாக மேற்கு வங்காள சி.ஐ.டி.பொலிஸார் ருயா குரூப் நிறுவனங்களின் தலைவரும், பிரபல தொழில் அதிபருமான பவான் ருயா மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த வழக்கில் தன்னிடம் விசாரணை நடத்த தடை விதிக்க கோரி பவான் ருயா கொல் கத்தா உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார். ஆனால் இதற்கு மறுத்த நீதிமன்று அவர் சி.ஐ.டி. பொலிஸாரின் விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி உத்தரவிட்டது. எனறபோதிலும் சி.ஐ.டி. பொலிஸார் 4 முறை விசாரணைக்கு அழைத்தும் அவர் ஆஜராகவில்லை. இந்த நிலையில் ரயில்வேயின் ரூ.50 கோடி மதிப்புள்ள சொத்துகள் மாயமான வழக்கில் தொழில் அதிபர் பவான் ருயாவை மேற்கு வங்காள சி.ஐ.டி. பொலிஸார் டில்லி சுந்தர் நகரில் உள்ள அவருடைய வீட்டில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்தனர். (இ-3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 35 | 80 | 120 |
| தக்காளி | 50 | 80 | 45 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 100 | 40 | 60 | 60 |
| கோவா | 20 | 80 | 20 | 30 | 60 |
| கரட் | 120 | 80 | 60 | 80-160 | 160 |
| பூசணி | 40 | 50 | 30 | 40 | 60 |
| புடோல் | 60 | 80 | 40 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 | 35 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 90 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 400 | 110 | 320 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 70 | 60 | 120 |
| கருணைக்கிழங்கு | 50 | 120 | 80 | 50 | 100 |
| பயற்றங்காய் | 160 | 200 | 120 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 200 | 80 | 100 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 60 | 60 | 120 |
| கறிமிளகாய் | 180 | 200 | 100 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 100 | 200 | 160 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 180 | 200 |
| கத்தரிப்பிஞ்சு | 70 | 40 | 40 | 60 | 80 |
| கீரை-1பிடி | 30 | 50 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-35 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 300 | — | — | 400 | — |
| வெங்காயப்பூ | 180 | — | — | — | 200 |
| முள்ளங்கி | 80 | — | 50 | 80 | 120 |
| டொன்னாங்காணி | 35 | — | 10 | 30 | 40 |
| வல்லாரை | 10 | — | 15 | 10 | 20 |
| ஈரப்பலா | 60 | — | — | 80 | 80 |

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 09

"மத்திய அரசு, மாநில அரசு உட்பட எல்லா மக்களும் இலங்கைப் போராளிகளை ஆதரித்தார்களே மேடம்! அங்கு பல அமைப்புகள் இருந்தன என்று தான் கேள்விப்பட்டேன். அவரது அண்ணன் போராளி அமைப்பில் இருந்து மூன்று வருடங்கள் முன் இறந்தது தெரியும். அங்கு நடந்த இனப்போராட்டத்தினால் அவரும் அவர் குடும்பமும் பாதிக்கப்பட்டு இருந்ததைப் பற்றிச் சொல்லி இருக்கிறார். அதனால் எனக்கு அவர் மீதும் அவர் குடும்பம் மீதும் அனுதாபம் ஏற்பட்டு இருந்தது. புலிகளைப் பற்றி என்னிடம் பெரிதாக எதுவும் பேசியது கிடையாது. என் கணவரும் அப்படி என்னிடம் பழகவில்லை."



..1991 மே மாதம் 7ஆம் திகதி வி.பி.சிங் கூட்டத்தில் கலந்து கொண்டதை ஒத்திகை என்று சி.பி.ஐ. தரப்பு சொல்கிறது. ஆனால், உச்சநீதிமன்றமோ, அந்த சம்பவத்தில், நானும் என் கணவரும் ஒத்திகைப் பங்காளர்கள் தான் என எடுத்துக் கொள்ள முடியாது என்று ஒரு இடத்தில் மறுத்துள்ளது. அது மட்டுமின்றி, அதே சி.பி.ஐயினர் நீதிமன்றத்தில் காட்டிச் சொன்ன வயர்லெஸ் ஆவணப்படி 'சிவராஜன், சுபா, தனு' ஆகிய மூவரைத் தவிர வேறு யாருக்கும் இந்தச் சதித்திட்டம் பற்றித் தெரியாது' என்பதை உச்சநீதிமன்றமும் உறுதிப்படுத்துகிறது. அப்படி இருக்கும்போது எனக்கும் என் கணவருக்கும் தெரியும் என்பது திரிக்கப்பட்ட கற்பனைக் கதைதானே?

பிரியங்கா:- 'இலங்கையைச் சேர்ந்தவர் என்றால் புலிகளுடன் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்று உனக்குத் தெரியாதா?'

நான்:- 'எனக்கு அந்தளவுக்கு அப்போது விவரம் இல்லை. அந்த நாட்களில் மத்திய அரசு, மாநில அரசு உட்பட எல்லா மக்களும் இலங்கைப் போராளிகளை ஆதரித்தார்களே மேடம்! அங்கு பல அமைப்புகள் இருந்தன என்றுதான் கேள்விப்பட்டேன். அவரது அண்ணன் போராளி அமைப்பில் இருந்து மூன்று வருடங்கள் முன் இறந்தது தெரியும். அங்கு நடந்த இனப் போராட்டத்தினால் அவரும் அவர் குடும்பமும் பாதிக்கப்பட்டு இருந்ததைப் பற்றிச் சொல்லி இருக்கிறார். அதனால் எனக்கு அவர் மீதும், அவர் குடும்பம் மீதும் அனுதாபம் ஏற்பட்டு இருந்தது. புலிகளைப் பற்றி என்னிடம் பெரிதாக எதுவும் பேசியது கிடையாது. என் கணவரும் அப்படி என்னிடம் பழகவில்லை. அவருக்கு எங்கள் வீட்டில் அடைக்கலம் தந்திருந்தோம். அந்த நன்றிக்காக என்னை என் அம்மாவுடன் மீண்டும் சேர்த்து வைக்க எடுத்துக்கொண்ட முயற்சியும் அக்கறையும்தான் அவரை என் கணவராக்கியது. இன்று வரை என்னிடம் உயிராகத்தான் இருக்கிறார். அவருக்குத் தெரிந்து இருந்தால் நான் இப்படி ஒரு சிக்கலில் மாட்டிக்கொள்ள இடமே கொடுத்திருக்க மாட்டார். அறியாது சிக்கலில் மாட்டிவிட்டோம் என்று தெரிந்த பின் என்னையும் என் குடும்பத்தினையும் காப்பாற்ற அவர் ஏன் தன்னையே அர்ப்பணித்து இருக்க வேண்டும். தெரிந்து இருந்தால், முன்னாடியே காப்பாற்றி இருப்பாரே!

என்னைப் பிரதான குற்றவாளி என்று கூறுகிறார்கள். ஆனால், நான் சம்பவம் நடந்த நாள் அன்றும் அதற்கு முன்பும் எப்படி இருந்தேன் என்பதை அவர்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளவேயில்லை. அந்த மே மாதத்தில் ஒரு நாள் கூட நான் அலுவலகத்துக்குப் போகாமல் இருந்ததில்லை. சம்பவ தினமான மே 21 அன்று கூட வழக்கம் போலத்தான் அலுவலகத்துக்குப் போனேன். அரை நாள் விடுப்பு வேண்டும் என்றேன். அவர்களோ, 'எதற்கு அரை நாள் லீவு. சிறிது நேரம் வேலை பார்த்துவிட்டுக் கிளம்புங்கள்" என்று கூறினார்கள்.


நான் மிகச் சாதாரணமாகத்தான் இருந்தேன். என்னிடம் எந்தப் பதற்றமும் இல்லை. அரை நாள் வேலை செய்துவிட்டு பிறகு தான் ராயப்பேட்டை வீட்டுக்குப் போகிறேன். சாட்சி விசாரணைகள் எல்லாம் அதைத்தான் தெளிவுபடுத்தியிருக்கின்றன. கொலைச் சதி தெரிந்த ஒருவர் இப்படியெல்லாமா நடந்து கொள்வார்? என்று யாரும் யோசிக்கவேயில்லை. இப்படியெல்லாம் கூட ஒருவர் கொலைச் சதி சூழுவில் இருக்க முடியுமா?

என் கணவரைச் சந்திக்கலாம், ஏதாவது சாப்பிடலாம் என்றுதான் அம்மா வீடு போனேன. கணவரைப் பார்த்து பல நாள் ஆயிற்று. எனக்கு ஒரே தவிப்பாக இருந்தது. அங்கு அவர் இல்லை. ஆனால், அந்த நேரத்தில் அவர் என்னைத் தேடிக் கொண்டு அலுவலகம் சென்றுவிட்டார். எனக்குப் பெரும் ஏமாற்றம். சாப்பிட்டுவிட்டு வில்லிவாக்கம் புறப்பட்டேன்.

(வலிகள் தொடரும்...)



# யாழ். மாவட்டத்தில் தபால் வலையமைப்பை மேம்படுத்துவதற்கு ரூ.10 மில்லியன் ஒதுக்கீடு



(தொடர்ச்சி)

421.கிராமிய பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் கிராமிய சமூக நலன்களை மேம்படுத்துவதற்கும் கிராமிய மட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளில் காணப்படுகின்ற இடைவெளியானது பூரணப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இதன் அடிப்படையில் 1,000 கி.மீற்றர் நீளமான கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 4,500 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன். இம் முயற்சிகளில் பிரஜைகள் பங்குபற்றி உரிமை கொள்ளுமாறு நான் பிரஜைகளை ஊக்குவிக்கின்றேன்.

422. சபாநாயகர் அவர்களே, 1,500 சிறிய குளங்களை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா3,000 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

423.நாட்டின் பின்தங்கிய பிராந்தியங்களில் காணப்படுகின்ற நகரங்கள் மற்றும் உபநகரங்களையும் மேம்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

ஆகவே ஒவ்வொரு நகரங்களையும் மேம்படுத்துவதற்கு ஒரு முழுமையான அமுல்படுத்தல் திட்டத்தினை அபிவிருத்தி செய்யுமாறு நகர அபி விருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சினை வேண்டிக் கொள்கின்றேன். இந்நோக்கத்திற்காக ரூபா 3,000 மில்லியனை ஒதுக்கு வதற்கு முன்மொழிகின்றேன்.

ஜனாதிபதியின் முன்னெடுப்பாக கொழும்பு தேசிய நூலகத்திற்கு ஒரு புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்குவதற்கு முன் மொழிகின்றேன்.

424.தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் கலந்துரையாடலின் ஊடாக மொழியை ஊக்குவிப்பதற்காகவும் ரூபா 300 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

425.கிராமிய துப்புரவேற்பாடுகள் வசதிகளை மேம்படுத்துதல், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மற்றும் விவசாய துணைச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா 1,000 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

426. சபாநாயகர் அவர்களே, தனியார் துறையினர் தமது வியாபார செயற்பாடுகளை வடமாகாணங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு வசதியளிக்கும் வகையில் நாங்கள் கலவை அபிவிருத்தியுடன் கூடிய நிலைக்குத்தான கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும். இக்கட்டடங்களில் காரியாலய இட வசதிகள், பொழுது போக்கு மற்றும் களியாட்ட வசதிகளையும் கொண்டிருக்கும். இதற்காக ரூபா 1,000 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

427. கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறை மற்றும் கல்முனை நகரங்களின் ஒருங்கிணை நகர அபிவிருத்தியுடன் நகர அபிவிருத்தி திட்டத்தினை பூர்த்தி செய்வதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

இதேவேளை, உரிய வடிகாலமைப்பு வசதிகள் காணப்படாமை காரணமாக கிழக்கு மாகாணத்தில் பல நகரங்கள் மற்றும் கிராமங்கள் மழைகாலங்களில் நீரில் மூழ்கின்றன. கிழக்கு மாகாணத்தில் பொருத்தமான வடிகாலமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 100 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

428.கிழக்கு மாகாணத்திற்கு ஒரு அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையமொன்றினை உருவாக்குவதன் மூலம் விவசாயிகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி வர்த்தகத்திற்கும் மற்றும் 1,000 பேருக்கு தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்குவதற்கும் வசதியளிக்கும்.

இப்பொருளாதார மத்திய நிலையத்தை விரிவாக்குவதற்கு ரூபா 300 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

429.நுண் மற்றும் சிறிய அளவிலான விவசாய மற்றும் மீன் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் முகமாக நாடுபூராகவும் 250 வாராந்த சந்தைகள் மற்றும் மீன் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

430.மாந்தறை ஆற்றங்கரை அபிவிருத்தித் திட்டமானது ஆரம்பிக்கப்படும். இதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

431.ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "சிறி சார பிவிசும" திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முப்படைகள், சிவில் பாதுகாப்புப் படை மற்றும் ஏனைய பங்காளர்களுடன் இணைந்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 1,500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

432.யாழ்.மாவட்டத்தில் தபால் வலையமைப்பை மேம்படுத்துவதற்காக 10 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

433.உள்ளூர் தலைவர்களை வலுவூட்டுவதற்காக ரூபா 300 மில்லியன் கொண்ட ஒரு விசேட நிதியினை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் உருவாக்கப்படும். இந் நிதியின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உயர்ந்த பட்சமாக ரூபா 500,000 கடனைப் பெற்றுக் கொடுப்பதற்காக அனுமதியளிக்கப்படும்.

434.ஜனாதிபதியின் செயலகம் மற்றும் பிரிதமரின் அலுவலகம் என்பவற்றின் கவனத்திற்கு பொது மக்களினால் கொண்டுவரப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முறையே ரூபா 100 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன்வருகின்றேன்.

### வாழ்க்கைச் செலவிற்கான ஆதரவுகள்

435. சபாநாயகர் அவர்களே, நாம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மக்கள் எதிர்நோக்கிய வாழ்க்கைச் செலவு சுமையானது இலகுபடுத்தப்பட்டுள்ளது என்பதனை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பொருளாதாரத்தில் கட்டமைப்பு முன்னேற்றத்தினை இலக்காகக் கொண்டு விலைகளைக் குறைக்கின்ற பாரம்பரிய நடைமுறைகளிலிருந்து நாம் விலகியுள்ளோம்.

இதன் விளைவானது குறுகிய காலத்தில் கிடைக்கப்பெறாதுடன் நீண்ட கால நன்மையினைத் தரக்கூடியதாகும். இப் பின்னணியில் பின்வருவனவற்றினை நான் முன்மொழிகின்றேன்.

436.சபாநாயகர் அவர்களே, நாட்டின் அத்தியாவசியப் பொருட்கள் விலை ஸ்திரத்தன்மையை பராமரிப்பதில் லக் சதோச நிறுவனமானது ஒரு பிரதான பங்காற்றுகின்றது. நாடு பூராகவும்புதிதாக 100 சில்லறை விற்பனை நிலையங்களை உருவாக்கி தமது சில்லறை விற்பனை வலையமைப்பை விஸ்தரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்திற்கும் ரூபா 5 மில்லியன் என்ற வகையில் ரூபா 500 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

லக் சதோச நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கும் இதன் பயன்கள் சமூகத்தில் மிகவும் வலுவிழந்தோரை அடைவதற்கும் வசதியளிக்கப்படும். இதன் பொருட்டு 8,000 லக் சதோச முகவர் நிறுவனங்களை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதன்கீழ் 25 அத்தியாவசிய பண்டங்கள் குறித்துரைக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படும். இம் முயற்சிக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஒவ்வொரு முகவர் விற்பனை நிலையத்திற்கும் மாதாந்தம் ரூபா 10,000 ஒதுக்குவதற்கும் 2017 ஆம் ஆண்டிற்கு 1,000 மில்லியனை ஒதுக்குவதற்கும் முன்மொழிகின்றேன்.

அதேபோல், 100 கடைகளுக்கு ஒசுசலமுகவர் வசதி பெற்றுக் கொடுக்கப்படும்.

437.அதிவேகப் பாதைகளின் நுழைவுக் கட்டணமானது இரவு 9 மணியிலிருந்து காலை 5 மணி வரை 50 ரூபாவினால் குறைக்கப்படும்.

438.நாட்டில் தற்பொழுது அரிசி மிகையாகக் காணப்படுவதனால் சமுர்த்தி பயனாளிகளுக்கு மாதாந்தம் 5 கி.கிராம் அரிசியினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பெறுமதியினை சமுர்த்தி கொடுப்பனவிலிருந்து குறைத்துக் கொள்ளப்படும்.

439.பின்வரும் பண்டங்களின் ஆகக்கூடிய சில்லறை விலையினைக் குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அ.பாசிப்பயறு 1 கி.கி. 15 ரூபாவினால்

ஆ.பருப்பு 1 கி.கி. 10 ரூபாவினால்

இ. உருளைக்கிழங்கு 1 கி.கி 5 ரூபாவினால்

ஈ. நெத்தலி 1 கி.கி. 5 ரூபாவினால்

உ. வெள்ளைச்சீனி 1 கி.கி. 2 ரூபாவினால்

ஊ. மண்ணெண்ணெய் 1 லீற்றர் 5 ரூபாவினால்

எ. எரிவாயு 12.5 கி.கி. சிலிண்டர் 25 ரூபா. எரிவாயு பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்குட்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

440.பின்வரும் பண்டங்களின் விலையினை மாற்றமின்றி தொடர்ந்தும் பேணுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

(தொடரும்)



# அ.தி.மு.க. பொதுச்செயலராகி சசிகலா வழிநடத்த வேண்டும்

## தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் விருப்பம்

அ.தி.மு.க.வை தொடர்ந்து கட்டுக்கோப்புடன் கொண்டு செல்ல சசிகலா பொதுச்செயலாளராகி வழிநடத்த வேண்டும் என்று ஓ.பன்னீர் செல்வம் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கேள்வி:- தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் மறைவிற்குப் பிறகு ஒரு பெரிய வெற்றிடம் உருவாகியிருக்கிறது. அந்த வெற்றிடத்தை நிறைவு செய்ய வேண்டி, அ.தி.மு.க. நிர்வாகிகள் சசிகலாவை நேரில் சென்று சந்தித்து தலைமை ஏற்க வருமாறு அழைப்பு விடுத்திருக்கிறார்கள். அதனை பற்றி உங்களின் கருத்து என்ன?



பதில்:- ஜெயலலிதாவின் நிழலாக இறுதிவரை இருந்து, அவரின் மெய்க்காப்பாளராக, உயிர் காக்கும் தோழியாக, உன்னத சேவகியாக, உறுதுணையாக நிற்கும் தங்கையாகவே வாழ்ந்து வருபவர் சசிகலா.

எண்ணில்லாத சோதனைகளையும், வேதனைகளையும் ஜெயலலிதா சந்தித்த காலகட்டங்களில் அவருக்கு உற்ற துணையாக இருந்து அந்த துன்பங்களை பகிர்ந்து கொண்டவர் சசிகலா.

ஜெயலலிதாவுடன் 33 ஆண்டு காலம், இணைந்து நின்று அவரது சிந்தனையை, செயலாற்றலை, தனக்குள் உள்வாங்கிக் கொண்டிருப்பவர் சசிகலா. ஜெயலலிதா இந்த இயக்கத்தின் நிர்வாகிகளை மட்டுமல்ல தொலைதூர ஊரின் கடைகோடி கிராமத்தில், கழகக் கொடியை ஏந்தி நிற்கும் சாதாரண தொண்டனைக் கூட அறிந்து வைத்திருந்தார். அவர் கூடவே இருந்து அவரைப் போலவே இந்த இயக்கத்தின் தொண்டர்களை அறிந்து வைத்திருப்பவர் சசிகலா.

இந்த இயக்கத்தை ஜெயலலிதா வைத்திருந்த அதே கட்டுக்கோப்புடன், ஒரு இராணுவ அமைப்பு போல் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டும் என்று சொன்னால், அதற்கு ஒரே வழி சசிகலா இந்த இயக்கத்தின் பொதுச் செயலாளர் ஆகி வழிநடத்துவது ஒன்றே ஆகும்.

இதில் மாற்றுக் கருத்து இந்த இயக்கத்தில் இல்லை. அப்படி ஒரு மாற்றுக் கருத்து கொண்டிருப்பவர் எவரேனும் இருந்தால், அவர் இந்த இயக்கத்தின் தொண்டன் இல்லை, ஜெயலலிதாவின் பிள்ளை இல்லை, எம்.ஜி. ஆரின் இரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்பும் இல்லை.



அதனால்தான், ஜெயலலிதாவின் மறைவிற்கு பிறகு ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிறைவு செய்திட, கழக முன்னணியினர் சசிகலாவை சந்தித்து தலைமை ஏற்க வருமாறு அழைப்பு விடுத்திருக்கிறோம்.

கேள்வி:- இந்த அசாதாரண சூழ்நிலையை பயன்படுத்தி, சமூக வலைத்தளங்களில் பரப்பப்படுகின்றன வதந்திகளை பற்றி உங்களின் கருத்து என்ன?

பதில்:- மனசாட்சியே இன்றி பொய்யான வதந்திகளை பரப்பி, அவரை அரசியலில் ஈடுபடவிடாமல் முடக்கிவிடலாம் என்று சில மூளைமழுங்கிகள் செய்கின்ற முயற்சிதான் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படுகின்ற வதந்திகள்.

அவர்களது இந்த முயற்சி ஒருபோதும் வெற்றிபெறாது. பொய் வதந்திகளைப் பரப்பி மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி குட்டையைக் குழப்பி மீன்பிடித்துவிடலாம் என்று எண்ணுகின்ற அவர்களது ஆசை நிச்சயம் நிறைவேறாது என ஓ.பி.எஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# உண்மையைச் சொல்லும்வரை தலைவியாக ஏற்க முடியாது

## சசிகலாவுக்கு வலுக்கும் எதிர்ப்பு

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அப்பலோ வைத்தியசாலையில் அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த உண்மைகளை வெளியிடும்வரை சசிகலாவை தலைமை பொறுப்பில் ஏற்க முடியாது என அ.தி.மு.க. நிர்வாகி எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் தாலுகா புரட்சித் தலைவி அம்மா பேரவை நகர பொருளாளர் மதிவாணன் என்பவர் சமூக வலைதளத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அதில், மிக நீண்ட சிந்தனைக்கு பிறகே இப்பதிவை எழுதுகிறேன்.

ஏனெனில் நான் சார்ந்திருக்கும் இவ்வியக்கம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் ஆளுமைத் திறனால் இராணுவக் கட்டுப்பாட்டோடு கம்பீரமாய் வளர்ந்த இயக்கம். இவ்வியக்கத்திற்கு எனது கருத்துகளால் மாசு ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் கழக ஒற்றுமை சீர்குலைந்து விடக்கூடாது என்பதிலும் மிகக்கவனமாக இருக்கிறேன். நான் அம்மாவின் பிள்ளை. அவரது கட்டுப்பாட்டின் கீழ் ஓரளவுக்கு அரசியலை அறிந்த இளைஞன்.

எனது பதிவின் சாராம்சமும் கருத்துக்களும் இதோ..

திருமதி. சசிகலாவை பொதுச்செயலாளராக ஏற்றுக் கொள்ள தயார். திருமதி. சசிகலாவை தமிழக முதல்வராக ஏற்றுக்கொள்ளவும் தயார். திருமதி.சசிகலாவை அம்மாவால் வளர்த்து பேணிக் காக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.கவின் அதிகாரமிக்க தலைவராக ஏற்றுக் கொள்ள தயார்.

திருமதி.சசிகலாவின் தலைமையை முழுமனதோடு ஏற்றுக்கொண்டு அம்மாவிற்காக எப்படியெல்லாம் கழக பணி செய்தோமோ அப்படியே அவருக்காகவும் பணியாற்றிடவும் தயார்.

அதற்கு முன்பாக தொண்டர்கள் வைக்கும் ஒரு பரீட்சையில் திருமதி. சசிகலா தேர்ச்சி பெறவேண்டும்

அது யாதெனில், கடந்த செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் டிசெம்பர் 5ஆம் திகதி வரை அப்பலோ வைத்தியசாலையில் அம்மாவுக்கு எது மாதிரியான சிகிச்சை முறைகள் நடைபெற்றன என்பதை முழு வீடியோ ஆதாரத்தோடு வெளியிட வேண்டும்.

புகைப்படங்களோ அல்லது எழுத்து பூர்வமான எந்த விதமான விளக்கமும் எங்களுக்கு தேவையில்லை. நாங்கள் கேட்பது வீடியோ ஆதாரம் மட்டுமே. அவற்றில் அம்மா எதுமாதிரியான சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பவை எல்லாம் கடைசி நிமிடம் வரை இடம் பெற்றிருக்க வேண்டும்.

இவற்றை வெளியிட்டு திருமதி.சசிகலா அம்மாவின் நம்பிக்கைக்குரிய தோழி என்பதை எங்களிடத்திலே நிரூபணம் செய்ய வேண்டும். இதை திருமதி. சசிகலா நிரூபித்து விட்டால் அம்மா எழுதிய உயிலில் வேறு யார் பெயர் இடம்பெற்றிருந்தாலும் கூட அதை தவிர்த்து திருமதி. சசிகலாவை மானசீகமாக தலைவியாக ஏற்றுக் கொள்கிறோம். அம்மா கட்டிக்காத்த ஒன்றரை கோடி தொண்டர்களும் திருமதி.சசிகலாவின் பின்னால் அணிவகுத்து நிற்கிறோம்.

முக்கியமாக அவரை சின்னம்மா என்று அழைக்கிறோம்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அம்மாவைப் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தி தேர்தலை சந்தித்ததை போலவே எதிர்வரும் 2019 பாராளுமன்றத் தேர்தலிலும் திருமதி.சசிகலாவை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தி கழகப்பணி ஆற்றுகிறோம்.

அம்மாவிற்கு கொடுத்த அத்தனை முக்கியத்துவத்தையும் அச்சு பிசகாமல் அப்படியே கொடுக்கிறோம்.

ஆனால் திருமதி.சசிகலா அப்பலோ வைத்தியசாலையில் 75 நாட்களாக அம்மாவுக்கு என்னவெல்லாம் சிகிச்சை நடைபெற்றதோ அவை அத்தனையையும் ஆதாரத்தோடு காட்டி தான் ஒரு குற்றமற்றவர் என்பதை எங்களுக்கு நிரூபித்து காட்ட வேண்டும்.

இதை, திருமதி. சசிகலா செய்துவிட்டால் முழுமனதோடு அம்மாவின் பிள்ளைகளான நாங்கள் அத்தனை பேரும் திருமதி.சசிகலாவின் பின்னால் அணிவகுத்து நிற்க தயாராக உள்ளோம்.

அம்மா திருமதி.சசிகலாவை நம்பினார். அவரை நம்பிக்கைக்குரியவராக வைத்திருந்தார். என்று சிலர் கூறுவதை வைத்து எல்லாம் நாங்கள் நம்ப முடியாது.

எங்களிடம் தான் குற்றமற்றவர் என்று நிரூபித்து விட்டதன் பிறகு தலைமை பொறுப்பிற்கு வரட்டும். அதன் பின்பு திருமதி.சசிகலாவை முழு மனதோடு ஏற்றுக் கொள்கிறோம் என்று அந்த பதிவில் கூறியுள்ளார். (இ-3)

# 'ஜெ' நினைவு மண்டபத்திற்கு ரூ. 15 கோடி நிதியொதுக்கீடு

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் 15 கோடி ரூபாயில் நினைவு மண்டபம் கட்டுவதற்கு தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா கடந்த 5ஆம் திகதியன்று மரணமடைந்த நிலையில் புதிய முதல்வராகப் பதவியேற்ற ஓ. பன்னீர்செல்வம் நேற்று தனது முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டினார்.

இதன்போது ஜெயலலிதாவின் உருவப் படத்தை சட்டமன்றத்தில் வைக்க வேண்டும், அவருக்கு மத்திய அரசு பாரத ரத்னா விருதை வழங்க வேண்டும், நாடாளுமன்றத்தில் ஜெயலலிதாவின் சிலையைத் திறக்க வேண்டும், ஜெயலலிதா அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் 15 கோடி ரூபாய்க்கு நினைவு மண்டபம் அமைப்பது, எம்.ஜி.ஆர் நினைவிடத்தை, எம்.ஜி. ஆர். - ஜெயலலிதா நினைவிடம் எனப் பெயர் மாற்றம் செய்வது ஆகிய தீர்மானங்களும் அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. (இ-3)

# தேவாலய கூரை இடிந்து 60 பேர் அகால மரணம்!

## நைஜீரியாவில் பெரும் சோகம்

(நைஜர்)

**நைஜீரியா நாட்டின் தென்பகுதியில் தேவாலய கூரை இடிந்து விழுந்த விபத்தில் அங்கு வழிபாட்டுக்காகக் கூடியிருந்தவர்களில் 60 பேர் உயிரிழுந்தனர், பலர் படுகாயமடைந்தனர்.**



நைஜீரியா நாட்டின் தென் பகுதியில் அக்வா இபோம் என்ற மாநிலம் உள்ளது. இந்த மாநில தலைநகரான உயோ என்ற இடத்தில் பிரபலமான கிறிஸ்தவ தேவாலயம் அமைந்துள்ளது.

இந்த தேவாலயத்தை பெரிய அளவில் விரிவாக்கம் செய்வதற்காக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில் அந்த திருச்சபையின் நிறுவனரான அகான் வீக்ஸ் என்பவருக்கு பிஷப் பட்டம் வழங்கும் விழா நேற்று முன்தினம் இங்கு நடைபெற்றது.


இந்த விழாவைக்காண நூற்றுக்கணக்கான பக்தர்கள் தங்களது குடும்பத்துடன் வந்திருந்தனர். மாநில ஆளுநர் உடோம் எம்மானுவேல் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களும் பங்கேற்ற இவ் விழாவின்போது, தேவாலய கட்டடத்தின் மேற்கூரையை தாங்கிப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த இரும்புச் சாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக சரிந்து விழுந்தன.

இதையடுத்து, மேற்கூரை மொத்தமும் கூடியிருந்த மக்களின்மீது விழுந்தது. சில நொடிகளில் அந்த இடம் மண்மேடாகிப்போனது.

இந்த விபத்து பற்றிய தகவல் அறிந்து விரைந்து வந்த மீட்புப் படையினர் இடிபாடுகளில் சிக்கி உயிருக்குப் போராடிய பலரை மீட்டு, வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர். மீட்புப் பணி முழுமையாக முடிவடையாத நிலையில் இதுவரை 60 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக மாநில ஆளுநரின் செய்தி தொடர்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## எரிவாயு ஏற்றிச் சென்ற லொறி வெடித்து சிதறியது

### 30 பேர் பரிதாபமாக பலி! 40 பேருக்கு தீக்காயங்கள்





(நைரோபி)

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கென்யாவில் இரசாயன எரிவாயு ஏற்றிச் சென்ற டாங்கர் லொறி பிற வாகனங்களுடன் மோதி வெடித்த விபத்தில் 30 பேர் உயிரிழுந்தனர்.

கென்யா தலைநகர் நைரோபியில் இருந்து நைவாஷா நகரை இணைக்கும் பிரதான நெடுஞ்சாலை வழியாக இரசாயன எரிவாயு ஏற்றிய ஒரு டாங்கர் லொறி உகண்டா நாட்டுக்குச் சென்று கொண்டிருந்தது.

நேற்று பின்னிரவு, நைவாஷா நகரின் வடக்கே சுமார் 10 கிலோமீற்றர் தூரத்தில் வந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி, அந்த வீதியில் வந்த ஏனைய வாகனங்களின் மீது பயங்கரமாக மோதியது.

மோதிய வேகத்தில் லொறியில் இருந்த இரசாயன எரிவாயு டாங்கர் தீக்கோளமாக வெடித்து சிதறியது. இந்த தீயில் பத்துக்கும் அதிகமான வாகனங்கள் சிக்கிக் கொண்டன.

அந்த வாகனங்களில் இருந்த 30 பேர் உடல்கருகி பலியானதாகவும், 40இற்கும் அதிகமானவர்கள் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-3)

## துருக்கியில் கால்பந்து திடல் அருகே தீவிரவாத தாக்குதலுக்கு 29பேர் பலி

### 116 பேர் படுகாயம்



(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டின் பழமை வாய்ந்த நகரமான இஸ்தான்புல்லில் உள்ள கால்பந்து திடல் அருகே நடத்தப்பட்ட கார்க்குண்டு மற்றும் மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 29 பேர் உயிரிழந்தனர்.

இஸ்தான்புல் நகரின் மையப்பகுதியில் உள்ள கால்பந்து திடல் அருகே நேற்றுக் காலை ஒரு கார்க்குண்டு வெடித்துச் சிதறியது. அடுத்த 45 விநாடிகளில் தனது உடலில் வெடிகுண்டுகளை கட்டியிருந்த ஒரு தீவிரவாதி வெடித்து சிதறினான்.

இந்தத் தாக்குதல்களில் மொத்தம் 29 பேர் பலியானதாகவும், 116 பேர் படுகாயமடைந்ததாகவும் துருக்கி நாட்டு உள்துறை அமைச்சர் சுலைமான் சோய்லு தெரிவித்துள்ளார்.

காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும்பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (இ-3)

## நீதித்துறையில் 1,344 புதிய பதவிகள்

தமிழக நீதித்துறையில் 1,344 புதிய பதவிகளை உருவாக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றில் தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது.

விடுமுறை நாட்களில் நடக்கும் 'லோக் அதாலத்களில்' பணியாற்றும் நீதித்துறை ஊழியர்களுக்கு உரிய பண பலன்களை வழங்கவும், நீதித்துறை ஊழியர்களுக்கு சம்பளம் உள்ளிட்டவை குறித்து ஷெட்டி கமிஷன் செய்துள்ள பரிந்துரைகளை அமுல்படுத்தவும் தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றில், தமிழ்நாடு நீதித்துறை அமைச்சு பணி அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாகி ராஜேந்திரன் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு உயர் நீதிமன்றில் நிலுவையில் இருந்து வருகிறது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, தமிழக உள்துறை செயலாளர் அபூர்வ வர்மா பதில் மனு தாக்கல் செய்தார்.

அதில், நீதித்துறைக்கு கூடுதலாக ஆயிரத்து 344 பதவிகளை உருவாக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமான கோப்புகள் சம்பந்தப்பட்ட அதிகாரியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பணிகள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் முடிந்து விடும் என்று கூறியிருந்தார். அதேபோல, வீட்டு வசதித்துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், 'வீட்டு வசதி வாரியம் ஒதுக்கும் மொத்த வீடுகளில், 15 சதவீதம் நீதித்துறை ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும்' என்று கூறப்பட்டது.

இதை பதிவு செய்து கொண்ட தலைமை நீதிபதி சஞ்சய்கிஷன் கவுல், நீதிபதி எம்.சுந்தர் ஆகியோர் அரசு வீடுகள் ஒதுக்கீட்டில் நீதித்துறை ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று கூறி விசாரணையை ஜனவரி 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (இ-3)

# சிசிர மெண்டிஸை விசாரணை செய்யக் கோரும் ஐ.நாவின் கோரிக்கை நிறைவேற்றப்படாது!

## இலங்கை அரசு நிராகரிப்பு

**(கொழும்பு)**

**இலங்கை புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரி சிசிர மெண்டிஸிற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்யப்பட மாட்டாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது. சிசிர மெண்டிஸிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழு வலியுறுத்தியுள்ள நிலையில் அரசாங்கம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.**



சிசிர மெண்டிஸீற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றது என்பதால் அவரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய தேவையில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன கொழும்பிலுள்ள ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபை குழுவினால் கவலை தரும் சம்பவங்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் குறித்து அரசாங்கம் ஆராயும் எனவும் அவர் தெரிவித்தார்.


சிசிர மெண்டிஸீற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்வதற்கான காலக்கெடுவை ஐ.நா. குழு கடந்த வாரம் அரசாங்கத்திற்கு விடுத்திருந்த நிலையில், சிசிர மெண்டிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட மாட்டார் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கை தொடர்பான மீளாய்வின் இறுதியில் சிசிர மெண்டிஸீற்கு எதிரான விசாரணை குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் குழு கடந்த வாரம் அரசாங்கத்தை கோரியிருந்தது.

மகிந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில குற்றப்புலனாய்வு திணைககளத்தின் பிரதி பொலிஸ்மா அதிபராக சிசிர மெண்டிஸ் கடமையாற்றியிருந்தார்.

சிசிர மெண்டிஸின் கீழ் இயங்கிய குற்றப்புலனாய்வு பிரிவு. சித்திரவதைகளை மேற்கொண்டதாகவும் அது தொடர்பில் விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மத்திய வங்கி ஆளுநர் பதவி விலகத் தீர்மானம்



**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளதாக கொழும்பு ஞாயிறு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி மற்றும் அரச நிதிச் சபையின் உறுப்பினர்களான நிஹால் பொன்சேகா மற்றும் கிரிசாந்த பெரேரா ஆகியோர் பதவிகளை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அறிவித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிலைமையின் கீழ் பதவியை இராஜினாமா செய்ய விரும்புவதாக இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு பொருத்தமானவரா? என ஆராய்ந்து நியமிக்கப்பட்டதாகவும் பதவி விலக வேண்டிய அவசியமில்லை எனவும் ஜனாதிபதி, மத்திய வங்கி ஆளுநருக்கு தெரிவித்துள்ளார்.

நிதிச் சபை உறுப்பினர்களும் மத்திய வங்கியின் ஆளுநருடன் பதவி விலக விரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## நாடாளுமன்றில் மகிந்தவின் செயல் குறித்து கடும் விசனம்



(கொழும்பு)

அடுத்தாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு, நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நடைபெற்றது.

வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்களிப்பார் என பலர் எதிர்பார்த்தனர்.

எனினும் வழமையை போன்று தனது ஆதரவாளர்களை பலிக்கடாவாக வைத்து விட்டு மகிந்த நாடாளுமன்றத்தில் இருந்து சென்றுள்ளார்.

மகிந்தவின் பெயரை நாடாளுமன்றத்தில் அறிவிக்கும் போதே ஏனையோர் ஊ சத்தமிட்டு கூச்சலிட்டுள்ளனர்.

எப்படியிருப்பினும் மகிந்த இவ்வாறு செய்வது முதல் தடவையல்ல என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் வரவு செலவுத்திட்டம் 110 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றது. வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 165 வாக்குகளும் எதிராக 55 வாக்குகளும் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## அமைச்சர் சாகலவை விமர்சிக்க வேண்டாம் மகிந்த உத்தரவு

அமைச்சர் சாகல ரத்நாயக்கவை விமர்சிக்க வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மைக காலமாக இலங்கை அரசியல் தளத்தில் சர்ச்சைக்குரிய நபராக சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க மாறியுள்ளார்.

இந் நிலையில் அண்மையில் பொலிஸ்மா அதிபருக்கு மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்பு சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தினுள் அல்லது அதறகு வெளியே செய்தியாளர் சந்திப்புக்களில், தொலைக்காட்சி அரசியல் விவாதங்களில் எவ்வித தாக்குதல்களையும் மேற்கொள்ள வேண்டாம் என மகிந்த ராஜபக்ஷ, கூட்டு எதிர்க்கட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் கடந்த வாரம் அமைச்சர் சாகலவுக்கு வழங்கிய தொலைபேசி அழைப்பு தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி கடைப்பிடித்த அமைதி தொடர்பில் வினவிய போதே இந்த தகவல் உறுதியாகியுள்ளதாக குறித்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

"சாகல என்பவர் எங்களுககு நெருக்கமான ஒருவராவார். அப்படியான ஒருவர் சட்டம்மற்றும்ஒழுங்கு அமைச்சர் போன்ற பதவியில் இருப்பது எங்களுக்கு நல்லது. அவசியமான தகவல் அவசியமான நேரத்தில் எங்களுக்கு கிடைக்கும். பிரபாத நாணயக்காரவின் வீட்டில் அண்மையில் நான் சாகலவை சந்தித்தேன். நிதி மோசடி விசாரணை பிரிவில் ரவி வித்யாலங்கார மாத்திரமே சாகலவினால் கட்டுப்படுத்த முடியவில்லை. வித்யாலங்காரவுடன் ஒப்பந்தத்தில் இருப்பது மலிக். சாகலவை விரட்டுவதற்கு மலிக் முயற்சிக்கின்றார். அதற்கு இடமளிக்க கூடாது. நாங்கள் நிச்சயமாக சாகலவை பாதுகாக்க வேண்டும என மகிந்த, கூட்டு எதிர்கட்சி உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தெரிவித்துள்ளார்.

மகிந்த இதே முறையில், முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் அவரது மருமகனுக்கு எதிராக தாக்குதல் மேற்கொள்ள வேண்டாம் என இதற்கு முன்னர் கூட்டு எதிர்க்கட்சியினருக்கு உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எப்படியிருப்பினும் கடந்த 8 ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலையீட்டில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், ராஜபக்ஷர்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் அமைச்சர்களை நீக்குவதற்கு அமைச்சரவை திருத்தம் ஒன்றும் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## அலுவலக திறப்பு

வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றிய அலுவலகத்திறப்புவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 745,கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்துக் கல்லூரி முன்பாக ) எனும் முகவரியில் இடம் பெறும். ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. விக்னேஸ்வரன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி சுகாதார விளையாட்டுத் துறை அமைச்சர் த. குருகுலராஜா ,சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன்,வடமாகாணக் கல்வி, கலாசார விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார்,யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. வாகீசன், கௌரவ விருந்தினராக கல்விக் காருண்யன் தொழிலதிபர் ஈ. எஸ். பி. நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


## கடற்படையினரின் சட்டவிரோத நடவடிக்கைக்கு அரசு ஆதரவு

### கோத்தபாய ராஜபக்ஷ கருத்து

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது கடற்படையினரின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கின்றது என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இரண்டு கப்பல்கள் பயணம் செய்ய முடியாத வகையில் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், கடற்படையினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்த வேளை, ஊடகவியலாளர் ஒருவரையும் கடற்படை தளபதி தாக்கியிருந்தார்.



"போரில் வெற்றி பெற்ற எங்களது இராணுவத்தை துன்புறுத்திய இதே அரசாங்கம், தற்போது கடற்படையினரின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றது" என கோத்தபாய ராஜபக்ஷ கருத்து தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் இந்த கருத்தை பதிவேற்றம் செய்துள்ளார். (இ-3)

# அரசியல் அமைப்பு மாற்றம் குறித்து மகிந்தவுடன் ரணில்-சம்பந்தன் பேச்சு



அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

பிரதமர் செயலகத்தில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன. இதன்போது, அரசியல் அமைப்பு மாற்றத்துக்கு மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியின் ஆதரவைப் பெறுவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, அரசியல் அமைப்பு மாற்றம் தொடர்பாக, அரசாங்கம் முதலில் தமது திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார்.

அதில் என்ன உள்ளது என்று தெரியாமல், எவ்வாறு தமது கருத்தை முன்வைப்பது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது நிலைப்பாட்டை இன்னமும் வெளிப்படுத்தவில்லை என்று பிரதமர் கூறியுள்ளார்.

அப்போது மகிந்த ராஜபக்ஷ, அரசாங்கத்தின் முக்கியமான பங்காளிக்கட்சி இவ்வாறு செயற்பட்டால், தாம் எவ்வாறு கருத்து வெளியிட முடியும் என்று கேள்வியை எழுப்பியுள்ளார்.

இதன்போது, அரசியல் அமைப்பு மாற்றங்களுக்கு கூட்டு எதிரணி அதரவு அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சந்திப்பில், கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன, விதுர விக்கிரமநாயக்க, ஜொஹான் சமரசிங்க, லொகான் ரத்வத்த ஆகியோர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பங்கேற்றனர். (இ-3)

# எந்தத் தேர்தலையும் சந்திக்க ஐ.தே.க.தயார்

## பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

**எநதத் தேர்தலாக இருந்தாலும் அதனை சந்திக்க ஐ.தே.க. தயாராக இருக்கின்றது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

மேலும், நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த செயற் குழுக் கூட்டத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு முழுமையான ஆதரவை வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைத்து கட்சியின் யாப்பில் திருத்தங்கள் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-3)

# வடக்கு வாழ் இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவதே கம்மன்பிலவின் விருப்பம்

## சமன் குற்றச்சாட்டு



வட பகுதி இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவதே உதய கம்மன்பில போன்ற அரசியல்வாதிகளின் விருப்பமாக காணப்படுவதாக, தேசிய தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

"சட்டத்தை மாற்றுவதற்கு முன் மனப்பாங்கை மாற்றுவோம்" என்ற தொனிப்பொருளில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வொன்று நேற்று முன்தினம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது.

சிவில் சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய சமன் ரத்னபிரிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டுமென கம்மன்பில வலியுறுத்தியுள்ளதாகவும், அவ்வாறு அவர்கள் தடை செய்யப்பட்டால் வட பகுதி இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற தீர்மானத்திற்கு செல்வார்கள் எனவும் வலியுறுத்தினார்.

"நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. நம் நாட்டில் 71,88 மற்றும் 89களில் பல்வேறு கலவரங்கள் ஏற்பட்டன. அதன் பின்னர் யுத்தம் ஒன்று ஏற்பட்டது. இந்தக் காரணங்களால் தேவைக்கு அதிகமாகவே இரத்தம் சிந்தியவர்கள் நாம். மீண்டும் அதற்கானதேவையில்லை. ஆகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். பிரச்சினைக்குத் தீர்வு காண பல வழிகள் காணப்பட்டாலும் அதில் முதலாவது வழி அரசியல் அமைப்பு சீர்திருத்தமே.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியில் தோற்கடித்தாலும் தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்றக்கூடிய அரசியல் வழிமுறையொன்றை ஏற்படுத்த முடியாமல் போயுள்ளது. மகிந்த ராஜபக்ஷ தவறிழைத்து விட்டார். தற்போது ஆட்சியில் இருப்பவர்களும் அதே தவறை செய்யாமல் அந்தப் பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்கு அதிகாரப்பரவலாக்கள் அவசியம். வாய்ப் பேச்சில் அல்ல, யதார்த்ததை புரிந்துகொண்டு செயற்பாட்டில் அரசியல் யாப்பின் ஊடாக அதிகாரத்தை பகிர்வது அவசியம்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது அவசியம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாது செய்வது அவசியம். எனினும் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாது செய்வதால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என கருத்துக்கள் வெளியாகின்றன. அது மிகப்பெரிய பொய். 1971ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரச்சினையை தீர்ப்பதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறைமை அவசியமில்லை என்பதை நிரூபித்துக்காட்டினார். அதனை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதனை அவர் செய்து காட்டினார். இந்தியா எமக்கு மிகச்சிறந்த உதாரணம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டுமென உதய கம்மன்பில கூறுகின்றார். ஏன் அவ்வாறு அவர் கூறுகின்றார். தமிழ்க் கூட்டமைப்பை தடை செய்தால் என்ன நடக்கும். வடக்கில் உள்ள ஒரேயொரு ஜனநாயக அரசியல் அமைப்பு தமிழ்க் கூட்டமைப்பு மாத்திரமே. ஆகவே அவர்களை தடை செய்தால் வடபகுதி மக்களுக்கு நாடாளுமன்றில் தங்களது பிரச்சினைகளை பேசுவதற்கு வேறு வழிகள் இல்லை. அமிர்தலிங்கத்தை வெளியேற்றியதால் என்ன நடந்தது? அந்த நிலைமை மீண்டுமேற்படவேண்டுமென்றேஅவர்கள் நினைக்கின்றனர்.

அவ்வாறு தடை செய்தால் வடக்கு இளைஞர்கள் என்ன நினைப்பார்கள்? ஜனநாயக வாய்ப்பு எமக்கு இல்லாமல் போனால் ஆயுதத்தை கையில் ஏந்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றே அவர்கள் கருதுவார்கள். அந்த நிலைமைக்கே அவர்கள் தள்ளப்படுவார்கள். அதனையே இவர்கள் கேட்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## 10.00 மணி

யாராயிருந்தாலும் சரி எங்கெங்கே சுற்றினாலும் இருட்டியதும் கூட்டை அடைகிற பறவைகள் மாதிரி பத்து மணிக்குள் வீடு திரும்பிவிட வேண்டும். இரவு நேரம் பணி (டியூட்டி) புரிகிறவர்களைத் தவிர பத்து மணிக்கு மேல் நடமாட்டம் வைத்துக் கொள்கிறவர்களைப் பரிசுத்தமானவர்களின் பட்டியலிலோ, பொறுப்புணர்ந்து நடப்பவர்களின் பட்டியலிலோ சேர்ப்பது கடினமே.

அப்படி என்ன பத்து மணிக்கு மேல் தொழிலும், பணியும், கடமையும் வேண்டிக் கிடக்கிறது? என்றால், குடும்பத்துக்குத் தானே உழைக்கிறேன்? என்பார்கள் சிலர். இவர்களுக்கு ஓர் உண்மை புரிவதில்லை.

பத்து மணிக்கு மேல் பணி செய்யாமல் இருப்பதால் வரக் கூடிய எந்த நட்டத்தினையும் அந்தக் குடும்பத்தினர் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பதே அது. இப்படிப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பகல் நேரத்தை ஏகமாய் வீணாக்கிவிட்டு, சாமக் கோழி மாதிரித் திரிவார்கள். 9.55 வரை வீட்டில் அமைதியாய் இருப்பவர்களின் மனம், பத்து ஆனதும் இன்னும் காணோமே எனப் பதைக்க ஆரம்பிக்கிறது.

கற்பனை கண்டபடி போகிறது. எங்கேனும் அடிபட்டு ... என்கிற அளவிற்குக் கற்பனை போகிறது. அதுபோகத் தன்னுடைய தனிமை வேறு பயத்தைச் சேர்த்துக் கொள்கிறது. இந்த மனப் போராட்டம் சம்பந்தப்பட்டவர்கள் மீது மெல்ல வெறுப்பை வளர்க்கிறது. சிலரோ அதை அன்றிரவே வெளிப்படுத்துகிறார்கள். சிலரோ சேமித்து வைத்து வெளிப்படுத்துகிறார்கள். முடிவு? சண்டைகள், சச்சரவுகள்.

வியாபாரத்திற்காக – வேலைக்காகப் பத்து மணிக்கு மேல் வீடு திரும்புகிறவர்களைக் கூடக் கொஞ்சம் நஞ்சம் சேர்த்துக் கொள்ளலாம். நட்புக்காக இந்த நேரத்தை செலவளிக்கிறவர்கள் பெரும் அநியாயத்தைச் செய்கிறவர்கள். பத்து மணிக்கு மேல் நட்பென்ன வேண்டிக் கிடக்கிறது? எதற்குமே நேரம் – காலம் என்ற வரையறை இல்லாவிட்டால் எப்படி?

என்றேனும் ஒரு நாள் 10 மணிக்கு மேல் என்றால் சரி. அடிக்கடி என்பதும் எப்போதும் என்பதும் பொறுத்துக்கொள்ள முடியாத தவறு.

சிலபேர் வீட்டை சத்திரம்போல் எண்ணிக் கொண்டு இஷ்டத்திற்கு வருவார்கள். இன்று வரக் கொஞ்சம் லேட்டாகும் என்று சொல்லாமல் பொறுப்பற்றுத் திரிவார்கள்.

பத்து மணிக்கு மேல் ஆகக் கூடிய விருந்து, சினிமா என்றால் குறிப்பாகத் திருமணம் ஆனவர்கள் மனைவியையும் அழைத்துக் கொண்டு செல்வதுதான் முறை. நீ சோத்துத் தட்டை வைத்துக் கொண்டு காத்துக்கிட, நான் வயிறு சரியில்லை என்று 11 மணிக்கு வந்து படுக்கையில் விழுவேன் என்பது மனைவியைப் புழுவாகக் கூட மதிக்காத செயல்.

**லேனா தமிழ்வாணன்**

# 8 போதைப்பொருள் கப்பல்களை பிடிக்கும் முயற்சியில் இலங்கை

*(கொழும்பு)*

***போதைப்பொருள் அடங்கிய 8 கப்பல்களை சுற்றிவளைக்கும் செயற்பாடொன்றை இலங்கை பொலிஸ் போதைப பொருள் தடுப்பு பிரிவு ஆரம்பித்துள்ளது. தெற்காசியாவில் கைப்பற்றப்பட்ட அதிக பெறுமதியான போதைப் பொருளை கண்டுபிடித்த இலங்கை பொலிஸ் போதை தடுப்பு பிரிவினரே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.***

போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய புலனாய்வு தகவல் வலையமைப்பின் ஊடாக கிடைக்கும் தகவல்களுக்கமைய தேடுதல் நடவடிக்கை தீவிரமடைந்துள்ளது.

இதற்கமைய கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை ஊடாக இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட 1200 கோடி ரூபா பெறுமதியான கொக்கேய்ன் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் போதைப்பொருள் கொண்டு செல்லப்பட்ட கப்பல் ஈக்வடோர் மற்றும் சவுதி அரேபியாவில் இருந்து புறப்பட்ட சந்தர்ப்பத்தில் 600 கொள்கலன்கள் காணப்பட்டுள்ளன. அதில் கொக்கேய்னுடனான கொள்கலன் தொடர்பிலான தகவல்களை புலனாய்வு பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

போதைப்பொருளுக்கு முற்றுப்புள்ளி என வேலைத்திட்டத்தின் கீழ் அரசாங்கம் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் கீழ் பொலிஸ திணைக்களத்தின் மற்றைய பாதுகாப்பு பிரிவுகளின் ஆதரவிற்கமைய இந்த விசேட புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த புலனாய்வு பிரிவு இலங்கையில் மாத்திரமின்றி சர்வதேச போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளதன் முடிவாக இந்த கொக்கேய்ன் தொகையை கண்டுபிடித்துள்ளது. (இ-3)

# இலங்கைக்கு சீனா ஒரு சிறப்பு நண்பன்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவு நாளுக்கு நாள் பலமடைந்து வருவதாக, அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனா ரட்ன தெரிவித்துள்ளார்.

சீன வைத்தியர்களால் நாகொட வைத்தியசாலையில் 500 பேருக்கு கண் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் ராஜித சேனாரத்ன,

இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா ஏற்கனவே குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கியுள்ளது.

பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம், உயர்நீதிமன்ற வளாகம், மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், நெடுஞ்சாலைகள் என்று பல்வேறு உதவித் திட்டங்களை சீனா மேற்கொண்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு, மருந்து தரச் சோதனைக்கான ஆய்வகம், பொலநறுவையில் சிறுநீரக வைத்தியசாலை ஆகியவற்றை சீன அரசாங்கம் கட்டித்தரவுள்ளது.

1.5 பில்லியன் டொலர் பெறுமதியில் துறைமுக நகரைக் கட்டும் பணியிலும் சீனா ஈடுபட்டுள்ளது. இது சீனாவிடம் இருந்து கிடைத்துள்ள மற்றொரு குறிப்பிடத்தக்க பங்களிப்பு.

இலங்கைக்கு சீனா ஒரு சிறப்புவாய்ந்த நண்பன்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இரண்டு நாடுகளுக்கும் இடையில் சின்னச்சின்ன விவகாரங்கள் இருந்தன. ஆனால் இப்போது எல்லாப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டன. இரண்டு நாடுகளும் நெருங்கிய நட்பு நாடுகளாக இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# கொள்ளையடியுங்கள் பரவாயில்லை

## அரசிற்கு விமல் வீரவன்ச அட்வைஸ்



வீதி அபிவிருத்தி எனும் பெயரில் கொள்ளையடிக்கின்றனர். கொள்ளையடியுங்கள் பரவாயில்லை. ஏனெனில், வீதியாவது மிஞ்சும் என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அம்பாந்தோட்டை துறைமுகத்தின் ஊடாக இன்னும் 5 அல்லது 6 வருடங்களின் பின்னர், வருமானத்தை ஈட்டிக்கொள்ளலாம் என்று சுட்டிக்காட்டினார்.

இதன்போது அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டுகளை அவர் தொடர்ந்தும் முன்வைத்து வந்த நிலையில், குறுக்கிட்ட, ஹெக்டர் அப்புஹாமி எம்.பி உங்களுடைய மாளிகையில், 24 வயதான இளைஞர் எப்படி இறந்தார் என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த, பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, அந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய தலங்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவைச்சேர்ந்த அதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவுக்கு கையாளே, தலங்கம பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த சம்பவத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவே இவ்வாறு செய்யப்பட்டது.

இதன் போது குறுக்கிட்ட சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க, அந்த இளைஞன் இறந்தானா? அல்லது கொல்லப்பட்டானா? என்று கேட்டார். தனது உரையை தொடர்ந்த விமல் வீரவன்ச, எது உண்மை, எது பொய்யென்று தெரிய வரும்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் சிரிக்கிறார். அமைச்சர் ஜோனும் சிரிக்கிறார். இன்னும் சிலர் சிரிக்கின்றனர். இந்த அரசாங்கம் நீண்ட நாட்களுக்கு பயணிக்காது என்று தெரிந்துகொண்டுதான் அவர்கள் சிரிக்கின்றனர்.

நல்லாட்சி எனும் பெயரில் நீங்கள் எல்லோரும் கழிவு குழிக்குள் விழுந்துவிட்டீர்கள், தயவு செய்து மக்கள் தூக்கிவிடும் முன்னர் நீங்கள் எழுந்து வாருங்கள் என்று கேட்டுக்கொண்டு தனது உரையை முடித்துக்கொண்டார். (இ-3)

# உண்மைகளை வெளிப்படுத்தப் போவதாக இரண்டு முக்கிய அமைச்சர்கள் எச்சரிக்கை

மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடிகள் ஊழல்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறினால், உண்மைகளை வெளிப்படுத்த நேரிடும் என இரண்டு அமைச்சர்களும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிலரினால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகள் தொடர்பிலும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வழக்குகளை தொடர்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்து இந்த சந்தர்ப்பத்தில் பிரதமர் விளக்கம் அளித்துள்ளார்.

அவசரப்படாமல் பொறுமையுடன் இருக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார். (இ-3)

# புதிய தூதுவர்கள் ஜனவரியில் நியமனம்


எதிர்வரும் ஜனவரி மாதத்தில் புதிய தூதுவர்கள் நியமிக்கப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக முன்னாள் விமானப் படைத் தளபதி எயர்சீப் மார்ஷல் ககன் புலத்சிங்களவும் மலேசியாவிற்கான உயர்ஸ்தானிகராக கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் ஏ.ஜே.எம். முஸம்மிலும் கியூபாவிற்கான இலங்கைத் தூதுவராக வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரியாக கடமையாற்றி வரும் ஏ.எல். ரட்னபாலவும் நியமிக்கப்பட உள்ளனர்.

குறித்த இந்த நியமனங்களுக்காக அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# உருவாக்கப்படும் புதிய அரசியலமைப்பு மனித விழுமியங்களுக்கு எதிரானதே!

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சுட்டிக்காட்டு




கொழும்பை மையமாக வைத்து தமிழர்களின் ஜனநாயக ஆணை இல்லாமல், தமிழர்களின் இறைமையைப் புறக்கணித்து, தமிழர்களின் புவியியல் ஒருமைப்பாட்டை நிராகரித்து உருவாக்கப்பட்டு கொண்டிருக்கும் புதிய அரசியலமைப்பு மனித விழுமியங்களுக்கு எதிரானது என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள்பணிமனை மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மனிதவுரிமை நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மனித உரிமை என்றால் தனிமனித உரிமை மட்டுமல்ல, ஒரு கூட்டாகத் தம்மைக் கருதும் மக்களுக்கான கூட்டு உரிமைகளுக்கான உத்தரவாதத்தை வழங்குவதும் மனிதஉரிமை என்பதன் அடிப்படை ஆகும். கூட்டு உரிமை மறுக்கப்படும் போது, அது நிராகரிக்கப்படும் போது, உரிமைக்கான குரல் அடக்குமுறைக்கு எதிரானகுரலாக எழுகிறது. ஒரு மக்களாகத் தம்மை உணருபவர்க ளுககு எதிராக நடத்தப்படும் கூட்டு அடக்கு முறையில் மிகவும் பெரியது ஒரு தேசிய இனத் தன்சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான அதன் தனித்துவமான இறைமையை மறுப்பது. இந்தப் பாதகத்தை இலங்கை அரசு ஈழத்தமிழ்த் தேசிய இனத்தி ற்கு எதிராக பலதசாப்தங்களா கப் புரிந்து வருகிறது.

மறுக்கப்பட்ட தமது இறைமைக்கான போராட்டத்தை ஜனநாயக முறையில் வெளிப்படுத்தும்போதோ, அல்லது அமைதி வழிப் போராட்டங்கள் மூலம் முன்னெடுக்கும் போதோ, அவர்கள் மீது இன ரீதியான இராணுவத் தாக்குதலகளையோ,முழு அளவிலான போரையோ, அல்லது ஒரு கொடிய இன அழிப் பையோ கட்டவிழ்த்து விடும் போதோ அதைத் தடுத்து நிறுத்தத் தவறுவது மன்னிக்க முடியாத மானுடத்திற் கெதிரான குற்றமாகும். எமது விடயத்தில் இந்த மன்னிக்க முடியாத குற்றத்தைப் பல நாடுகள் புரிந்திருக்கின்றன. ஈழத்தமிழர்களுக்கு எதிராகக குற்றம் புரிந்தவர்களை எல்லாம் பார்த்து நீதி கேட்கத் தவறுவது நாம் வரலாற்றுக்கு இழைகக்கும்துரோகம்ஆகிவிடும். முள்ளிவாய்க்காலின் பின்னான ஏழு ஆண்டுகள் கடந்த பின்னரும் இந்த வல்லாதிக்காங்களின் உண்மை முகம் எனை என்பதை விளங்கிக் கொள்ளாதவர்கள் அடிமைகளிலும் கேவலமான கொத்தடிமைகளே.

இன அழிப்பையும், போர்க் குற்றங்களையும், மானுடத்திற்கு எதிரான குற்றங்களையும் அடக்குமுறை அரசு ஒன்று தான் அடக்குகின்ற ஒரு தேசிய இனத்தின் மீது கடடவிழ்த்து விடுகின்ற போது அதைத் தடுக்காது, அடக்குமுறைக்குள்ளாகியுள்ள இனத தின் போராட்டச் சக்தியிடம் குற்றம் காணுவதில் சர்வதேச சக்திகள் முனைப்புக் காட்டியதன் நோக்கம் என்ன என்பதை எமது மக்கள் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும். கொழும்பை மையமாக வைத்து தமிழர்களின் ஜனநாயக ஆணை இல்லாமல், தமிழர்களின் இறைமையைப் புறக்கணித்து, தமிழர்களின் புவியியல் ஒருமைப் பாட்டை நிராகரித்துக் கட்டப்பட்டிருக்கும் இலங்கை ஒற்றையாட்சி அரசு அடிப்படையில் மனித விழுமியங்களுக்கு எதிரானது.

இஸ்ரேல் என்ற அரசை எவ்வாறு பாலஸ்தீனர்கள் நிராகரிக்கிறார்களோ, ஈராக்கையும், ஈரானையும் எவ்வாறு குர்திஸ் மக்கள் நிராகரிக்கிறார்களோ, அதைப் போலவே இலங்கை அரசையும் ஈழத்தமிழர்கள் நிராகரித்து வந்திருக்கிறார்கள் என்பது தகுந்த முறையில் ஆவணப்படுத்தப்பட்ட அரசியல் வரலாறு. இலங்கை அரசு தமிழர்களின்இறைமையை அங்கீகரிக்கவில்லை. இலங்கை அரசின் இப்போதிருக்கும் அரசியல் யாப்போ அல்லது இப்போது வடிவமைக்கப்பட்டு வருகின்ற அரசியல் யாப்போ வடகிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என்பதை அங்கீகரித்ததில்லை, அங்கீகரிக்கப் போவதும் இல்லை. நெருக்கடி இல்லாமல் அந்த அங்கீகாரம் வரப்போவதில்லை.

அமைதி ரீதியாகவும், ஆயுதப் போர் ரீதியாகவும் ஈழத்தமிழர்கள் தமது உச்சபட்ச நெருக்கடியைக் கொடுத்தாகிவிட்டது. இந்த நெருக்கடிகள் இலங்கை அரசை ஒருவழிக்குக் கொண்டு வரும் ஆற்றல்கொண்டிருந்த போதும், வல்லாதிக்க சக்திகள் தமது நலன் சார்ந்த அணுகு முறையில் ஒற்றையாட்சி இலங்கையையே மறைமுகமாகப் பலப்படுத்தினார்கள். இன்று சிங்கள பௌத்த இனவாதம் மேலும்தலை விரித்தாடுகி றது.

மனித உரிமை என்ற அடிப்படையில் பலமான ஒரு நெருக்கடியை இலங்கை அரசுக்குக் கொடுக்க சர்வதேச மனித உரிமைச்சமூகமும்தவறியிருக்கிறது. தவறியி ருக்கிறது என்பதை விட பாரிய அளவில் சர்வதேச சமூகம் ஈழத தமிழர்களை இடறியிருக்கிறது என்று கூறுவதே பொருத்தம்.

வடக்குக் கிழக்கின் புவியில் ஒருமைப்பாட்டைத் துணடாடிவிட்டு இலங்கையின் புவியில் ஒருமைப்பாட் டுக்குத் தமிழர்கள் ஒத்துப் போகவேண்டும் என்று இந் தச் சக்திகள் இப்போது எம் மிடம் எதிர் பார்க்கின்றன. நாம் இனிமேலும் பாதிக்கபபட் டவர்களாக, புண் சுமந்த மேனியர்களாக, அவலங்களை வைத் துப் பரிதாபமும் பரிகாரமும் தேடும் மனித உரிமைப் பிச்சைக்காரர்களாக, எமது விடுதலையைத் தேட முடியாது.

இறுதியில் பிச்சையும் வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலையில் தான் ஈழத் தமிழரின் அரசியல் பாதை பயணித்துக் கொண்டிருக்கிறது. என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 925

Search for people, places and things — Nagendram Home

சிந்து





சுதா




அரவிந்




கஜானன்




கௌதமன்




ஜெனார்த்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# சிறுவர் அரங்கம்

## பொன் தந்த பாம்பு

..ஒரு ஊரில் ஒரு பிராம மணன் இருந்தான். உழுவதே அவன் தொழில். அதில் ஆதாயம் ஒன்றும் அவனுக்குக் கிடைக்காமல் இருந்து வந்தது. ஒருநாள், கோடைக்கால முடிவில், வெய்யல் தாங்க முடியாமல் அவன் தன் வயல் மத்தியிலே ஒரு மரத்தின் நிழலில் சிறிது கண்ணயர்ந்தான். அப்போது கொஞ்சதூரம் தள்ளி இருந்த ஒரு எறும்புப் புற்றின் மேல் பயங்கரமான ஒரு பெரிய பாம்பு படமெடுத்து ஆடுவதைக் கண்டுவிட்டான். உடனே அவன், "இது கட்டாயம் இந்த வயலைக் காக்கும் தேவதையாகத்தான் இருக்க வேண்டும். இதை நான் வணங்கியதே இல்லை. அதனால் தான் எனக்கு உழவுத் தொழில் பலனளிக்கவில்லை. ஆகவே இப்போது அதை வணங்குகிறேன்'' என்று யோசித்தான்.

அப்படியே தீர்மானித்து யாரிடமிருந்தோ பிச்சையாகப் பாலைப் பெற்றுக்கொண்டு வந்து, பாத்திரத்தில் வார்த்து எடுத்துக் கொண்டு எறும்புப் புற்றின் அருகே போனான். "வயலைக் காக்கும் தேவதையையே, நீ இங்கு வசிக்கிறாய்



என்று இதுவரை நான் அறியவில்லை. அதனால் வணாங்காமல் இருந்தேன். இப்போது என்னை மன்னித்து விடு" என்று சொல்லி வணங்கி அங்கேயே பாலை வைத்து விட்டு வீட்டுக்குப் போனான்.

மறுநாள் காலையில் திரும்பி வந்து பார்த்தபோது, பாத்திரத்தில் ஒரு தங்க நாணயம் இருக்கக் கண்டான். எனவே, அவன் தினந்தோறும் அங்கே தனியே வந்து பால் வைத்துவிட்டுத் தங்க நாணயத்தை எடுத்துச் சென்றபடி இருந்தான். ஒருநாள் புற்றுக்குப் பால் கொண்டு போய் வைக்குமாறு தன் மகனிடம் சொல்லிவிட்டு அந்தப் பிராம மணன் நகரத்துக்குச் சென்றான். அந்தப் பையனும் பாலை அங்கே வைத்து விட்டு வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

மறுநாள் அந்தப் பிள்ளை அங்கு போனபோது ஒரு தங்க நாணயம் இருப்பதைப் பார்த்து விட்டு, "இந்தப் புற்று நிறைய தங்க நாணயங்கள் நிச்சயம் இருக்கும். எனவே இந்தப் பாம்பைக் கொன்று அவற்றையெல்லாம் எடுத்துக் கொள்ளலாமே!" என்று யோசித்தான். அம்மாதிரியே முடிவு செய்து, மறுநாள் பால்வைக்க வந்த அந்தப் பையன் பாம்பைத் தடியால் தலையில் அடித்தான். விதிவசத்தால் அது எப்படியோ சாகாமல் தப்பித்தது. தன் கூரிய பற்களால் கடிக்கவே, அவன் உடனே இறந்து போனான். உறவினர்கள் வந்து அவனது உடலை எடுத்து வயலுக்குப் பக்கத்திலேயே விறகுக் குவியலின்மீது கிடத்தி ஈமச்சடங்கை முடித்தார்கள்.

இரண்டாம் நாளில் பையனுடைய தந்தை திரும்பி வந்தான். பையன் இறந்த காரணத்தை உறவினர்கள் சொல்லக் கேட்டான். அது உண்மை என்பதையும் கண்டு கொண்டபிறகு,

உயிரினங்களிடம் தயை காட்டு அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்று! அப்படிச் செய்யாவிட்டால், பத்மவனத்தில் அன்னப்பறவைகள் நாசமானதைப் போல் நீ நாசமடைவாய்.

என்று பிராம்மணன் சொன்னான். "அது எப்படி?" என்று உறவினர்கள் கேட்கவே, பிராம்மணன் கூறத் தொடங்கினான்:

அடைக்கலம் அளிக்காத அன்னங்கள் ஒரு ஊரில் சித்ரரதன் என்றொரு அரசன் இருந்தான். அவனுக்குச் சொந்தமான பத்மஸரஸ் என்றொரு ஏரி இருந்தது. அதை அவனுடைய போர் வீரர்கள் பத்திரமாகக் காத்து வந்தார்கள். ஏனென்றால், அதில் பல பொன்மயமான அன்னப்பறவைகள் வசித்து வந்தன. ஆறு மாதங்களுக்கு ஒருதடவை அவை ஒவ்வொன்றும் ஒரு தங்க இறகை அரசனுக்குக் கொடுத்து வந்தன. (தொடரும்...)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 627 - பைசண்டைன் பேரரசு இராணுவம் ஹெராகிளியஸ் தலைமையில் பாரசீகப் படைகளைத் தோற்கடித்தன.
- 1098 - சிரியாவின் மாரட்-அல்-நூமன் நகரை திருத்தந்தை இரண்டாம் ஏர்பனின் படைகள தாக்கி 20,000 பொதுமக்களைக் கொன்றனர்.
- 1787 - பென்சில்வேனியா ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது மாநிலமானது.
- 1817 - நியூ சவுத் வேல்ஸ் ஆளுநர் லக்லான் மக்குவாரி ஆஸ்திரேலியா என்ற பெயரை காலனித்துவ அரசுக்கு பரிந்துரைத்தார்.
- 1862 - யாசூ ஆற்றில் ஐக்கிய அமெரிக்காவின் யு.எஸ்.எஸ்.கைரோ என்ற ஆயுதம் தாங்கிக் கப்பல் கண்ணிவெடியில் சிக்கி மூழ்கியது.
- 1871 - யாழ்ப்பாணத்தில் முழுமையான சூரிய கிரகணம் அவதானிக்கப்பட்டது. இங்கிலாநதின் வானியலாளர் நோர்மன் லொக்கியர் தலைமையில் ஒரு அறிவியலாளர் குழு இதனைப் பார்வையிடுவதற்கு யாழ்ப்பாணம் வந்தது.
- 1901 - அட்லாண்டிக் கடலூடாக முதன் முதலாக இங்கிலாந்தில் இருந்து கனடாவின் நியூபின்லாந்தில் வானொலி சமிக்கைகளை மார்க்கோனி பெற்றார்.
- 1911 - இந்தியாவின் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றப்பட்டது.
- 1923 - இத்தாலியில் போ ஆற்றின் அணைக்கட்டு வெடித்ததில் 600 பேர் கொல்லப்பட்டனர்.
- 1939 - குளிர்காலப் போர்: பின்லாந்துப் படைகள் சோவியத் படைகளை டொல்வஜார்வி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் தோறகடித்தன.
- 1941 - அமெரிக்கப் போர்க் கப்பல் வேக் தீவுக் கரைக்கப்பால் நான்கு ஜப்பானியக் கப்பல்களைத் தாக்கி மூழகடித்தது.
- 1941 - யூதர்களை வெளியேற்றும் திட்டத்தை அடொல்ஃப் ஹிட்லர் அறிவித்தார்.
- 1942 - நியூபின்லாந்தில் விடுதி ஒன்றில் இடம் பெற்ற தீயில் 100 பேர் கொல்லப்பட்டனர்.
- 1948 - மலேசியாவில் நிலை கொண்டிருந்த ஸகொட்லாந்துப் படையைச் சேர்ந்த 14 பேர பட்டாங் காலி என்ற இடத்தில் உள்ளூர்ப் பொதுமக்கள் 24 பேரைக் கொன்று கிராமத்தைத் தீ வைத்து எரித்தனர்.
- 1963 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து கென்யா விடுதலை பெற்றது.
- 1979 - ரொடீசியாவின் பெயர் சிம்பாப்வேயாக மாற்றப்பட்டது.
- 1984 - மவுரித்தேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் முகமது கவுனா ஹைடாலா பதவி அகற்றப்பட்டு மாவோவுயா சிட்"அஹமது டாயா புதிய அதிபரானார்.
- 1985 - கனடாவின் நியூபின்லாந்தில் ஐக்கிய அமெரிக்காவின் 248 இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற விமானம் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணஞ்செய்த அனைத்து 256 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1988 - லண்டனில் இரண்டு தொடருந்துகள் மோதியதில் 35 பேர் கொல்லப்பட்டு 100 பேருக்கு மேல் காயமடைந்தனர்.
- 1991 - ரஷ்யா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1997 - களுத்துறை சிறைச்சாலைப் படுகொலைகள்: இலங்கையின் களுத்துறை சிறைச்சாலையில் மூன்று தமிழ் அரசியற் கைதிகள் சிங்களக் கைதிகளினால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1863 - எட்வர்ட் மண்ச், ஓவியர். (இ. 1944)
- 1927 - ராபர்ட் நாய்சு, பொறியியலாளர். (இ. 1990)
- 1949 - ரஜினிகாந்த், தென்னிந்திய நடிகர்.
- 1950 - எரிக் மாஸ்க்கின், நோபல் பரிசு மெற்ற அமெரிக்கர்.
- 1981 - யுவராஜ் சிங், இந்தியத் துடுப்பாட்ட வீரர்.
- 1931 - சௌகார் ஜானகி, தென்னிந்திய நடிகை.


### இறப்புகள்

- 1940 - தியாகி விஸ்வநாததாஸ் நாடக நடிகரும், தேசியவாதியும். (பி. 1886)
- 2006 - இ. இரத்தினசபாபதி, ஈழப்போராட்ட இயக்கங்களில் ஒன்றான ஈரோஸ் என்ற ஈழ புரட்சிகர மாணவர் இயக்கம் என்ற அமைப்பை ஆரம்பித்தவர். (பி. 1938)

### சிறப்பு நாள்

- கென்யா - விடுதலை நாள். (1963)

## ரஜனிகாந்த்



ரஜினிகாந்த் என்று அனைவராலும் அறியப்படும் சிவாஜி ராவ் கைக்வாட் (பிறப்பு: டிசெம்பர் 12, 1950), மராட்டியில்:சிவாஜீராவ் காயகவாட்) ஒரு புகழ்பெற்ற தமிழ்த் திரைப்பட நடிகராவார்.ஜ2ஸ இவருடைய ரசிகர்கள் இவரை தலைவர் என்றும் மக்கள் அனைவரும் சூப்பர் ஸ்டார் என்றும் அழைக்கின்றனர். ஆசியாவில் நடிகர் ஜாக்கி சான்-னுக்கு அடுத்தபடியாக அதிக அளவில் சம்பளம் வாங்கும் நடிகர் இவர். ஜசான்று தேவைஸ 2016ஆம் ஆண்டு நாட்டின் உயரிய குடிமை விருதுகளில் இரண்டாவதான பத்ம விபூசண் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார்.ரசினிகாந்த், டிசெம்பர் 12 1950 அன்று இந்தியாவின் கர்நாடகத்தில் ராமோசி ராவ் காயக்வாடுக்கும் ரமாபாய்க்கும் நான்காவது குழந்தையாகப் பிறந்தார். அவருக்கு ஐந்து வயதான போது தன் தாயை இழந்தார். பெங்களூரில் உள்ள ஆசாரிய பாடசாலை. மற்றும் விவேகானந்த பாலக சங்கம் ஆகியவற்றில் கல்வி கற்றார். படித்து முடித்தவுடன் பெங்களூரில் பேருந்து நடத்துனராக பணியாற்றினார். இந்த காலகட்டத்தில் பல மேடை நாடகங்களில் பங்கு கொண்ட ரசினிகாந்தின் மனதில் நடிக்கும் ஆவல் வளர்ந்தது.16 பிப்ரவரி 1981 அன்று இவர் லதாவை மணந்தார். ஐசுவர்யா, சௌந்தர்யா ஆகியோர் இரு மகள்கள் ஆவார். இவருடைய மூத்த மகள் ஐசுவர்யா, 2004 ஆம் ஆண்டு தமிழ் திரைப்பட நடிகரான தனுசை மணந்தார். செப்டம்பர் மூன்றாம் தேதி 2010 ஆம் ஆண்டு அன்று சௌந்தர்யா, அஸ்வின் ராம்குமார் என்ற தொழிலதிபரை மணந்தார்.

# பேச்சை மட்டுப்படுத்த வேண்டாம்!

தொழில் ரகசியம்



அமெரிக்க கிழக்கு கடற்கரையில் ஜனவரி மாதத்தில் விமானம் ஓட்டுவது இலகுவான காரியமல்ல. கடுங்குளிரும் பனிமழையும் சேர்ந்து பாடாய்ப்படுத்தும். போதாததற்கு பலமான காற்றும் சேர்ந்தால் மொத்த விமானப் போக்குவரத்தே ஸ்தம்பித்து விடும்.

இந்த உண்மைக் கதை நடந்த 1990-ம் ஆண்டும் அப்படியே. அன்று வழக்கத்தை விட அடர்த்தியான மூடுபனி. அசுரக் காற்றுவேறு. மேலே பாஸ்டன் நகரம் முதல் கீழே ஃபிலடெல்பியா வரை நூற்றுக்கணக்கான விமானங்கள் தாமதமாகியிருந்தன. கிழக்கு கடற்கரையிலுள்ள எல்லா விமான நிலைய கட்டுப்பாட்டாளர்களும் (Air Traffic Controllers) விமான சேவையை சீர்படுத்த போராடிக் கொண்டிருந்த நேரம். வரப்போகும் ஆபத்தை அறியாத கொலம்பிய நாட்டு 'ஏவியன்கா' விமானம் ஒன்று நியூயோர்க் 'ஜேஎஃப்கே' விமான நிலையம் நோக்கி வந்து கொண்டிருந்தது.

வரும் வழியில் 3 முறை கட்டுப்பாட்டாளர்களால் தாமதமானது. தாமதம் என்றால் ஏதோ ரோட்டில் ரீக்கடை ஓரமாய் போக்குவரத்து சரியாகும்வரை காத்திருந்து கிளம்பும் தாமதமல்ல. முன்னேற அனுமதி கிடைக்காமல் சும்மாவேனும் மேலே சுற்ற வேண்டிய தாமதம். ஏவியன்கா விமானம் நார்ஃபோக் மேல் 19 நிமிடங்கள் சுற்றி, பின் அட்லாண்டிக் சிட்டியை 29 நிமிடம் பிரதட்சணம் செய்து நியூயோர்க்கிற்கு 40 மைல்கள் முன்னே மேலும் 29 நிமிடங்கள் சுற்றவேண்டியிருந்தது.

ஒரு வழியாய் இறங்கலாம் என்று அனுமதி கிடைக்க ஏவியன்கா இறங்கத் தொடங்க, திடீரென்று எதிர் காற்று அதிகரித்தது. அதை சமாளிக்க விமானத்தின் வேகம் கூட்டப்பட, காற்றின் வேகம் சட்டென்று குறைய, வேகம் கூட்டப்பட்ட விமானத்தை அந்த வேகத்தில் இறக்க முடியாது என்பதை உணர்ந்த விமானி விமானத்தை மேலே கிளப்பி பெரிய சுற்றுச் சுற்றி வந்து மீண்டும் இறங்கத் திட்டமிட்டார்.

மேலே கிளம்பிய விமானம் ஜேஎஃப்கே இருந்த லாங் தீவு மீது பெரிய சுற்று சுற்றி மீண்டும் இறங்க தயாரானபோது இன்ஜினில் ஒன்று திடீரென்று செயலிழக்க பதட்டப்பட்ட விமானி, கட்டுப்பாட்டாளரிடம் 'அய்யோ, ஓடுபாதை எங்கே' என்று அலற இரண்டாவது இன்ஜினும் செயலிழக்க விமானமோ ஜேஎஃப்கேவிலிருந்து 16 மைல் தூரத்தில்.

மேலே பறக்க முடியாமல் ஆயிஸ்டர் பே என்ற ஊரில் விழுந்து நொறுங்க 73 பேர் இறந்தனர். விபத்தின் காரணம் ஒரே நாளில் தெரிந்தது. விமானி போதையில் இல்லை. விமானத்தில் கோளாறு இல்லை. விமானிகள் தவறு செய்யவில்லை. கட்டுப்பாட்டாளரிடம் தெளிவாக பேசாத குற்றத்தை தவிர!

இவ்விபத்தை, விபத்திற்கான காரணத்தை அவுட்லையர்ஸ் (Outliers) என்ற புத்தகத்தில் விளக்குகிறார் 'மால்கம் க்ளாட்வெல்'. காக்பிட்டில் நடக்கும் சம்பாஷனை பதிவாகும் கறுப்புப் பெட்டியை ஆய்வு செய்தபோது எத்தனை எளிதாக விபத்து தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்பது புரிந்தது. முதல் முறை இறங்கும் போது நடந்த உரையாடல் இதோ. இதில் நீங்கள் கவனிக்க வேண்டியது அவர்கள் பேச்சை அல்ல. பேசிய முறையை!

விமானி 'ஓடுபாதை கண்ணிற்கே தெரியவில்லை' என்கிறார். இது போன்ற நிலையில் இறங்கக்கூடாது என்பதால் 'மீண்டும் சுற்றி வருகிறேன்' என்று கூறி தனக்குத் தானே 'எரிபொருள் வேறு சுத்தமாய் இல்லை' என்கிறார்.

பிறகு வெறுப்பில் 'பாழாய்ப்போன ஓடுபாதை தெரியவில்லை' என்று கூற உதவியாளர் 'எனக்கும் தெரியவில்லை' என்கிறார்.

கட்டுப்பாட்டாளர் 'இடது பக்கம் திரும்புங்கள்' என்று கூற விமானி, உதவியாளரிடம் 'ஆபத்து என்று அவர்களிடம் சொல்லித் தொலை' என்கிறார்.

உதவியாளர் கட்டுப்பாட்டாளரிடம் 'நீங்கள் சொன்னது போல் இடப்பக்கம் திரும்பி மீண்டும் இறங்க முயற்சிக்கிறோம். விமானத்தில் எரிபொருள இல்லை.'

அவர்கள் பேசிய அழகு புரிகிறதா? கொலம்பியா நாட்டிலிருந்து வரும் விமானம். ஒன்றரை மணி நேரம் வெறுமனே கிழக்கு கடற்கரை மேல் சுற்றிய விமானம். எரிபொருள் எத்தனை குறைவாய் இருந்திருக்கும். மூடுபனி, காற்று, ஒன்றும் தெரியாத இரவு நேரம் வேறு. எரிபொருள் இல்லை என்று அலறியிருக்க வேண்டாமா!. கட்டுப்பாட்டாளருக்கு பதில் கூறிவிட்டு எரிபொருள் இல்லை என்றால் இயக்குநருக்கு அவர்கள் அவசரமும் ஆபத்தும் புரியுமா?

ஹோட்டலில் சாப்பிடும்போது விக்கல் எடுத்தால் பரிமாறுபவரிடம் 'கோபியுடன் பில் தாங்க. குடிக்க தண்ணி வேணும்' என்றால் உங்கள் அவசரம் அவருக்கு எப்படி புரியும்? அவர் மெதுவாகத் தான் தருவார். நீங்கள் விக்கிக்கொண்டு கிடக்கவேண்டியது தான்.

விமான விபத்திற்கான காரணத்தை ஆய்வு செய்த அதிகாரிகளிடம் ஜேஎஃப்கே விமான நிலைய கட்டுப்பாட்டாளர் 'எரிபொருள் இல்லை என்று ஏவின்கா விமானிகள் ஒரு செய்தியாக கூறுகிறார்கள் என்று தான் நினைத்தேன். அவர்கள் அவசரம் சத்தியமாக தெரியவில்லை' என்று கூறினார்.

மொழி வல்லுநர்கள் இதை 'மட்டுப்படுத்தப்பட்ட பேச்சு' (Mitigated speech) என்கிறார்கள். சொல்ல நினைப்பதை அப்படியே சொல்லாமல் சர்க்கரை தடவி, குழைந்து அதன் அர்த்தமும் அவசரமும் தெளிவாக்காமல் பேசுவது மட்டுபடுத்தப்பட்ட பேச்சு. பணிவாக பேசும் போது, குற்ற உணர்ச்சி அல்லது தர்மசங்கட நிலையில் பேசும் போது, உயர் அதிகாரியிடம் பேசும் போது இப்படி பேசுகிறோம்.

உங்கள் மேலதிகாரியிடம் அவசர உதவி தேவைப்பட்டால் 'ஐயா, உங்களுக்கு நேரம் இருந்து, வேறு வேலை இல்லை என்றால் இதை கொஞ்சம் பார்க்க முடியுமா' என்று கேட்டால் அவர் எப்படி பார்ப்பார். உங்கள அவசரத்தை எப்படி புரிந்து கொள்வார்?

வாழ்க்கையில் என்றால் பரவாயில்லை. வியாபாரத்தில், விமானத்தில் இதுபோல் மட்டுப்படுத்தப்படுத்தி பேசினால் தொபுக்கடீர் என்று விழுந்து படாத இடத்தில் பட்டுக்கொள்ள வேண்டியதுதான். வியாபாரத்தில் தவறுகள் நடப்பதும் நடந்த தவறை யாரும் தடுக்காமல் இருப்பதும் பலர் மட்டுப்படுத்தி பேசுவதால் தான்.

நிறுவனத்தில் நிர்வாகம் புதிய உத்தியை வடிவமைக்கும் போது அது சரியில்லை என்பது விற்பனைக் குழுவிற்கு தெரிந்தாலும் 'செய்யலாம் ,கொஞ்சம் ஆபத்து இருக்கு. ஆனா முயற்சி பண்ணி பார்க்கலாம்' என்று குழைந்தால் நிர்வாகத்திற்கு தங்கள் தவறு எப்படி புரியும்? நிறுவனம் தான எப்படி உருப்படும்?

மட்டுப்படுத்தப்பட்ட பேச்சை ஒழிக்க, தவறு நடக்கும் போது தைரியமாக தட்டிக் கேட்கும், கேள்வி கேட்க தயங்காத நிறுவனக் கலாசாரத்தை உருவாக்கவேண்டும். உழைக்கும் ஒவ்வொரு ஊழியரும் பயமில்லாமல் தங்கள் மனதில் பட்டதை ஒளிவு மறைவில்லாமல் பேசும் வழக்கத்தை நிர்வாகம் வளர்க்கவேண்டும்.

ஏவின்கா விமானிகள் செய்த தவறு போல் இனியும் நடக்காமல் தவிர்க்க விமான நிறுவனங்கள் உதவியாளர்களுக்கு குழு வள நிர்வாக பயிற்சி (Crew Resource Management Training) என்கிற சிறப்பு பயிற்சியளிக்கத் தொடங்கியிருக்கின்றன. அவசர காலத்தில் ஆபத்து நேரத்தில் எப்படி ஆணித்தரமாய் பேசி தகவல் பரிமாற்றத்தை தெளிவாக செய்யவேண்டும் என்பது இந்த பயிற்சி. விமானி தவறு செய்யும்போது உதவியாளர் 'நீங்கள் செய்வது கவலை அளிக்கிறது' என்று கூறவேண்டும். அவர் உணரவில்லையென்றால் 'நிலைமை மோசமாகிறது கப்டன்' என்று கடுமையாகக் கூறி அதையும் விமானி கண்டுகொள்ளாத போது விமான கட்டுப்பாட்டை தன் வசம் எடுத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். கதவை திறந்து விமானி கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்கள் என்று கூறவில்லை. நிறுவனங்களும் இதுபோன்ற பயிற்சிகளை ஊழியர்களுக்கு அளிக்கலாம்.

மட்டுப்படுத்தப்பட்ட பேச்சை மட்டுப்படுத்த நிறுவன நிர்வாகம் இன்னொன்றும் செய்யலாம். விபத்துக்குள்ளான விமானம் ஒன்றை வாங்கி அதை நிறுவன வாசலில் நிறுத்தலாம். மட்டுப்படுத்தி பேசினால் விமானம் போல் நிறுவனம் தரை தட்டி, வாயில் நுரை தள்ளும் என்று அனைவருக்கும் உணர்த்துவதற்காக!

# இந்தியக் கார்களின் இறக்குமதி பாதிப்பு!

இந்தியாவிலிருந்தே அதிக எண்ணிக்கையில் கார்களை இலங்கை இறக்குமதி செய்கிறது. தற்போது இலங்கை இறக்குமதி கார்களுக்கான சுங்க வரியை அதிகரித்துள்ளது. இதனால் இந்திய கார் இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளது.

மாருதி சுஸூகி நிறுவனத்தின் அனைத்து வகை கார்களும் இங்கு அதிக எண்ணிக்கையில் பயன்படுத்தப்படுகின்றன. சென்னையை அடுத்த ஒரகடத்தில் உள்ள ஆலையிலிருந்து இலங்கைக்கு கார்களை ஏற்றுமதி செய்கிறது ரெனால்ட்.

கடந்த நிதி ஆண்டில் மட்டும் இலங்கை இந்தியா விலிருந்து ரூ.4,700 கோடிக்கு கார் இறக்குமதி செய்தது.


தற்போது இலங்கைஅரசு கார்களுக்கான சுங்க வரியை 150 சதவீதத்திலிருந்து 175 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இலங்கையில் கார்களுக்கான சந்தை வாய்ப்பு அதிகரித்து வருகிறது. 2015-ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து 28 ஆயிரம் கார்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இது கடந்த நிதி ஆண்டில் 1.15 லட்சமாக அதிகரித்தது.

கார்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக இலங்கையில் முதலீடு செய்யுமாறு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளது. குறிப்பாக ஓட்டோமொபைல் நிறுவனங்கள் இலங்கையில் ஆலை அமைக்காவிடினும் அங்கு அசெம்பிளி பிளாண்ட் அமைக்கலாம் என அறிவித்துள்ளது. இந்நிலையில் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுங்க வரி உயர்த்தப்பட்டுள்ளதாக ஆட்டோமொபைல் துறையினர் தெரிவிக்கின்றனர்.

சீன கார் தயாரிப்பு நிறுவனமான ஜீலி, இந்தியாவின் மாருதி சுஸூகி நிறுவனத்துக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையிலான கார்களை இலங்கையில் விற்பனை செய்கிறது.



சுங்க வரியை அதிகரித்துள்ள இலங்கை அரசு, கார்களில் ஏர் பேக்குகள் மற்றும் ஆன்டி-லாக் பிரேக்கிங் சிஸ்டம் உள்ளிட்டவை கட்டாயம் இடம்பெற வேண்டும் என புதிய விதிமுறையை போட்டுள்ளது. இதனால் கார்களின் உற்பத்தி விலை அதிகரிக்கும். இந்நிலையில் சுங்க வரி உயர்வால் கார் விலை அதிகரிக்கும்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி | 6,325.57 | 6,324.10 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,521.76 | 3,555.02 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 14,981.662 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** எஸ் எம் பி லீசிங் (X) (0.40), ஹெல்கேர்(52.90), ஹபுகஸ்தேன்(19.20), ரேனுகா பூட்ஸ்(X), மேர்சன்டைல் இன்(2580.30).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** டபுளு டைமன்ட்ஸ்(1.60), சிற்றி ஹவுசிங் (7.30), சொப்ட் லொஜிக் லைவ்(19.00), ரெஸ் அக்ரோ (X) (1.20), மஸ்கெலிய(7.40).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 146.85 | 150.60 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 184.05 | 190.42 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 154.68 | 160.67 |
| சுவிஸ் பிராங் | 143.42 | 149.24 |
| கனேடிய டொலர் | 110.54 | 114.97 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.43 | 113.34 |
| சிங்கப்பூர் டொலர் | 102.67 | 106.49 |
| ஜப்பான் யென் | 1.27 | 1.32 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை | 2.20 |
| ஐக். அரபு இராச்சிய திராம் | சுட்டி விலை | 40.48 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






பரிகாசம் செய்பவர்களை, என்ன செய்யலாம்...? வாக்குவாதம் செய்யலாம் மௌனமாக கடந்து செல்லலாம் அல்லது அவர்கள்புருவம் உயர்த்தும் வண்ணம் வெற்றியைப் பரிசளிக்கலாம். ஆம், வெற்றிவாள் மட்டுமல்ல... அதுகேடயமும் கூட. கிண்டல்கள், பரிகாசங்கள் எல்லாவற்றையும் தன்னில உள்வாங்கிக் கொண்டு, கரையச் செய்யும் தன்மை கொண்டது அது. தத்துவார்த்தமாக ஆராய்ந்தால், ஆப்ரகாம் லிங்கன் தொடங்கி பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற மாரியப்பன் வரை வெற்றியில்தான் கிண்டல் சொறகளைக் கரைத்து இருக்கிறார்கள்.

இந்தத் தத்துவங்கள் எல்லாம் அந்தச் சிறு வயதில் அம்முவுக்குப புரிந்ததா என்று தெரியவில்லை. ஆனால், அவரும் கிண்டல்களைக் கரைக்க இந்த வெற்றியைத்தான் தேர்ந்தெடுத்தார். கண்ணீரைக் கொண்டு கவலைகளைக் கரைக்க முடியாது என்று ஆனபின், அவர் முன் வைத்தது வெற்றியை மட்டும்தான்.

**கிண்டலுக்கு உள்ளாக்கப்பட்ட அம்மு!**

அடிப்படையில் ஆண்களால் கட்டமைக்கப்பட்ட இந்தச்சமூகம், நாகரிகத்தின் பொற்காலத்தில் இருக்கிறோம் என்று பிதற்றிக் கொள்ளும் இந்தச் சமூகம், இன்றும் கூட நடிகர்களுக்குச் சமமான மரியாதையை நடிகைகளுக்குத் தருவதில்லைதானே. நடிகைகளைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்றஎண்ணம் தானே இன்றும் இருக்கிறது. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், ஐந்து தசாப்தங்களுக்கு முன் நடிகைகளை இந்தச் சமூகம் எப்படிப் பார்த்து இருக்கும்? அதுவும் சிறுசிறு வேடங்களில் நடிக்கும் ஒரு பெண் குறித்து சமூக மதிப்பீடுகள் எப்படியானதாக இருந்து இருக்கும்...? நிச்சயம் பரிகாசம்செய்து இருககும் தானே... அவதூறான வார்த்தைகளை அள்ளி வீசி இருக்கும் தானே... ஆம், இது அனைத்தையும் அந்த நாட்களில் சந்தியா சந்தித்தார். சந்தியா மட்டும் அல்ல... துரதிர்ஷ்டமாக பள்ளி நாட்களில் அம்முவும் கூடதான். இதை, ஜெயலலிதாவே ஒரு பேட்டியில் பகிர்ந்து இருக்கிறார். "சிலபணக்கார வீட்டுப பெண்கள் என்னைக் கிண்டல் அடித்தார்கள். என் அம்மா சிறுசிறு வேடங்களில் தானேநடித்தார். இதை வைத்து என்னைப் பரிகாசம் செய்தார்கள்."

இந்தக் கிண்டல் சொற்களால், அம்மு முடங்கிப்போய் விடவில்லை யாரிடமும் தர்க்கமும் செய்யவில்லை அதை மௌனமாகவும் கடந்து செல்லவில்லை. அவர் மூன்றாவதைத் தேர்ந்தெடுத்தார். அனைத்துப் பாடங்களிலும் முதல் இடம்பிடித்தார். பள்ளியில் மிகவும் ஒழுக்கமான மாணவியாக இருந்து, அனைத்து ஆசிரியர்களின் செல்லப்பிள்ளையாக ஆனார். தன்னைத்தானே அந்த வயதி லேயே வெற்றியின் மூலம் ஒரு வலுவானவராக வடிவமைத்துக் கொண்டார். ஆம், இப்போது நீங்கள் அம்முவை பரிகாசம் செய்வது அவ்வளவு சுலபமானது அல்ல... அவர், உங்களுக்கு முன் ஒரு வெற்றியை வைத்திருக்கிறார். அவரை, கிண்டல்செய்ய வேண்டுமானால்... நீங்கள் அதைக்கடந்து செல்ல வேண்டும். அந்த வயதில் அவருக்கு வெற்றி மட்டும் தான் அரணாக இருந்தது.

இந்தக் கிண்டல்களினால், அவருக்கென்று அந்தவயதில் பெரிதாக நண்பர்கள் யாரும் இல்லை. பள்ளிக்காலங்கள் பெரும்பாலும் தனிமையில் தான் அவருக்குச் சென்றன. கிடைத்த ஒரே நண்பரும் அவருக்குத துரோகத்தைப் பரிசளித்துச் சென்றார். அரசியலில், பலதுரோகங்களை ஜெயலலிதாவாக சந்தித்து இருக்கிறார். ஆனால், அம்முவாக 13 வயதில் அவர சந்தித்த முதல் நம்பிக்கை துரோகம், அவர் பல நாட்கள் தனிமையில் அழ காரணமானது.

**முதல் துரோகம்!**

அப்போது அவரது விடுதி. நகர், சிவஞானம் தெருவில் இருந்தது. அவர் வீட்டிலிருந்து சிலவீடுகள் தள்ளி இருந்த, இவரை விட இரண்டு வயது மூத்த பெண் ஒருவர், அம்முவுக்குத் தோழியாகிறார். அதுவரை அவருக்குப் பெரிதாக தோழிகள் என்றுயாருமில்லை. இந்தநட்பு, உண்மையில் அம்முவுக்கு மனமகிழ்ச்சியைத் தருகிறது. சந்தோஷமாக தன் சுகதுக்கங்களை பகிர்ந்து கொள்ளத் தொடங்குகிறார். ஆனால், அந்தப் பெண் தன்னுடன் நட்பானதற்கு வேறொரு காரணம் இருக்கிறது என்பது, அம்முவுக்குச் சில நாட்கள் கழித்துத்தான் தெரிகிறது.

ஆம், அந்தப் பெண் அம்மு வீட்டின் அருகே இருந்த ஒரு ஜெயின் பையனை நேசித்தார். அம்மு வீட்டு மொட்டைமாடியிலிருந்து பார்த்தால்



தான், அந்தப் பையன் வீடு தெரியும். அதனால், தினமும் அந்தப் பெண் அம்மு வீட்டுக்கு வந்து, மொட்டைமாடியிலிருந்து நின்று, கொண்டு அந்தப்பையனிடம் சைகையில் பேசுவார். இதைச் சில நாட்கள் கழித்துத் தான் அம்மு கண்டுபிடித்தார். இது குறித்து அந்தப் பெண்ணிடம் அம்மு கேட்க, இதை அவரும் ஒப்புக் கொண்டார்.

"நாங்கள் இருவரும் காதலிக்கிறோம். எனக்காக அந்தப் பையனிடம், தூது செல்ல முடியுமா? தான் வராத நாட்களில், அந்தப் பையனிடம் தான் வராத காரணத்தை சைகையில்சொல்ல முடியுமா?" என்று, அந்தப் பெண், அம்முவிடம் தங்கள் காதலுக்கு உதவி கேட்கிறார்.

உண்மையில், இது அம்முவுக்குச் சுவாரஸ்யமானதாக இருக்கிறது. தன்னைவிட இரண்டு வயது மூத்த பெண தன்னிடம் உதவி கேட்பதே, அவருக்குச் சிலிர்ப்பூட்டுகிறது. இதன் விளைவுகள் எதனையும் யோசிக்காமல், அந்தப்பதின் பருவ காதலுக்குத் தூது செல்ல அமமு சம்மதம் தெரிவிக்கிறார் சொல்லப்போனால், அந்த வயதில் அவர் தெரிவித்த இந்தச்சம்மதம் தான், துரோகச்சூழ் இவ்வுலகு குறித்து அவருக்கொரு புரிதல் உண் டாகக் காரணமாக அமைகிறது.

அந்தத்தோழி, சில நாட்கள் அம்மு வீட்டுக்கு வரவில்லை, தான் வராத காரணத்தைஅந்தப்பையனிடம்தெரிவித்து விடும்படி அம்முவிடம் சொல்கிறார். அம்முவும் இதை அந்தப் பையனிடம் மொட்டை மாடியில் நின்று சைகையில் தெரிவிக்கிறார். ஆனால், துரதிர்ஷ்டமாக இதை, அம்மு வீட்டுக்கு வரும் பால்காரர் பார்த்து விடுகிறார்.

இந்த விடயத்தை சந்தியாவிடம் சொல்லி இருந்தால் கூட, அம்மு உண்மையைச் சொல்லிச் சமாளித்து இருப்பார். ஆனால் பால்காரர், அம்முவின் தோழி வீட்டுக்குச் சென்று, "இனி உங்கள் பெண்ணை அந்த நடிகை வீட்டுக்கு அனுப்பாதீர்கள். அம்முவின நடவடிக்கை சரியில்லை... அவர் மாடியில்நின்று கொண்டு ஒரு பையனிடம் தினமும் சைகையில் பேசிக் கொண்டு இருக்கிறார்" என்று சொல்லி விடுகிறார். அத்துடன் அந்தப் பெண் அம்மு வீட்டுக்கு வருவது நின்று விடுகிறது.

தோழி பலநாட்கள் வீட்டுக்கு வராததால்... அம்மு, அந்தத் தோழியின் வீட்டுக்குச் செல்கிறார். அந்தத் தோழியின் பெற்றோர், அந்த பால்காரர் சொன்னதை அப்படியே சொல்லி அம்முவை சரமாரியாகத் திட்டி விடுகிறார்கள். அந்தச்சமயத்தில், தோழி உண்மையைச் சொல்லித் தன்னைக் காப்பார் என்று அம்மு தன் தோழியையே பார்க்கிறார். ஆனால், அந்தத் தோழி அம்முவின் பார்வையைச் சந்திக்கத் திராணியின்றி அமைதியாகத் தலைகுனிந்து நிற்கிறார்.

வசைச் சொற்கள் தன்னை வந்து தாக்கிய அந்தச் சமயத்திலும் கூட அம்மு, தன்தோழியைக் காட்டிக் கொடுக்கவில்லை. அவர் செய்தது வீட்டுக்குச் சென்று, தனிமையில் வெகுநேரம் அழுதது மட்டும் தான். நம்பிக்கை துரோகம் என்ற பதத்துக்கான அர்த்ததை, முதன் முதலாக அம்மு உணர்ந்தது அப்போது தான். "துரோகம் இவ்வளவு வலியைத்தருமா? என்று வெகுநாட்கள் இதை நினைத்து அழுதிருக்கிறேன்" என்று இந்தச்சம்பவத்தைப் பின்னாளில் ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார் அம்மு.

ஏன் ஜெயலலிதா மற்ற தலைவர்களைப் போல் அதிகம் பேசமாட்டேன் என்கிறார்... ஏன் அவர் யாரையும் நம்புவது இல்லை... ஏன் எப்போதும் அவர் தனக்குத்தானே ஓர் அரணை அமைத்துக்கொண்டு அதனுள்ளேயே இருக்கிறார்... என்ற நம் பலகேள்விகளுக்கான விடை, இந்தச் சம்பவத்தால் கூட இருக்கலாம். ஆம், மனிதர்களின் ஆளுமையைத் தீர்மானிப்பதில், வடிவமைத்ததில்... சிறுவயதில் அவர்கள்எதிர் கொண்ட நிகழ்வுகளும் இருக்கிறது தானே...? (தொடரும்...)

# தமிழ் சினிமா வரலாறு 318

## "எஞ்சிய வாழ்நாளை தமிழ்நாட்டில் கழிப்பேன்"- பத்மினி

..இன்னும் சில வருடங்களில் நான் தமிழ்நாட்டுக்கு திரும்பி வருவேன். என்னுடைய எஞ்சிய காலத்தை இந்த மண்ணில் கழிப்பேன் என்று நடிகை பத்மினி கூறினார்.

கணவர் இறந்த துயரம் பத்மினியை வெகுவாக பாதித்தது. எனினும் தன் ஒரே மகன் பிரேம் ஆனந்தை நன்கு படிக்க வைக்க வேண்டும். அவன் எதிர்காலத்தை நன்கு அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று, உறுதி எடுத்துக் கொண்டார்.

அதேபோல் மகனை உயர் பட்டப்படிப்பு படிக்க வைத்தார். இப்போது பிரேம் ஆனந்த் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் உலகப் புகழ்பெற்ற டைம் ஆங்கில பத்திரிகையில் பத்திரிகையாளராகவும் புகைப்படக்கலைஞராகவும் வேலை பார்க்கிறார். அவர் எடுத்த போட்டோக்கள் பல பரிசுகளைப் பெற்றிருக்கின்றன.

**பத்மினியின் பேரன்**

பிரேம் ஆனந்துக்கு திருமணம் ஆகிவிட்டது. மனைவி கேரளாவைச் சேர்ந்தவர். வைத்தியருக்கு படித்தவர். இந்தப் தம்பதிகளுக்கு ஒரே மகன். (அதாவது பத்மினிக்கு ஒரே பேரன்.) அவர் அமெரிக்காவில் படித்துக்கொண்டிருக்கிறார்.

பத்மினி தொடர்ந்து நாட்டியப் பள்ளி நடத்தினார்.

**பூவே பூச்சூடவா**

கேரளாவின் புகழ்பெற்ற டைரக்டரான பாசில் 1985 இல் பூவே பூச்சூடவா என்ற படத்தை தமிழில் தயாரித்தார். இதன் கதாநாயகியாக நதியா அறிமுகம் ஆனார்.

நதியாவின் பாட்டி வேடத்தில் பத்மினி நடித்தால் நன்றாக இருக்கும் என்று பாசில் நினைத்தார். தன் விருப்பத்தை பத்மினிக்குத் தெரிவித்தார்.

கணவர் இறந்த பின் படத்தில் நடிக்க பத்மினி விரும்பவில்லை. எனினும் குடும்ப நண்பரான பாசில் வேண்டுகோளை தட்ட முடியவில்லை. எனவே சென்னைக்கு வந்து, பூவே பூச்சூடவா படத்தில் நடித்தார். அவர் கடைசியாக நடித்த படம் அதுதான்.

**பேட்டி**



பத்மினி இடையிடையே சென்னைக்கு வந்து போனார். 1991 இறுதியில் அவர் சென்னைக்கு வந்திருந்தபோது தினத்தந்தி நிருபருக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

1961இல் குருவாயூர் கோவிலில் என் திருமணம் நடந்த போது 25 ஆயிரம் பேர் திரண்டதைப் பார்த்து வியந்தேன். சினிமாவில் எனக்கு இத்தனை ரசிகர்களா? என்று பரவசப்பட்டேன்.

**கணவர் மறைந்த அந்த நாள்**

என் மகன் பிரேமுக்கு 19 வயதான சமயத்தில் அவன் அப்பா திடீரென்று மாரடைப்பால் எங்களைப் பிரிந்து சென்று விட்டார். அன்று காலை வழக்கத்தை விட சற்று முன்னதாகவே வைத்தியசாலைக்கு புறப்பட்டார்.

யூஸ் சாப்பிட்டு விட்டு போங்களேன் என்றேன். எனக்கு டைம் ஆகிவிட்டது. என்று சொல்லி புறப்பட்டு விட்டார். இப்போது கூட அவர் சொன்ன அந்த வார்த்தையை யோசித்துப் பார்க்கிறேன். தனக்கான வேளை வந்து விட்டதாக அவர் சொன்னது போலவே அந்த வார்த்தை அமைந்திருந்தது.

(தொடரும்)

உங்களுக்கு சரியான ஆலோசனை வழங்கக்கூடிய மனிதர் இந்த உலகில் யார் இருக்கிறார்? அவர் நீங்களேதான். - ஜெர்மானியப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நல்லவர்களின் பகையை விட கெட்டவர்களின் உறவு ஆபத்தானது

இந்த உலகில் மிகவும் ஆபத்தானது பகை. அது உறவைப் பாதிக்கக்கூடியது மட்டுமல்ல பேராபத்துக்களையும் தரவல்லது.

இதனாலோ என்னவோ பகை பற்றி நம் புலவர்கள் பலரும் பேசியுள்ளனர். வள்ளுவர் பகை என்று தனி அதிகாரத்தை தந்தார்.

பாரதியாரோ; சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல் என்றார். பகை கோபத்தினூடு வருவது. கோபம் தவிர்க்க முடியாத மனித உணர் வாயினும் அதனைத் தொடர்ந்தும் பேணி நிற்பது கெடுதிக்கு வித்திடும்.

பகை மூன்று வகையானது என ஒளவையார் பிரிவுபடுத்துகிறார். பாறைக் கற்கள் பிளவுபட்டால் எவ்வாறு அவை மீண்டும் ஒன்று சேராதோ அது போன்றது ஒரு பகை.

இன்னொரு பகை பொன்னின் பிளவு போன்றது. பொன்னானது பிளவுபட்டாலும் அதை ஒன்றுபடுத்த முடியும். அதற்காக சில வேலைகள் செய்ய வேண்டும்.

மூன்றாவது பகை கடலில், குளத்தில், ஆற்றில் உள்ள நீர் நிலைகள் மீது வில் கொண்டு அம்பு எய்தினால் அந்த அம்பானது நீரைக் கிழித்து அதனை விலத்தி செல்லும். எனினும் மறு கணத்தில் அந்த நீர் விலகல் ஒன்றுபட்டு விடும். இத்தகைய வில் பிடித்து நீர் கிழிய எய்துவது போன்ற பகை சான்றோர்களுடையது என்பது ஒளவையாரின் முடிவு.

இவை ஒருபுறம் இருக்க, நாம் இங்கு பேசுவதெல்லாம் நல்லவர்களின் பகையை விட கெட்டவர்களின் நட்பு ஆபத்தானது என்பதுதான்.

நட்பு நல்லதாயினும் அது யாருடைய நட்பு என்பது பற்றிப் பார்ப்பது அவசியம். கெட்டவர்கள் நட்புக் கொள்வார்களாயின் அதனால் நன்மை ஏற்படுவதை விட ஆபத்தும் தீமையுமே அதிகமாக இருக்கும்.

இதற்கு நல்ல உதாரணம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாதான். கோடிக்கணக்கான மக்கள் அவர் மீது அன்பும் பாசமும் கொண்டிருக்க, தீயவர்களை தன் நட்பாக்கியதால் அவரின் மரணமும் மர்மமாகிப் போயிற்று.

நல்லவர்கள் பகை கொண்டாலும் அவர்கள் ஒரு போதும் தீங்கு செய்யார். ஆகையால் நல்லவர்களின் பகை கூட ஆபத்தானதல்ல. ஆனால் கெட்டவர்கள் நட்புக் கொண்டால் அது நல்லவர்களின் பகையை விட ஆபத்தானதாகி விடும்.

இந்த நிலைமை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு மட்டுமல்ல ஈழத்தமிழர்களின் வரலாற்றிலும் இது பொருந்தக்கூடியதுதான்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தோல்விக்குள் கெட்டவர்களின் நட்பும் இருக்கவே செய்கிறது.

இப்போதுகூட தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கையோடு தாங்கள் அடைந்த இழப்புகளுக்கெல்லாம் உரிய தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றனர்.

அதிலும் சாமானிய மக்களின் நினைப்பெல்லாம் எங்களுக்காக எங்கள் அரசியல் தலைவர்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் விட மாட்டார்கள். தமிழ் மக்களுக்கான உரிமையை எப்படியும் எடுத்துத் தருவர் என்று திடமாக நம்புகின்றனர்.

அவர்களிடம் விமர்சனம் கிடையாது, ஆய்வு கிடையாது, என்ன நடக்கிறது என்பதைக்கூட அவர்கள் பார்ப்பதில்லை. மாறாக அவர்களிடம் இருப்பதெல்லாம் நம்பிக்கை மட்டுமே.

அந்த நம்பிக்கை எங்கள் அரசியல் தலைவர்களின் பிராணன் முழுமையும் தமிழ் மக்களின் நல்வாழ்வு, தமிழ் மக்களின் உரிமை என்பதாகவே இருக்கிறது என்பதுதான்.

ஆனால் உண்மை அதுவன்று. எங்களுக்கொரு கதை; அவர்களுக்கு இன்னொரு கதை. அங்கு ஒற்றை ஆட்சி; இங்கு சமஷ்டி. தமிழ் அரசியல் கைதிகளிடம் உங்களுக்காக நாங்கள் அரசிடம் குரல் கொடுத்துக் கொண்டே இருக்கிறோம்;

அரசிடம் தமிழ் அரசியல் கைதிகளை அவசரப்பட்டு விடுதலை செய்துவிடாதீர்கள். மாவீரர் தினத்தை அனுஷ்டித்தால்தான் தமிழ் மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைப்பர். ஆகையால் அதற்கு இடம் தாருங்கள்; நாங்கள் ஒற்றையாட்சிக்கு இணங்குகின்றோம்.

அப்பாடா எத்தனை நடிப்பு. எத்தனை நாடகம். என்ன செய்வது எங்கள் தலைவிதி நம்பிக் கெடுவது என்றால் யார் என்ன செய்ய முடியும்.

# தமிழர்கள் தனிநாட்டை கோரவில்லை உரிமைகளையே கோருகின்றனர்

(கொழும்பு)

மலையக பெருந்தோட்டத் தமிழ் மக்கள் தனிநாட்டு கோரிக்கையை முன்வைக்கவில்லை எனவும், மாறாக அவர்கள் இந்த நாட்டின் ஏனைய பிரஜைகளுக்கு கிடைக்கும் உரிமைகள் தங்களுக்கும் வேண்டுமென்றே வேண்டுகோள் விடுப்பதாகவும் தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளது.

அடுத்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு, சமுதாய அபிவிருத்தி அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டணியின் நடாளுமன்ற உறுப்பினர் ம.திலகராஜ் இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

சுதந்திரத்தின் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் மலையகத் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டபோதிலும் அம்மக்கள் அமைதியாக தங்களது உரிமைகளைபெற்றுக்கொள்ள முயற்சித்ததாகவும் அவர் வலியுறுத்தினார்.

"ஒரு தாயிடம் அடி வாங்கும் குழந்தையை போன்றவர்களே மலையக பெருந்தோட்டத் தமிழ் மக்கள். எவ்வளவு அடித்தாலும்நாட்டை விட்டு செல்வதற்கு எத்தனித்ததில்லை. நாங்கள் தனிநாட்டை கோரவில்லை. எமக்கு பிரஜாவுரிமையை வழங்கியதுபோன்று ஏனைய உரிமைகளையும் தாருங்கள் என்றே நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

தொடர்ந்து உரையாற்றிய நாடளுமன்ற உறுப்பினர்,பிரச்சினைகளை சுட்டிக்காட்டுவதற்கு ஒன்றுபடும் பிரதிநிதிகள் பிரச்சினைகளை தீர்வு காண்பதற்கு ஒன்றுபடுவதில்லை எனவும் குற்றம்சாட்டினார்.(இ-3)

# பண நெருக்கடி- விதிமுறையை தளர்த்துமாறு இந்திய அரசிடம் பிற நாடுகளும் கோரிக்கை

வெளிநாட்டு சுற்றுப் பயணிகள் பணத்தைப் பெறுவதற்கு இருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு இந்திய அரசாங்கத்திடம் இலங்கை உள்ளிட்ட பல வெளிநாட்டுத் தூதரகங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தியாவில் 1000 ரூபாய, 500 ரூபாய் நாணயத்தாள்கள் செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ள நிலையில், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போது இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளதன்படி, தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரம் மூலம் நாளொன்றுக்கு அதிகபட்சம் 2500 ரூபாய் மாத்திரமே மீளப் பெற முடிவதுடன், வெளிநாட்டவர்கள் வாரம் ஒன்றுக்கு கடவுச்சீட்டை காண்பித்து 5000 ரூபாவுக்கு இணையான வெளிநாட்டு நாணயத் தாள்களை மாத்திரமே, மாற்றிக் கொள்ள முடியும்.

இதனால், சுற்றுலாப் பயணிகள் கடும் நெருக்கடிகளை எதிர் கொண் டுள்ளனர்.

நாணயத்தாள்கள் செல்லுபடியற்றதாக அறிவிக்கப்பட்ட பின்னர், பணமாற்றும் நடைமுறைகளில் காணப்படும் சிக்கல்களினால் தாம் தவிப்பதாக புத்தகாய உள்ளிட்ட இடங்களில் இருந்து எமது நாட்டவர்கள் பலரிடம் இருந்து தொலைபேசி அழைப்புகள் கிடைத்தன.

இது தொடர்பாக கவனிக்கும்படி இந்திய வெளி விவகார அமைச்சுக்கு கடிதம் எழுதியுள்ளோம். எம்மால் முடிந்தளவுக்கு எமது நாட்டவர்களுக்கு உதவ முயற்சித்தோம் என்று டில்லியில் உள்ள இலங்கை தூதரக உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு ஆண்டு தோறும் 3 இலட்சம் இலங்கையர்கள் சுற்றுலா வருகின்றனர். இவர்களில் 2 இலட்சம் பேர் யாத்திரிகர்களாவர்.

இலங்கையை விட, ஜப்பான் போன்ற நாடுகளில் இருந்தும், பௌத்த ஆலயங்களுக்கு யாத்திரிகர்கள் அதிகளவில் வருகின்றனர்.

நாணயத்தாள்கள் பெறுமதியற்றதாக்கப்பட்டதால், வெளிநாட்டு பயணிகள் பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளதாக, இந்தியாவில் உள்ள 157 வெளிநாட்டுத் தூதரகப் பணியகங்களின் சார்பில் கருத்து வெளியிட்ட பிராங் ஹான்ஸ் டானென் பேர்க் காஸ்ட்லானொஸ் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் கவனத்துக்கு தாம் இதனைக் கொண்டு சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# வெட்டுப்புள்ளிகள் வெளியாகின

2016 ஆம் ஆண்டு ஐந்தாம் தரபுலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பிரபல பாடசாலைகளில் தரம் 6 இற்கு அனுமதிப்பதற்கான வெட்டுப் புள்ளிகள் வெளியாகியுள்ளன.

தமிழ்மொழி மூலம்

யாழ்.இந்துக் கல்லூரி - 160, யாழ். மத்திய கல்லூரி- 152, யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை- 157, யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி -156, யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி-152, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி- 162, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை-159, மட்டக்களப்பு செ௭ன். மைக்கல்ஸ் கல்லூரி- 161, மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம்- 152, மட்டக்களப்பு வின்சன்ட் பெண்கள் உயர்தரப் பாடசாலை- 157, மட்டக்களப்பு செ௭ன். செசிலியர்ஸ் பெண்கள் பாடசாலை-152, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - 162, கோணேஸ்வரா இந்துக் கல்லூரி -155, திருமலை ஸ்ரீ சண்முகா வித்தியாலயம் -159, கொழும்பு றோயல் கல்லூரி-179, கொழும்பு விவேகானந்தா வித்தியாலயம்-160. (இ-3)

# அமைச்சரவையில் திடீர் மாற்றம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சுவிட்சர்லாந்து விஜயத்தின் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக வார இறுதி பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனவரி மாதம் சுவிட்சர்லாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் பின்னர் அமைச்சரவையில் நிச்சயமாக மாற்றம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை மாற்றங்கள் குறித்து அரசாங்கத்தின் தலைவர்கள் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

அமைச்சுக்களினால் ஆற்றப்பட்டுள்ள சேவைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இராஜாங்க அமைச்சர்களுக்கு ஏற்பட்டுள்ள பிணக்குகளை தீர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

செயற்றிறனற்ற அமைச்சரவை செயலாளர்களும் நீக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# அமெரிக்காவில் பசில்

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் அமெரிக்கா சென்றுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளர் இந்த தகவலை நேற்றைய தினம் தெரிவித்துள்ளார்.

சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல பசில் அனுமதி கோரியிருந்த வேளையில், கடந்த வாரம் கொழும்பு மேல் நீதிமன்றம் மூன்று மாதங்கள் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை



## கருவில் திரு உடையார்

ஆத்மதாகம் கொண்ட மனிதன் இந்த நினைப்பிலே உருகி நிற்கும் போது, அந்த நினைப்பானது குருவை அவன் முன் கொண்டு வரும். குரு வருவதற்கு வேறு மார்க்கமேதும் கிடையாது.

ஒர் ஏற்புத் தன்மை இருந்தால் குருதானே இங்கே வருவார். எனவே, குருவைத் தேடி அலைய வேண்டியதில்லை. தன்னை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உயரட்டும். தானாகவே அவனுடைய எண்ணம் உயர்நிலையில் பக்குவப்படட்டும். குரு தானாக வருவார்.

மனிதனுடைய எண்ணம் என்பது என்ன? அது பிரம்மத்தினுடைய சாயை தானே? இயக்கம் தானே எண்ணமாக, அறிவாக இருக்கிறது? உணர்ந்த நிலையில் அறிவாகவும், மயக்க நிலையில் மனமாகவும் அதுவே குறிப்பிடப்படுகிறது. அது தானாக அமர்ந்த நிலையில் பிரம்மமாக உள்ளது. பக்குவப்பட்டவன் நினைத்தால் குருவர வேண்டியதுதானே? (Fraction demands and Totality Supplies).

நம் முன்னோர்கள் செய்த தவப்பயனே குண்டலினி யோகம்.

அவ்வாறு குரு வரவேண்டியதைத் தடுப்பது எது? ஏற்கனவே எண்ணியிருந்த எண்ணங்களால் உருவான ஒரு மேடு மத்தியிலே நிற்கிறது. இதைக் கணித்து உணர்ந்து கொண்டு நல்லறிவேயே மனதை நிலைக்கச் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். உங்களுடைய நல்ல கர்மத்தின் விளைவாகத் தான் நீங்கள் இந்த மனவளக் கலையை ஏற்று இருக்க முடியும். அது நீங்கள் நேரடியாகச் செய்த தவப்பயனாக இருக்கலாம் அல்லது உங்களது பெற்றோர்களுடைய தவப்பயனால் உங்களுக்கு இந்த உணர்வு நிலை கிட்டியிருக்கலாம். பெற்றோர்கள் மூலமாகக் கிட்டும் போது அதை நமது தமிழகத்துப் பெரியவர்கள் "கருவில் திரு உடையார்" என்று ஒரே சொற்றொடரில் வர்ணித்தார்கள்.

# காலிறுதிக்குள் நுழைந்தது திக்கம் இளைஞர் வி.கழகம்



மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர்கிங் -2016 உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் நடை பெற்ற லீக் போட்டியில் இளவாலை சென்.ஹூட்ஸ் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

காலிறுதிக்குள் நுழைந்தது திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தேசிய ரீதியாக இடம்பெறும் பிரிவு 2 தொடரில் அரையிறுதிக்கு தகுதி பெற்றது குருநகர் பாடும்மீன்



இரத்தினபுரிமாநகர சபை மைதானத்தில் நடைபெறும் தேசிய ரீதியாக இடம்பெற்ற பிரிவு 2 உதைபந்தாட்ட தொடரின் 09.12.2016 அன்று நடைபெற்ற மூன்றாவது சுப்பர் 8 போட்டியில் குருநகர் பாடும்மீன் அணி இரத்தினபுரி அணியை எதிர்த்தாடியது. போட்டி நேர முடிவில் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது. இதன் முதல் அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்தது குருநகர்பாடும்மீன் அணி. (இ)

# FA கிண்ண உதைபந்தாட்டம் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது மல்லாகம் நியூ வோறியர்ஸ்



FA கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட போட்டியில் (12.10.2016) அன்று நடைபெற்ற போட்டியில் மல்லாகம் நியூ வோறியர்ஸை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் மோதியது. இப் போட்டி 1-1 சமநிலை அடிப்படையில் தண்ட உதையில் 5-4 என்ற முன்னிலையில் நியூ வோறியர்ஸ் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் தனது இவ்வாண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம் நயினாதீவு அண்ணா விளையாட்டுக் கழகத்திற்கு ரூபா இருபதாயிரம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதையும் நிகழ்வில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ராஜா நணசிங்க, நிர்வாக உத்தியோகத்தர் அ.அனந்தகுமார், விளையாட்டுக்கழக நிர்வாகி பொ.ஜெயராஜ் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# சுப்பர் 8 சுற்றுக்குள் நுழைந்தது வதிரி டயமன்ஸ் வி.கழகம்



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் மூன்றாம் சுற்று ஆட்டங்கள் அல்வாய் மனோகரா வி.கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

09.12.2016 வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் வி.க. எதிர்த்து அண்ணாசிலையடி இளைஞர் வி.க. மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் போட முயற்சித்த போதும் இரு அணியும் எந்த வித கோல்களையும் போடவில்லை.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதி ஆட்டத்தில் டயமன்ஸ் அணி பல கோல் சந்தர்ப்பங்களை தவறவிட்ட போதும் 38 ஆவது நிமிடத்தில் நுசிகரன் தனக்கு கிடைத்த கோல் சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி கோல் போட்டார். தொடர்ந்து அண்ணாசிலையடி இளைஞர் வி.கழகம் போராடிய போதும் எந்தவித கோல்களையும் போட முடியவில்லை.

ஆட்ட நேர முடிவில் வதிரி டயமன்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சுப்பர் 8 சுற்றுக்குள் நுழைந்தது. இ

## இன்றைய போட்டிகள்

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் மூன்றாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டியில் பாசையூர் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நசரேத் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# மனோகரா வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர் நவஜீவன்ஸ் வெற்றி



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ் மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் சுற்று ஆட்டங்களில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து ஞானமுருகன் மோதியது.

நடைபெற்ற இப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்றது. (க)

## கல்முனையில்...

கல்முனையில் கடல் நீர் திடீரென ஊருக்குள் வந்ததால் அப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. நேற்று அதிகாலை 3 மணியளவில் கடல் நீரானது 100 மீற்றரளவில் ஊருக்குள் புகுந்துள்ளது.

இதனால் அதிகாலையில் மக்கள் அலறிக்கொண்டு பாதுகாப்பான இடம் நோக்கி ஓடினர்.

பெரியநீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை போன்ற இடங்களில் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரம் குடிமனைப் பகுதிக்குள் கடல்நீர் வந்துள்ளது.

இதில் கல்முனை சுனாமி நினைவுத் தூபி பகுதியையும் தாண்டி ஊருக்குள் கடல்நீர் வந்துள்ளதாக அப் பகுதி சமூகசேவையாளர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.

இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவுகின்றது. அத்தோடு வந்தகடல்நீர் உள்வாங்கப்படவில்லை.

இதேவேளை வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தினுள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடல் நீர் உட்புகுந்துள்ளது.

ஆலயத்தினை அடுத்து சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள கடற்கரையில் நேற்று அதிகாலை கடல் நீர் ஊருக்குள் புகுந்துள்ளது.

சுமார் 100 மீற்றருக்கும் கூடுதலான தூரம் கடலில் இருந்து கடல் நீர் ஊருக்குள் வந்துள்ளது.

இதனால் மக்கள் பரபரப்புடன் சுனாமியென்று பயந்து ஓடியுள்ளனர். ஆலயச் சூழலில் மண் புழுக்கள் இறந்து காணப்பட்டன. ஆலய ஒலி பெருக்கி மூலம் மக்களுக்கு அறிவித்தல் ...டுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடீஸ்வரன் ஸ்தலத்திற்கு விரைந்து ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி சேத விபரங்களைப் பார்வையிட்டார். அங்கிருந்த மீனவர்களது வலை மற்றும் தோணிகளும் வெகுவாக சேதமடைந்திருந்தன. (இ-3,5)

## வெடிபொருள்...

வெடிபொருளொன்று வெடித்ததில் அதன் சாரதி படுகாயமடைந்ததுடன் உழவு இயந்திரமும் சேதமடைந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது தாவது, உழவு இயந்திரம் மூலம் உழவு ...ய்து கொண்டிருந்த போது நிலத்தில் புதைந்திருந்த வெடிபொருள் வெடித்துளளது. இதில் உழவு இயந்திர சாரதியான வட்டக்கச்சி கல் மடுநகர் சம்புக்குளத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை சடானந்தம் (வயது 39) என்பவர் படுகாயம் அடைந்த நிலையில் பொதுமக்களினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் தகவலறிந்து அங்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-15)

## இளம் பிக்குமார்...

பிக்குமாருக்கான பயிற்சி நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சங்கைக்குரிய ஹங்கொடவில சோம தேரர் பிக்குமார் விடுதியை சாசனத்துக்கு அர்ப்பணிக்கும் புண்ணிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தர்.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கக் கூடிய அரசியலமைப்புடன், சமூக நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி அவர்கள் தெரிவித்தார் .

இப்போது, பல நாடுகளில் லட்சக்கணக்கான இலங்கையர் கள் அகதிகளாக இருப்பதுடன், வடக்கிலுள்ள அகதி முகாம்களில் ஆயிரக்கணக்கானோர் வாழ்ந்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்த மக்கள் மீண்டும் ஆயுதம் தூக்காதவாறு அனைவருக்குமான சமூக நியாயத்தை நிறைவேற்ற வேண்டுமெனவும் குறிப்பிட்டார் .

நீண்ட காலமாக இடம்பெற்ற அபிவிருத்தி ஏற்றத்தாழ்வுகள் காரணமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்கள் சிரமமான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் 25 மாவட்டங்களுக்கும் நியாயமான அபிவிருத்தி பயன்களை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகுமெனவும் தெரிவித்தார்.

சமயப் பணியில் ஈடுபட்டுள்ள விகாரைகளை பலப்படுத்தும் அரசாங்க கொள்கைக் கமைய தற்போதய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இன்று சில இளம் பிக்குமார்களின் செயற்பாடுகளால் பௌத்தர்கள் மிகவும் வருந்தத்தக்க நிலைக்கு முகங்கொடுத்துள்ளார் கள் எனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி அந்த சம்பவங்களை நாட்டுக்கும் உலகத்துக்கும் மறைக்க முடியாதெனவும் எமது நாட்டின் உன்னத வரலாற்று பெருமைகள் தொடர்பாக மகிழ்ச்சியடைவதனைப் போன்றே அதனை முன்னெடுத்துச் செல்வதற்காக எதிர் காலத்திலும் ஒழுக்கமிக்க, தர்மத்தைப் போற்றும் உன்னதமான பிக்குமார் தலைமுறையின் தேவை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார் .

பிக்குமார் பயிற்சி நிலையத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அந்த நிலையத்தின் நிறுவுனர் சங்கைக்குரிய மாவறலே பத்தீய தேரரை தரிசித்ததுடன், 150 பிக்குமார் தங்கக்கூடிய வசதிகளைகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள விடுதி திறப்பு விழாவிலும் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வில் அமரபுர சிறி சத்தம்ம யுக்திக்க பிரிவின் மகாநாயக்கர் நாக்குளுகமுவே பேமதிலக்காபிதான தேரர் உள்ளிட்ட துறவியர்கள், அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் பிரதேச மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். (செ-11)

## ஜனாதிபதியை விட...

தமது கையிலெடுக்கும் வாய்ப்பை இந்த சட்டமூலம் ஊடாக பிரதமர் பெற்றுக்கொள்வார்.

ஒருபுறம் இந்த சட்டமூலம் ஊடாக துறைமுக அதிகார சபை, ஸ்ரீலங்கா சுற்றுலாத்துறை, ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை, நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, அதேபோன்று வனவளத் பாதுகாப்பு சட்டம், வனஜீவராசிகள் சட்டம், இறக்குமதி அதிகார சபை, தொடர்பிலான சட்டங்களை தொடர்புபடுத்தாமல், அவற்றின் அனைத்து செயற்பாடுகளை கையகப்படுத்தும் வாய்ப்பு பிரதமருக்கு அல்லது தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சருக்கு கிடைக்கும்.

மறுபுறம் நகர திட்டமிடல் அதிகார சபைக்குள்ள அதிகாரங்கள், இந்த சட்டமூலம் ஊடாக பிரதமருக்கு கிடைக்கும் வாய்ப்பு உதயமாகியுள்ளது. அது மாத்திரமல்ல மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், மாகாண சபை அமைச்சர் குழு மற்றும் முதலமைச்சர் ஆகியோரை கருத்தில் கொள்ளாமல் அவர்களின் அதிகாரங்களை இந்த சட்டமூலம் ஊடாக தாம் பெற்றுக்கொள்வதற்கு பிரதமர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அவற்றுடன் மாத்திரம் நின்றுவிடாமல் ஜனாதிபதியிடம் இருக்கும் அதிகாரங்களையும் இந்த சட்டமூலம் ஊடாக தமது கைகளில் பிரதமர் எடுத்துள்ளார். மறுபுறம் பார்த்தால் ஜனாதிபதியை விஞ்சும் வகையில் சர்வாதிகாரங்களை கொண்ட சட்டமூலமாகவே இது அமைந்துள்ளது. சட்டப் பிரகாரங்களின் படி ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாது. வழக்கு விசாரணைகளில் விதிவிலக்கு இருப்பது ஜனாதிபதிக்கு மாத்திரமே. எனினும் இந்த சட்டமூலம் ஊடாக தமக்கும் தமக்கு கீழ் பணியாற்றும் அவரது நண்பர்களுக்கும் எதிராக வழக்கு தொடுக்க முடியாதவாறான சட்டத்தை தமது கையில் பிரதமர் எடுத்துள்ளார் என ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார். (செ-11)

## சிங்கள-தமிழ்...

ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம்மீதான வடக்குகிழக்குமாகாண மக்களின் விதந்துரைகள், எதிர்பார்ப்புக்கள் குறித்த பிரகடனத்தை வெளியிடும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களும் இன மத மொழி பேதம் இல்லாமல் ஒற்றுமையாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது நோக்கம்.

எமது நாட்டை போன்ற ஒரு நாடு உலகில் இல்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிடம் நான் ஒரு கேள்வியை வினவினேன் அதாவது எல்லா நாடுகளுக்கும் போயிருக்கிறீர்கள் பல தலைவர்களை சந்தித்துள்ளீர்கள் பல அனுபவம் உள்ள நீங்க உலகில் உள்ள நல்ல நாட்டை கூறுங்கள் என வினவினேன். அதற்கு அவர் உலகிலே மிகவும் புண்ணிய தேசம் எமது நாடு என கூறினார்

இப்படியொரு அருமையான நாட்டில் எமது மக்கள் பாதிப்படைய காரணம் என்ன என்றும் எங்கே தவறு உள்ளது என நினைத்த போது மனிதர்களுடைய மனங்களிலும்மூளையிலும் தான் குற்றம் உள்ளது.

நல்ல நடத்தைக்கு நல்ல சிந்தனை இருக்க வேண்டும். கெட்ட நடத்தைக்கு காரணம் கெட்ட எண்ணம். அபிவிருத்தியை மேற்கொள்வதை விட கடினமான விடயம் மக்கள் அனைவரும் ஒற்றுமையா இருப்பது. எனவே அவற்றை சரிசெய்ய வேண்டும்.

தமிழ் சிங்கள மக்கள் அனைவரும் இந்தியாவில் இருந்து தான் வந்தார்கள் சிங்கள, தமிழ் மக்கள் சகோதரங்கள். பௌத்த விகாரைகளுக்குள் எல்லாம் இந்து தெய்வங்கள் உள்ளன. சிங்கள, தமிழ் தெய்வங்கள் ஒற்றுமையாய் இருக்கிறார்கள். அவர்களை வழிபடச் செல்பவர்கள் தான் சண்டைபிடிக்கிறார்கள்.

எல்லோருக்கும் ஒரே நீதி இருக்கவேண்டும். இனமத மொழி பேதம் இல்லாமல் மனிதம் இருக்க வேண்டும். சிங்கள தமிழ் மக்கள் ஒன்றாக இருக்க வேண்டும் என எண்ணுகிறோம் அதற்காகவே உதவி செய்கிறோம்

கடந்த கால யுத்தத்தினால் வேதனை சோதனை கஸ்டத்தை தான் பெற்றுக்கொண்டோம் ஒன்றையும் நாம் பெற்றுக்கொள்ளவில்லை. தற்போது சாந்தி சமாதானம் எமது நாட்டிற்கு கிடைத்துள்ளது. அதை காப்பாற்றுவதற்கு அனைவரும் சேர்ந்து ஒற்றுமையாக வாழ வேண்டுமென ஆளுநர் கூரே மேலும் தெரிவித்தார். (செ-9)

## சட்டவிரோதமாக...

மாறும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

அச்சுவேலி பகுதியில் உள்ள வாகனம் பழுது பார்க்கும் கடையின் (கராச்) பின்புறமாக கஞ்சா இருப்பதாக 119 தொலைபேசிக்கு நேற்றுமுன்தினம் அறிவித்தல் கிடைத்துள்ளது. அதன் படி அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த கடையினை சோதனையிட்ட போது கடையின் பின்புறமாக பல ஆயுதப்பொருட்களை (வாள்கள், கைக்கோடரி) மீட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாகவும் அந்த ஆயுதங்களை செய்தவர்கள் தொடர்பாகவும் விசாரணையை மேற்கொண்ட பொலிஸார், ஏற்கனவே சாவகச்சேரி நீதவான் நிதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவரை அச்சுவேலி பொலிஸ் பகுதியில் உள்ள வெல்டிங் கடையில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்தவரை விசாரணை செய்தபோது, வல்வெட்டித்துறையை சேர்ந்த தமிழ் பொலிஸார் ஒருவர் தன்னிடம் வந்து வாள் செய்து தருமாறு கூறியதாகவும் பொலிஸார் கேட்டதனால் தான் குறித்த ஆயுதங்களை அவருக்கு செய்து கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து மேற்குறித்த வெல்டிங் கடை உரிமையாளரையும் கைது செய்த பொலிஸார், இருவரையும் நீதவானுடைய வாசஸ்தலத்தில் நேற்றைய தினம் முற்படுத்தினர்.

சம்பவத்தை விசாரணை செய்த நீதவான் கடை உரிமையாளரை பிணையில் விடுதலை செய்ததுடன் வாள் செய்து கொடுத்த நபரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் குறித்த பொலிஸ் உத்தியோகத்தருடைதும் சந்தேகநபருடையதுமான தொலைபேசி அழைப்பு விபரங்களை பெற்று விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டார்

இதே வேளை சம்பவத்துடன் தொடர்பு பட்டதாக கூறப்படும் அச்சுவேலி பொலிஸ் உத்தியோகத்தர் உடனடியாக காங்கேசன் துறை பொலிஸ்நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (செ-9)

# இந்திய மீனவர்களின் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

(கொழும்பு)

இலங்கை-நெடுந்தீவு கடற்பகுதியில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட எட்டு இந்திய மீனவர்களை நேற்று முன்தினம் மாலை இலங்கைக் கடற்படையினர் தாக்கியுள்ள னர்.

புதுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த எட்டு இந்திய மீனவர்களே மேற்படி சம்பவத்தில் தாக்கப்பட் டுள்ளனர் என "த பிரஸ் ட்ரஸ்ட் ஒப் இந்தியா" செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய மீனவர்களை துரத்து வதற்காக இரும்புக் கம்பிகள் மற்றும் வடங்களினால் இலங்கை கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என மீன் வளத் திணைக்களத்தின் இணைப் பணிப்பாளர் சேகர் தெரிவித்தார். காயமடைந்த மீனவர்கள் மணல்மேல்குடியில் உள்ள அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-3)

## 'வர்தா' புயல்...

மற்றும் கடற்படையினர் தவிர்க்குமாறு காலநிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 100 கிலோ மீற்றர் வரை வீசக்கூடும் என அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வட கிழக்கு கடற்பிரதேசங்களில் எதிர்வரும் 48 மணி நேரத்திற்கு கடும் மழை பொழியக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

வர்தா புயல் நேற்று நள்ளிரவு நாட்டின் வட கிழக்கின் காங்கேசன்துறையில் இருந்து சுமார் 600 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டிருந்தது.

இன்று அது இந்தியாவின் சென்னை பிரதேசத்தில் கரையை கடக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (செ-11)

## மனமுடைந்த...

படி, மேற்குறித்த பெண் அவுஸ்ரேலியாவில் வசிக்கின்ற ஆண் ஒருவரை கடந்த 2014 ஆம் ஆண்டு திருமணம் செய்துள்ளார். திருமணத்தின் பின் கணவர் வெளிநாடு சென்ற நிலையில் இவர் தனது மாமன் மாமியுடன் மல்லாகத்தில் உள்ள வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார். மாமனாருக்கும் குறித்த பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட சிறு வாக்குவாதத்தால் குறித்த பெண் தனது உடமைகள் அனைத்தையும் மாமனாரின் வீட்டில் விட்டுவிட்டு தனது தாயார் வீட்டுக்கு வந்து தங்கியுள்ளார்.

திருமணமாகி 2 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வெளிநாடு செல்வதற்கான ஆயத்தங்களை செய்வதற்காக முயற்சித்த பிரஸ்தாப பெண் தனது கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக மாமனாருடைய வீட்டுக்கு கடந்த 8, 9 ஆம் திகதிகளில் சென்றுள்ளார். எனினும் அங்கு மாமனார் கடவுச்சீட்டை தரமறுத்துள்ளார். இதனால் அப் பெண் மனமுடைந்து வீட்டிற்கு திரும்பி வந்துள்ளார்.

இந்தநிலையில் குறித்த பெண் நேற்றைய தினம் பிற்பகல் 3. 30 மணியளவில் தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது சடலத்தின் அருகில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கடிதத்தில் மாமனார் கடவுச்சீட்டை தர மறுத்துவிட்டார்கள் எனவும் தன்னை வாழ விடமாட்டார்கள்எனவும்இதனால்விரக்தியடைந்து தற்கொலை செய்து கொள்வதாக மேற்படி யுவதி எழுதி வைத்துள்ளார். குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

**PERSONAL CLASS**
Arumugam Lane, Kalviyankadu
**A/L ACCOUNTING**
2018 - புதிய பிரிவு
2017 -கிரயக்கணக்கீடு
**O/L AND GRADE 10**
Business Studies & Accounting
English Medeium & Timil Medeium
By:-A.KALAICHELVAN
ஆரம்பம்:-12.12.2016 திங்கள்
தொடர்புகட்கு:-0776944543
(6909)


## துப்பாக்கியுடன்...

பொலிசாரால் நேற்று மாலை 5.00 மணிய ளவில் கைது செய்யப்பட்டுள்ளார்

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை இன்று நீதிமன்றில் நிறுத்தவுள்ளதாக தெரிவித்த மாங்குளம் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-281)

## முல்லையின் மூத்த...

முல்லைத்தீவு வட்டுவாகல் மண்ணில் சுப்பையாப்பா என்று எல்லோரும் அன்பாக அழைக்கும் சிங்காரப்பிள்ளை-சுப்பிரமணி யம் (வயது 105) என்ற முதியவரே காலமான வராவார். அண்மையில் இவருக்கு பாரா ட்டு விழா விழாவும் கௌரவிப்பும் வட்டுவாகல் சப்தகன்னிமார் இளைஞர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(செ-281)


**வேலைவாய்ப்பு**
கொடிகாமத்தில் இயங்கும் புத்தக நிலையம் ஒன்றில் வேலை செய்யக்கூடிய வேலை யாட்கள் (ஆண்/பெண்)தேவை.
(6909) தொடர்பு: 0763622747



யாழ்.வடமராட்சியில் உள்ள பிரபல அச்சகம் ஒன்றிற்கு Type setting (ரைப்செற்றிங்) தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்புகளிற்கு:-
(பி-6674) 0778329477, 0212260055

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



**வாழ்த்துகின்றோம்**
எங்கள் ஆச்சிக்கு இன்று (12.12.2016) அகவை 90 பூர்த்தி
**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**
(இளைப்பாறிய ஆசிரியர்-
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)



எங்கள் அன்புக்குரிய ஆச்சிக்கு இதயபூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக!

246, 4A, கோவில் வீதி,
நல்லூர்.
அம்பாள் அகம்
மருதனார்மடம், இணுவில்.

பேரப்பிள்ளைகள்,
பீட்டப் பிள்ளைகள்.
(6908)



அனைத்து நாடுகளுக்குமான
விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243 (C-6600)
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS



வெளிநாடுகளுக்கான
துரித பொதிகள் சேவை
பண்டிகைக் காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட
021 221 5656
070 330 5500
அன்னா & கோ
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்



**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை



365
(Express Service)
72
(Door to Door Service)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
Call 021 222 3536
DHL aramex FedEx SKYNET
(பி-6578)



**நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு நாம் மகிழ்ச்சியுடன்...**

எமக்கு ஆதரவளித்த வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் ஆகிய நீங்களும் எங்களுடன் சேர்ந்து மகிழ்ந்திட....

**அனைவருக்கும் சிறப்புத் தள்ளுபடி**

**BANNER (பனர்)**

ஒரு சதுர அடி **35/-**

போட்டோ குவாலிட்டி பனர் பிறிண்டிங் விலை குறைவால் தரம் குறைவு என்று நினைக்கதேவையில்லை

தரம் மற்றும் சேவையில் என்றும் முதலிடம்

**ID CARDS** One Side / Two Side




**VISITING CARD** One Side / Two Side




**VOUCHERS**




**MUG PRINTING**




**DURO FRAME**




**CERTIFICATE**




ஒருமுறை வாருங்கள்
வித்தியாசத்தை உணர்வீர்கள்
தரமான வடிவமைப்பு
கண்ணியமான கருசனை

**Smart Digital Printing**
(பி-6671)

#255, Stanley Road, Jaffna. Tel : 021 221 2958, Mob : 07 1650 1650, e.mail : smartjaffna@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.